
www.tamilarangam.net

# சமர்

சமர்-31




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*59ம் பக்க தொடர்ச்சி*

ஒருபுறம் இருக்க, இப்படியான அணுகுமுறை எம்மண்ணில் தொடரும் வன்முறை வக்கிரத்தின் ஒரு பகுதிதான். சர்வ சாதாரணமாகவே சமுதாய அக்கறையை சமுதாயப் புரட்சியூடாக மாற்றுவது என்ற வழிகளில் வெளிப்படுத்தும் போது, மண்டை கழன்று போனதாக வியாக்கியானப்படுத்தும் நிகழ்வுகளை நாம் நாள்தோறும் சந்திக்கின்றோம். இந்த சமுதாயத்தின் நுகர்வு வக்கிரம், வன்முறை... மேல் எழுப்பும் கேள்விகளை, ஒரு மனநோயாளிக்குரிய வகையில் அடையாளப்படுத்தி தமது வக்கிரங்களை பாதுகாப்பது இந்த சமுதாயத்தின் பண்பாகவுள்ளது. 1985ம் ஆண்டு நான் பல்கலைக்கழகத்தில் ராக்கிங்கை எதிர்த்து துண்டுப்பிரசுரம் ஒன்றை விநியோகித்த போது, பல்கலைக்கழக மாணவர்கள் "பல்கலைக்கழகத்தில் ஒரு மனநோயாளி" என்று என்னை குறிப்பிட்டு துண்டுப்பிரசுரம் போட்டதுடன், அதை அன்றைய யாழ் பத்திரிகையிலும் மறுபிரசுரமாக்கினர்.சமுதாயம் தொடர்பானதும் வாழ்வியல் விடையங்களை நாம் முன்வைக்கின்ற போது, அதை கேவலமாக கருதும் தன்மை காணப்படுகின்றது. இவற்றை புறக்கணிப்பது, அவதூறு செய்வது இந்த சமுதாயத்தின் வன்முறை கொண்ட ஜனநாயக விரோத பண்பாகவுள்ளது. இணைய கடிதம் மூலம் ஒரு செய்தியை நாம் அனுப்பும் போது, அதை தடுக்கும் வழிகள் சொந்தத்தில் இருந்த போதும், அதை அனுப்ப வேண்டாம் என்ற வேண்டுகோளும், மறு தளத்தில் வன்முறை ரீதியாக மொழியில் பதில் கிடைக்கின்றது. ஆனால் சமுதாயத்தில் நாம் காணும் இடமெல்லாம், எம்மை நோக்கி பல்வேறு விடையங்கள் திணிக்கப்படும் போது, இந்த நபர்கள் அதை பாதுகாக்க விரும்பும் போதே எதிர்வினைகள் எம்மை நோக்கி வருகின்றது. தொலைக்காட்சி விளம்பரம் முதல் காட்சிகள் வரை, தமிழ் சினிமாவில் பாலியல் வக்கிர முதல் எதார்த்ததுக்கு புறம்பான காதல் கட்சிகள், வீதியில் நடக்கும் போது வீதி எங்கும் எம்மை சுண்டி இழுக்கும் விளம்பரங்கள், தாபல் பெட்டியில் வந்து குவியும் விளம்பரங்கள் என்று, வாழ்வின் அனைத்து அம்சத்திலும் எம்மை நோக்கி பல விடையங்கள் திணிக்கப்படுகின்றது. இதில் பெரும்பாலானவையை நாம் ஜிரணித்து அதன் பிரதியாகிவிடும் போது, இதைக் கேள்வி எழுப்பி வெளிவரும் ஒரு சிலவற்றை இழிவுபடுத்தும் வடிவத்தையே நாம் மேலுள்ள கடிதத்தின் வழியாக காண்கின்றோம்.

## மக்களை எய்தும், மிரட்டியும் வாழும் ரவுடித்தனம்


கோகுலதாஸ்

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதியாக சென்றோர் வாழ்வு, பல சோகங்களைக் கொண்டவை. உள்ளூர் அதிகார வர்க்கமும் பொலிஸ்சும், துரோகக் குழுக்களின் முன்னாள் உறுபினர்களும் இனைந்து மக்களுக்கு எதிராக நடத்தும் வக்கிரம், பல வகையானது. தமது ரவுத்தனத்துக்கு எதிரானவர்களை தாக்குவது முதல் படுகொலை செய்வது வரை, இவர்களின் கைவந்த கலையாகும்.திருச்சி கொட்டப்பட்டு அகதி முகமைச் சோந்த கோகுலதாஸ், 13.1.2002 அன்று 15 ரவடிகளால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு, அகதி முகாங்களின் நிர்கதியைக் காட்டுகின்றது. ஈ.பி.ஆர்.எல்.எப் முன்னாள் உறுப்பினர்கள் பொலிஸ் துணையுடனேயே, இந்த கொலை வெறியாட்டத்தை நடத்தினர். சாதாரண பிரச்சனையில் பழிக்குபழி வாங்கும் படுகொலை வக்கிரங்கள் மூலம், மக்களை மிரட்டுகின்றது இந்த ரவுடிக் கும்பல். படுகொலை செய்ய முன்பு முகத்தைச் சிதைத்ததுடன், படுகொலை செய்து திருச்சி தென்னூர் உய்யகொண்டான் ஆற்றில் எறிந்துவிட்டே சென்றனர். இந்த கொலைகார கும்பல் கியு பிரிவு, உளவுத்துறை, பொலிஸ் ஆகியோருடன் இனைந்து, நக்கி பிழைத்த படி, முகாமில் உள்ள 350 குடும்பங்களையும் மிரட்டி வருகின்றனர். பல்வேறு கொலை, மிரட்டல் வழக்குகளில் சம்பந்தப்பட்டதுடன், பொறுக்கி வாழும் ரவுடிக் கும்பலாகவே செயற்படுகின்றனர். இந்த கொலைக்கு எதிராக மக்கள் திரண்டு போராடியதுடன், இந்த கொலைகார ரவடிக் கும்பலை தமது பிரதேசத்தில் இருந்து அகற்றக் கோரியும் போராடி வருகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாசிசத்தின் வளர்ச்சிக்கும் மூலதனத்துக்கும் உள்ள ஜனநாயக பிணைப்பு உலகளாவியது

அண்மையில் பிரான்சில் நடந்த ஜனாதிபதிக்கான தேர்தலில், நாசிகள் இரண்டாம் சுற்றுக்கு தெரிவானார்கள். அதை அடுத்து பிரான்ஸ் மட்டுமல்ல, உலகமே அதிர்ச்சிக்குள்ளாகியது. இந்த அதிர்வைத் தொடர்ந்து இதற்கெதிரான தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்கள், ஆளும் வர்க்கங்களையே கிலியூட்டின. பிரான்சின் அரசியல் கட்சிகள் அனைத்தும் தடுமாறின. உள் சிதைவுகள் முதல் கட்சிகளின் தலைவிதிகளே கேள்விக்குள்ளாகியது. லட்சக்கணக்கான மக்கள் புதிதாக அரசியல் உணர்வு பெற்றனர், அரசியல் ரீதியான புதிய தேடுதல் தீவிரமாகியுள்ளது. எப்படி நாசிகள் ஆட்சிக்கு வரமுடிகின்றது என்பது தீவிர தேடுதலுக்குள்ளாகியுள்ளது. ஏகாதிபத்திய அதிகாரவர்க்கங்கள் நாசிசம் பற்றி மூடிமறைத்து வெளியிடும் திரிபுகளுக்கு வெளியில், வரலாற்றின் உண்மைத் தன்மை தேடுவது அதிகரித்துள்ளது.

துரோகத்தை அரசியலாக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அத்திம காலத்தில் சேடமிளுக்கின்றது. வலதுக்கும் இடதுக்கும் இடையில் வேறுபாடற்ற உலகமயமாதல் கொள்கை, அரசியல் ரீதியாக ஒரே குடையின் கீழ், பெயருக்கு வெளியில் சங்கமாகின்றனர். தீவிரமான இடது தன்மையும் வலது தன்மையும் நேர் எதிர்த் திசைகளில், என்றுமில்லாத வகையில் வளர்ச்சி பெறுகின்றது. ஒரு புரட்சிகர சமூக கண்ணோட்டமும், தீவிர பாசிச வலது சமூக கண்ணோட்டமும் ஐரோப்பா எங்கும் சீராக வளர்ச்சி பெறுகின்றது. நாசிச பாசிசத்துக்கு எதிரான அரசியல் கண்ணோட்டம், நடுநிலை என்பதை தகர்த்து ஒரு உற்சாகமான அரசியல் எழுச்சியாக மாறியது, மாறிவருகின்றது. பிரான்சின் சிறு நகரங்கள் கூட நாசிசத்துக்கு எதிரான தன்னெழுச்சியான அலை அலையான போராட்டங்களாக எழுச்சி பெற்றன. மக்கள் திரள் நடவடிக்கை ஒரு சமூக நடைமுறையாகியுள்ளது. மக்களின் சமூக நடைமுறை சார்ந்த உணர்வுபூர்வமான உணர்ச்சி, வரலாற்றில் மீண்டும் ஒருமுறை தன்னெழுச்சியாக எழுந்ததன் மூலம், உலகுக்கு மக்களே வரலாற்றைப் படைப்பவர்கள் என்பதை பாறைசாற்றியுள்ளனர்.

மறுதளத்தில் தீவிர வலது நாசிக் கட்சி தனது கொள்கையை தெளிவாக முன்வைத்து அரசியல் மயமாக்குகின்றது. தேசிய சோசலிசம் என்ற கிட்லரின் அதே கொள்கையை பூச்சுகளுடன் மீளவும் முன்வைக்கின்றனர். வேலையற்றவர்களை கவர்ந்தும், தேசிய சிறு உற்பத்தியளர்களின் தேசிய சுரண்டல் கனவுகளை பிரதிபலித்தும், தேசங்கடந்த பன்நாட்டு நிறுவனங்களின் உலகை சூறையாடிச் சுரண்டும் உலகமயமாதலும் தெளிவான பாதையை காட்டுகின்றனர். பிரான்சின் தேசிய வெள்ளையின பாசிச விரிவாக்க நலன்களை முதன்மைப்படுத்தி உலகளாவிய ஆதிக்க சக்தியாக திகழ நம்பிக்கை ஊட்டுகின்றனர்.

பிரன்சில் உள்ள வெளிநாட்டவர்களை வெளியேற்றுவதன் மூலம் அல்லது நாசிய பாசிச படுகொலைகள் மூலம், வேலையில்லாத வெள்ளையினத்தவருக்கு வேலை வழங்க நடைமுறைத் தீர்வை முன்வைக்கின்றனர். வேலை இல்லாத வெள்ளையினத்தவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமன் வெளிநாட்டவர்கள் என்ற பாசிச சமன்பாட்டை, வெள்ளையின சுவர்களில் ஒட்டி இனவெறி நாசிசத்தை சமூக மயமாக்கின்றனர். இவர்களே அண்மையில் கம்யூனிசம் சமன் 8 கோடி மக்களின் உயிர் என்ற அவதூற்றையும், அதே சுவர்களில் ஒட்டியவர்களே. நாசிசம் மூலதனத்தின் உற்பத்தி என்பதையும், பாசிசம் உழைக்கும் மக்களை அடக்கியாளும் ஒரு ஆட்சி வடிவம் என்பதையும் வரலாற்றில் மீண்டும் ஒருமுறை கூறிச் சென்றனர்.

ஆனால் உண்மை நிலை என்ன? ஜெர்மனியில் வேலை செய்பவர்களில் வெளிநாட்டடைச் சேர்ந்தவர்கள் 25 லட்சமாகவும். உழைக்கும் மக்கள் தொகையில் 9.1 சதவீதமாகவும் உள்ளனர். இது பிரான்சில் 15 லட்சமாகவும் உழைக்கும் மக்களில் 6.1 சதவீதமாகவும் உள்ளனர். ஸ்பனியோலில் 1.91 லட்சமாகவும் உழைக்கும் மக்களில் 1.2 சதவீதமாகவும் உள்ளனர். வேலையற்ற வெளிநாட்டவர்கள் ஜெர்மனியில 15.9 சதவீதமாகவும், பிரான்சில் 22 சதவீதமாகவும் இருக்க, மற்றவர்கள் ஐரோப்பா அளவில் 8.5 சதவீதமாக உள்ளனர். இன, நிற வர்க்க ஒழுக்குமுறை வெளிநாட்டவரின் உழைப்பின் ஆற்றலைக் கூட பிளந்தே வைத்துள்ளது.

ஆனால் நாசிகள் வெளி நாட்டவரை ஒழித்துக்கட்டுவதன் மூலம், அவர்களுக்கு கிடைக்கும் வேலையையும், வீட்டு வசதியையும், சமூக உதவிகளையும் பறித்து, அதை வெள்ளையினத்தவருக்கு வழங்க நடைமுறை ரீதியாகவே உத்தரவாதம் வழங்குகின்றனர். நாசிகள் கைப்பற்றிய பிரதேசங்களில் நகர ஆட்சிகளில், இது போன்று வெள்ளையினத்தவருக்கான சிறப்பு சலுகைகளை வழங்குகின்றனர். உதாரணமாக வெள்ளையினக் குழந்தை பிறந்தால், 5000 பிராங் பணம் அன்பளிப்பு என்ற நடைமுறை நாசிச சமூகமயமாக்கலை அமுல் செய்யப்பட்டது. இப்படி பல.

வெளிநாட்டைச் சேர்ந்த பெற்றோருக்கு பிரான்சில் பிறந்த சிறுபான்மை இளையர்களால் நடத்தப்படும், சிறுவழிப்பறி கொள்ளைகளும் வன்முறைகளையும் வெளிநாட்டவர்கள் மேலான நாசிசத்தை சமூகமயமாக்கும் பொது நடவடிக்கை மூலம், தடுக்க உத்தரவாதம் வழங்குகின்றனர். உலகமயமாதலையும், ஐரோப்பிய ஒன்றிணைவையும் எதிர்க்கும் நாசி கட்சி, தேசிய சிறு உற்பத்தியளாருக்கு நம்பிக்கை ஊட்டுகின்றனர். இதன் மூலம் பாரம்பரிய கிறிஸ்துவ பண்பாட்டு மத சக்திகளை அணிதிரட்ட முடிகின்றது. உலகமயமாகும் பண்பாட்டுக்கு பதில், நிலப்பிரபுத்துவ கிறிஸ்துவ பண்பாட்டை கோரும் மத அடிப்படைவாத பிரிவுகளின் ஆதரவைப் பெறமுடிகின்றது. மதத்தை பாதுகாப்பது என்ற பராம்பரிய பாசிச தேசிய அடிப்படைவாதத்தை முன்வைப்பதன் மூலம், மதத்தின் பின்னுள்ள கணிசமான மக்களின் ஆதரவை திரட்டமுடிகின்றது. ஐரோப்பிய மையவாதம் சார்ந்த உலகமயமாதலின் கீழ், அமெரிக்காவுக்கு நிகரான உலக ஆதிக்க சக்தியாக இல்லை என்பதால் ஐரோப்பிய ஒன்றிணைவையும் உலகமயமாதலையும் எதிர்க்கின்றனர். இதன் மூலம் உலகமயமாதலை எதிர்க்கும் சக்திகளின் ஆதரவை பெறுகின்றனர். உலகமயமாதலில் பிரான்சின் அல்லது ஐரோப்பாவின் நலன்களை உறுதிசெய்யும், உலகயுத்தத்தை நடத்தும் தாக்கும் நிலைக்கு தமது நாசிச அடிப்படைக் கோட்பாட்டை சமூகமயமாக்கின்றனர். தாம் ஆட்சிக்கு வந்தால் பிரன்சினதும், ஐரோப்பாவினதும் உலக ஆதிக்கத்தினை நிலை நிறுத்துவோம் என்று கூறுகின்றனர். ஐரோப்பா எங்கும் சீராக வளர்ச்சி பெறும் நாசி கட்சிகளின் ஒன்றிணைந்த ஐரோப்பிய ஆதிக்கத்தை, உலகில் நிறுவும் நடைமுறை தீர்வை வழங்குகின்றனர். நாசிக்கட்சி தெளிவாக பல்துறை சார்ந்து வைக்கும் தீர்வு, கவர்ச்சிகரமானதாக பாசிச நாசிச வழிகளில் நடைமுறை சார்ந்தாக இனம் காணப்படுவது அதிகரிக்கின்றது. இதற்கு நிகாராக பிரான்சில் தெளிவான நடைமுறை தீர்வு சார்ந்த, தெளிவான பதில்களைக் கொண்ட கட்சிகள் இல்லை. ஐரோப்பா எங்கும் நாசிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீராக கோட்பாட்ட ரீதியாக வளர்ச்சி பெறுகின்றனர். ஐரோப்பா எங்கும் கிறிஸ்துவ மற்றும் வலதுசாரி கூட்டு அரசுகளில் நாசிக் கட்சிகள் பங்கேற்கின்றன. இதன் மூலம் வலதுசாரிக் கட்சிகளின் அரசியல் சக்திகளை, தம் பக்கத்துக்கு படிப்படியாக உள்வாங்குகின்றனர். பெரும்பான்மை பலம் இன்றி, மக்களின் ஆதாரவு இன்றி வலதுசாரிகளின் துணையுடன் முழு ஆட்சியையும் கைப்பற்றும் அளவுக்கு, நடைமுறைவாதிகளாகவும் கொள்கைவாதிகளாகவும் உள்ளனர். இதைத் தான் அன்று நாசிச பாசிட்டான கிட்லர் முதல் இன்று உலக முழுக்க பரந்த பாசிச ஆட்சிகளில் காணமுடிக்கின்றது. நாசிச பாசிச ஆட்சி என்பது மீண்டும் ஐரோப்பாவில் ஏற்படும் அளவுக்கு நிலைமை முதிர்ந்து வருகின்றது.

தனிமனித வாதமும், வெள்ளை நிறைவெறியும், கிறிஸ்துவ மத அடிப்படைவாதமும் நாசிக்கட்சியின் தீவிர உறுப்பினரை உருவாக்கின்றது. இது உலகைச் சூறையாடும் மூலதனத்தின் நெருக்கடியுடன், அதை மீட்டு எடுக்கும் பாசிச நடைமுறை தீர்வுடன் ஆட்சிக்கு வரத்துடிக்கின்றது. சிறு உற்பத்தியாளர்கள் முதல் தேசம் கடந்த பன்நாட்டு மூலதனத்தையும் கவருகின்றது. வேலையற்றவர்களையும், தொழிலாளர்களையும் விட்டுவிடமால் உள்வாங்கும் திறணைப் பெறுகின்றது. நாசிக் கட்சி ஐரோப்பா எங்கும் ஒரேவிதமாக ஒரே கொள்கை அடிப்படையில் வளர்ச்சி பெறுகின்றது. கிட்லர் ஐரோப்பவை ஆக்கிரமித்த வழிக்கு மாறாக ஜனநாயகத்தின் துணையுடன் ஐரோப்பாவில் ஒன்றிணைந்த நாசி ஆட்சியை கைப்பற்றவும், உலகை ஆக்கிரமிக்கும் கிட்டலரின் படிநிலை வடிவத்தில் வேகமாக வளர்ச்சி பெறுகின்றது. அமெரிக்காவின் உலக ஆதிக்கத்தை முறியடித்து, அதை தனது ஆதிக்க கோட்டையாக்க மார்பு தட்டுகின்றது. உலக மக்களின் புதிய எதிரியாக, மூன்றாவது உலகை யுத்தத்துக்கு தாக்கும் நிலைக்குள் கொண்டு செல்லும் அளவுக்கு நாசிக் கட்சியின் வளர்ச்சி காணப்படுகின்றது.

நாசிகளின் வளர்ச்சி தற்செயலானவையல்ல. சுரண்டும் ஜனநாயக அமைப்பில் நிலவும் ஜனநாயக வடிவத்தின் மூலம் தான் நாசிகள் ஆட்சிக்கு வருவார்கள். உழைக்கும் மக்களை தொடர்ந்தும் நிலவும் போலி ஜனநாயக வடிவில் ஆளமுடியாத ஒரு நிலையிலேயே, நாசிகளின் பாசிச ஆட்சி மூலதனத்தின் ஒரு நெம்பாகின்றது. கிட்டலரும் அவனுடைய நாசிக் கட்சியும் கூட ஜனநாயக வடிவத்தின் ஊடாகவே ஆட்சிக்கு வந்தவர்கள். நிலவும் ஜனநாயகம் என்பது மக்களை பிளந்து அதில் தான் உயிர்வாழ்கின்றது. அதாவது பராளுமன்ற ஜனநாயகமான சுரண்டும் ஆட்சி அமைப்பும் என்பது, மக்களை ஜனநாயக விரோதமாக பிளந்து காட்டுவதன் மூலம் மக்களை மக்கள் சூறையாடுவதை நியாப்படுத்துவதாகும். இதற்கு வெளியில் ஜனநாயகம் என்பதற்கு எந்த அர்த்தமும் கிடையாது. அனைவருக்கும் ஜனநாயகம் இருப்பின், ஜனநாயகம் என்பது அர்த்தம் இழந்துவிடும். ஜனநாயகம் ஒரு பகுதிக்கு மறுக்கப்படும் எல்லா நிலையிலும் தான், ஜனநாயகம் செழித்து வளருகின்றது. நாசிகள் கூட இந்த மனித விரோத ஜனநயாக பிளவுகளில் தான் உருவாகின்றனர். இதற்கு நிலவும் ஜனநாயக அமைப்பு அச்சாணியாக அத்திவாரமாகவும் உள்ளது. மக்களை வர்க்கம், இனம், நிறம், மதம் பண்பாடு, கலாச்சாரம் என்று எதோ ஒன்றில் அல்லது பலதில் மனிதப்பிளவை உருவாக்கி, அதை ஜனநாயக பூர்வமானதாக்கிய ஜனநாயக அமைப்பில் தான், நாசிசம் தனது பாசிசத்தை மக்களை மேல் நிறுவுகின்றனர். அதாவது இருக்கின்ற ஜனநாயக பிளவுகளை தீவிரமாக்குவதன் மூலம், மூலதனத்தையும் அதன் பண்பாட்டு கூறுகளையும் பாசிச வழிகளில் அனைத்து மக்கள் மேலும் திணிக்க முயல்கின்றனர். சமூக நெருக்கடிகளை ஆழமாக்கும் நாசிசம், ஜனநாயக பிளவுக்குள் வடிகாலகின்றனர். நாசிச பாசிச கட்சிகள் எதை கண்ணியாக பிடித்து அதில் முன்னேறுகின்றனர் எனப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1.வெளிநாட்டவரின் எண்ணிக்கைக்கு சமனாக வேலையற்றவர்கள் உள்ளனர் என்பதை புள்ளிவிபர ரீதியாக காட்டி நிறுவமுயல்கின்றனர். வேலைவாய்ப்பு அனைத்தும் பிரஞ்சுக்காரருக்கே அதாவது வெள்ளையினத்தவருக்கே என்பதை உறுதி செய்து வேலைவாய்ப்பை நாசி மயமாக்கின்றனர்.

2.வெளிநாட்டவர்களை சுரண்டும் மூலதனம் வழங்கும் குறைந்த கூலியை காட்டி, இதனால் பிரஞ்சு மக்களின் கூலியைக் குறைக்கின்றது என்பதை நிறுவுவது. இதனால் பிரஞ்சுக்காரரின் வேலை இழப்புக்கு வெளிநாட்டவரின் குறைந்த கூலியே காரணம் எனக்காட்டி, வெளிநாட்டவருக்கு எதிரான இனத்துவசத்தை சமூகமயமாக்கின்றனர். அத்துடன் வெளிநாட்டவர்கள் எதையும் செய்யத் தயாரான அடிமைத் தன்மையே, வெள்ளையினத்தவரின் இழிநிலைக்கு காரணம் என நிறுவ முயல்கின்றனர். ஆனால் குறைந்த கூலியை வழங்கும் மூலதனத்தையும், இழிந்தநிலைக்கு உள்ளாக்கி அடிமை வேலை வாங்கும் மூலதனத்தை பாதுகாக்கின்றனர். இதன் மூலம் ஒட்டு மொத்த சமூகத்தையும் இழிநிலைக்கு கொண்டுவரும் உறுதிமொழியை பெற்று மூலதனம் பாசிசமாகின்றது.

3.வீதி வழிபறி கொள்ளைகள் மற்றும் வன்முறைகள் வெளிநாட்டவரால் தான் நடத்தப்படுகின்றது என நிறுவி, சமூகத்தையே வெளிநாட்டவருக்கு எதிரான கண்காணிப்பை நாசிசமயமாக்கின்றனர்.

4.சட்டத்துக்கு புறம்பாக வெளிநாட்டவர் களவாக (கறுப்பாக) வேலை செய்வதாக நிறுவ முயல்கின்றனர். இதன் மூலம் வெள்ளையினத்தவரின் வேலை பறிக்கப்படுவதாகவும், வெள்ளையினம் இழிவுறுவதாக காட்டி உழைக்கும் வெளிநாட்டவரை இழிவாக்கி உழைக்கும் மக்களை நாசிமயமாக்கின்றனர்.

5.வெளிநாட்டவர்களே போதைவஸ்த்துகளை கடத்துபவர்களாகவும், விற்பவர்களாகவும் உள்ளனர் என நிறுவமுயன்று, வெளிநாட்டவர்களை சமூக விரோத குற்றவாளிகளாக இனம் காணும் நாசிசமயமாக்கல் நிகழ்கின்றது.

6.வெளிநாட்டவர்களின் பண்பாடுகள், கலாச்சாரங்கள் பிரஞ்சு பண்பாட்டுக்கும் கலாச்சாரத்துக்கும் எதிரானது என்று கூறி, கலாச்சாரத்தை நாசிசமயமாக்கின்றனர்.

7.வெளிநாட்டவர்கள் அதிக பிள்ளையை பெற்று அதிக சமூக உதவிகளையும், சலுகைகளை பெறுவதாக நிறுவமுயல்கின்றனர். வெளிநாட்டவருக்கான சமூக உதவிகளை நிறுத்தி, அதை பிரஞ்சுக்காரருக்கு வழங்க உத்தரவாதம் அளிக்கின்றனர். அந்த வகையில் மருத்துவம், குழந்தை வளர்ப்புக்கான சமூக உதவி, வீட்டு வாடகைக்கான உதவி என்று அனைத்தும் வெளி நாட்டவருக்கு மறுக்கப்படும் என்று பிரகடனம் செய்கின்றனர். இந்த உதவி கூட எமது கூலியில் இருந்து எடுக்கப்படுகின்றது, என்பதை சொல்ல முடியாத கட்சிகள் உள்ள சமூகத்தில் தான் நாசிகளின் வளர்ச்சி நிகழ்கின்றது.

8.சர்வதேச பயங்கரவாதத்தில் வெளிநாட்டவர்கள் ஈடுபடுவதாக காட்டி, சர்வதேச ரீதியாகவே நாசிசத்தை ஆயுதபாணியாகின்றனர்.

9.வெளிநாட்டவர்கள் உழைக்கும் பணத்தையும், சமூக உதவிகளையும் வெளிநாட்டுக்கு கடத்துவதால், தேசிய செல்வம் வெளியேறுவதாக நிறுவி நாசித்தை தேசியமயமாக்கின்றனர்.

10.தேசிய உற்பத்திகளுக்கு பாதுகாப்புடன் கூடிய உலகமயமாகும் சந்தையை விரிவாக்கும் பொருளாதாரம் என்ற கொள்கை மூலம், மூலதனத்தை நாசிமயமாக்கின்றனர்.

12.சட்டவிதிகளை கடுமையாக்கி சமூக ஒழுங்கை இறுக்கமாக்கி தனிப்பட்டவர்களின் நலனை பாதுகாக்கும் உத்தரவாதத்தம் சட்ட ஒழுங்கை நாசிமயமாக்கின்றனர். இதன் மூலம் தனிப்பட்டவன் சுதந்திரமாக வாழவும், அதிக பாதுகாப்புடன் கூடிய நாசிய வாழ்வை முன்வைக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படி பற்பல கோசங்களையும் விளக்கவுரைகளையும் உள்ளடக்கிய, நாசிசத்தை அரசியல் மயமாக்கும் வழியில் சமூக மயமாக்கின்றனர். இதன் மூலம் கொள்கை அடிப்படையில் ஐரோப்பா எங்கும் சீராக வளர்ச்சி பெற்று வருகின்றனர். மாற்று அரசியல் தீர்வற்ற சமூக அமைப்பில், இக் கோசங்கள் கவர்ச்சிகரமாகின்றது. இதன் பால் கவரப்படுவது அதிகரிக்கின்றது. ஐரோப்பிய ஜனநாயகத் தேர்தல்களின் மையக் கோசத்தை நாசிகள் தெரிவு செய்வதுடன், அதையே ஐரோப்பியவின் சமூகப் பிரச்சனையாக மாற்றிவிடுகின்றனர். அனைத்துக் கட்சிகளும் நாசிகளின் கோசத்தின் பின்பாகவே, தமது அரசியல் விளக்கவுரைகளை வால்பிடித்தே வாந்தியெடுக்கின்றனர். வலது இடது வேறுபாடின்றி நாசிகளின் பின்பாக வால் பிடிப்பதுடன், அந்த சகதிக்குள் ஐரோப்பிய சமூகத்தை மந்தைகளாக்கின்றனர்.

சமூகங்களைப் பிளக்கும் நாசிகளின் (இவை ஜனநாயகத்தில் உயிர்வாழ்கின்றது) கோசங்களினால் அதிகரிக்கும் செல்வாக்கை தடுக்க, அதன் பின்னால வால் பிடிக்கும் வலது இடதுகள் நாசிகளின் வேலைத் திட்டத்தையே சிரமேற்று அமுல் செய்கின்றனர். வெளிநாட்டவருக்கு எதிரான கோசம் ஜனநாயகமாகி, ஐரோப்பா எங்கும் ஒரே அலை வீச்சாக உள்ளது. நாசிகள் சங்கை ஊத, மற்றைய கட்சிகள் தாளம் போட்ட படி வெளிநாட்டவர் மீதான வெறுப்பை உமிழ்கின்றனர். வெளிநாட்டவருக்கு எதிரான கடுமையான மனித விரோத சட்டங்களை ஜனநாயகமாக்கின்றனர். அதிகரித்த பொலிஸ் கண்காணிப்பு, எல்லை பாதுகாப்பு, எல்லைக்கு வேலியிடல், அரசியல் புகலிடச் சட்டத்தை மாற்றுதல் அல்லது இறுக்குதல், வெளிநாட்டவருக்கு வேறுபட்ட சட்டவிதிகள் என்று, ஏராளமான மனித விரோத விசேட சட்டங்களை ஐரோப்பா எங்கும் நிறைவேற்றப்பட்டு ஜனநாயகப்படுத்துகின்றனர். வெளிநாட்டவருக்கு எதிரான சட்டங்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் கடுமையாகி வருகின்றது. நாசிகளின் வேலைத் திட்டத்தை ஜனநாயகப்படுத்தி அமுல் செய்வதன் மூலம், ஜனநாயக பூர்வமாகவே நாசிகளை முறியடிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை ஐரோப்பிய கட்சிகள் எடுக்கின்றன. வெளிநாட்டவருக்கு எதிரான கடும் சட்டங்கள் முன்பைவிட மேலும் அதிகமாக, நாள் தோறும் இயற்றப்படுகின்றன. பண்பாட்டு கலாச்சாரக் கூறுகள் வெளிநாட்டவருக்கு எதிராக சமூக மயமாக்கின்றனர். இன்று ஐரோப்பிய ஜனநாயக பராளுமன்றங்கள் செய்வதெல்லாம், வெளிநாட்டவருக்கு எதிராக நாசிக்கட்சியின் பாசிச சர்வாதிகார சட்டவிதிக்கு பதில், அதையே ஜனநாயக சட்டவிதியாக கொண்டு வந்து ஒடுக்குவதன் மூலம் இரண்டு பிரதான விடையத்தை கையாளுகின்றனர்.

1.நாசிக்கட்சியின் செல்வாக்கை கட்டுப்படுத்தி அதனுடன் கோட்பாட்டு ரீதியாக நடைமுறை ரீதியாக சங்கமிக்கின்றனர்.

2.வெள்ளை இனநிற ஏகாதிபத்திய ஆதிக்க வெறியை ஜனநாயகப்படுத்தி வெளிநாட்டவர்களை ஒடுக்குவதில் ஒரு சமூக மயமாக்கலை செய்கின்றனர்.

சமூக விரோத நடவடிக்கைகள் என்றால் அது வெளிநாட்டவர்களின் நடத்தைகளில் ஒன்றாகவும், அவர்களின் பண்பாட்டின் கூறாகவும் காட்டுவதில் கட்சிகளுக்கு இடையில் எந்த வேறுபாடில்லை. அதைச் சொல்லும் விதத்தில் மட்டுமே தம்மை வேறுபடுத்துகின்றனர். பிரான்சின் தேர்த்தில் களத்தில் வெளிநாட்டவர்கள் பற்றிய பிரச்சசைனையும், வெளிநாட்டவர்களின் வன்முறை பற்றிய பிரச்சனையுமே மையமான விவாதப் பொருளாகியது. இதை வலது இடது கட்சிகள் முதல் செய்தி அமைப்புகள் முன்னிலைப்படுத்தி, வெளி நாட்டவருக்கு எதிரான நாசிச விளக்கவுரைக்கு அரண் சேர்த்தனர். தனிமனிதனின் பாதுகாப்பு மையவிவாதமாகியது. இந்த விடையத்தை சமூகப் பிரச்சனையாக பிரஞ்சு சமூகத்தில் கொண்டு வந்ததே நாசிகள் தான். இதை நாசிக்கு சார்பான விவாதப் பொருளாக்கியது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சிகளும், செய்தி அமைப்புக்களுமே. பாதுகாப்பு தொடர்பான பிரச்சனையில் சமூக பொருளாதாரக் கூறுகளையும், அதன் வளர்ச்சியையும் இருக்கின்ற சமூக அமைப்பின் மேலான விவாதமாக மாற்றவில்லை. மாறாக இதை எப்படி கட்டுப்படுத்துவது என்ற விடையத்தில் சட்டம், பொலிஸ் ஆட்சி முறை, தண்டனை முறை, நாடு கடத்துவது என்ற எல்லைக்குள்ளான விவாதமாக மாறியதுடன், அதற்குள் நடைமுறை தீர்வுகளை கட்சிகளும் செய்தி அமைப்புக்களும் முன்வைத்தன. ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த வலதுசாரிக் கட்சி, நாசிசத்தின் கோட்பாடுகளை அடிப்படைகள் பலவற்றை நடைமுறைப்படுத்தி, வெளிநாட்டவருக்கு எதிரான மனிதவிரோதச் சட்டங்களை அமுல் செய்யத் தொடங்கியுள்ளனர். வெளிநாட்டவருகளுக்கு எதிரான கடும் சட்டங்களையும், நடைமுறைகளையும் அமுலாக்கியுள்ளது. நாசிகளின் வெள்ளையின வாக்கை கவரும் வகையில் இதைச் செய்தன் மூலம், பராளுமன்ற தேர்தலில் பெரும் வெற்றிகளை பெறமுடிந்தது. வெளிநாட்டு சமூகங்களுக்கு எதிரான இன, நிற, வர்க்க ஒடுக்கமுறைகள் என்றுமில்லாத அளவுக்கு அதிகரிக்கும் என்பதை, ஐரோப்பிய ஜனநாயகம் தன்னை நிர்வாணமாக காட்டத் தொடங்கியுள்ளது.

ஒழுக்கு முறையும் அடக்கு முறையும் வெளிநாட்டுச் சமுகத்துக்கு எதிராக பாரியளவில் விரிவாகின்றது. அதேநேரம் பரந்த சமுதாயத்தில் குற்றங்கள் என்றுமில்லாத அளவில் அதிகரிக்கின்றது. ஐரோப்பாவில் வாழ்கின்ற 1000 பேருக்கு கிரிமினல் குற்றம் இழைப்போர்.

| | |
|---|---|
| சுவீடன் | 135 |
| பிரிட்டன் | 97 |
| டென்மார்க் | 93 |
| பின்னலாந் | 84 |
| பெல்ஜியம் | 84 |
| டென்மார்க் | 78 |
| ஜெர்மனி | 77 |
| லக்கசம்பேர்க் | 63 |
| பிரான்ஸ் | 61 |
| ஒஸ்ரியா | 61 |
| இத்தாலி | 41 |
| கிறிஸ் | 36 |
| அயர்லாந்து | 17 |
| போத்துகல் | 7 |

மூலதனம் விரிவாக்கும் குற்றத்தின் தன்மையை கண்காணிக்கவும் அடக்கவும் பொலிசாரை சார்ந்து நிற்கும் சமூக அமைப்பு கண்ணோட்டம் விரிவாகின்றது. சமூக குற்றங்களை கைது சிறை என்ற வடிவில் கையாளும் ஜனநாயக அமைப்பு, அதன் அச்சாணியாக பொலிஸ் அடக்குமுறை இயந்திரத்தை சார்ந்து தன்னை நிலைநிறுத்துகின்றது. இந்த வகையில் ஒருலட்சம் மக்களைக் கண்கணிக்கும் பொலிசார் எண்ணிக்கை

| | |
|---|---|
| இத்தாலி | 476 |
| பிரான்ஸ் | 396 |
| ஜெர்மனி | 329 |
| பிரிட்டன் | 303 |
| சுவீடன் | 286 |
| டென்மார்க் | 198 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்காணிப்பும் கைதும் சிறையும் ஜனநாயகமாவது என்றுமில்லாத அளவில் அதிகரிக்கின்றது. அதேநேரம் இளம் சமுதாயம் இழைக்கும் குற்றங்கள் என்று இல்லாத அளவில் விரிவாகின்றது. மூலதனம் தனது நுகர்வுப் பண்பாட்டை சமூக மயமாக்க, அதன் பக்க விளைவாக குற்றங்கள் பெருகுகின்றன. இதில் இளம் சமுதாயம் பாரிய அளவில் ஈடுபடுகின்றது. ஜெர்மனியில் மற்றவர்களை காயப்படுத்தும் 14 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை 14.1 சதவீதத்தால் சென்ற வருடம் அதிகரித்துள்ளது. 14 வயதுக்கு உட்பட்ட 5.9 சதவீதமானவாகள் அதாவது 152 774 பேர் மற்றவர்களை காயப்படுத்தும் வன்முறைகளில் ஈடுபட்டனர்.

பிரன்சில் சிறிய தண்டைக்குள்ளாகும் இளையர்களின் எண்ணிக்கையை

| | |
|---|---|
| 1995 | 34290 |
| 1996 | 41380 |
| 1997 | 43910 |
| 1998 | 44990 |
| 1999 | 45410 |
| 2000 | 44360 (உறுதியானது அல்ல) |

இளம் தலைமுறை குற்றங்களை இழைப்பதில் எந்த விதத்திலும் தயக்கமும் காட்டுவதில்லை. சமுதாயம் மீது தனிமனித வக்கிரமாக வன்முறையை பிரயோகிப்பதில், ஈடு இணையற்ற வகையில் கதநாயகனுக்குரிய திமிரில் கையாளுகின்றனர். 2000ம் ஆண்டில் பிரான்சில் எந்த குற்றத்துக்காக சிறை சென்றுள்ளனர் எனப் பார்ப்போம்.

| | |
|---|---|
| வீதி சட்டத்தை மீறியது | 132 000 |
| களவு, திருட்டை மறைத்தல்,.. | 147 500 |
| மற்றவர் மீதான வன்முறை | 76400 (இதில் 41900 காயப்படுத்தியது, வலிய சண்டை செய்தவை) |
| நீதிமோசடி | 19700 |
| மற்றவை | 68000 |

இந்த குற்றத்தை இழைத்து தண்டனை பெற்றவர்கள் வயதைப் பார்ப்பொம்.

| | 1995 | 2000 |
|---|---|---|
| -16 வயதுக்கு குறைவு | 3574 | 17340 |
| 16-18 | 5830 | 19926 |
| 18-20 | 21041 | 39818 |
| 20-25 | 74833 | 91597 |
| 25-30 | 61756 | 65167 |
| 30-40 | 89539 | 100578 |

ஐரோப்பாவில் அதிகரித்து வரும் வன்முறைக்கு, ஐரோப்பிய சமூக பொருரளாதார பண்பாட்டு கூறுகளே அடிப்படையாகவும் ஆதாரமாகவும் உள்ளது. உண்மையில் குற்றங்களை ஆராய்கின்ற போது சிறிய குற்றங்களில் வெளிநாட்டவர் எண்ணிக்கை அதிகமாகவும், பெரிய குற்றங்களில் பிராஞ்சுக்காரரின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. போதைவஸ்த்தை பெரியளவில் கடத்தும் பிரஞ்சுக்காரர், அதை சில்லறையாக விற்கும் போது கணிசமான வெளிநாட்டவர்கள் சம்பந்தப்படுகின்றனர். போதைவஸ்து சம்பந்தப்பட்ட குற்றத்தை பொதுமைப்படுத்தி ஆராய்கின்ற போதே குற்றத்தின் தன்மை மறைக்கப்பட்டு, நிறத்தின் இனத்தின் தன்மை முதன்மைபடுகின்றது. ஐரோப்பாவில் பாலியல் வன்முறைகள் பெரும்பாலனவை சொந்த வீட்டில் இருந்தே தொடங்குகின்றது. ஐரோப்பியரின் பாலியல் வக்கிரத்தின் ஒரு சமூக குற்றமாகவே இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிப்படுகின்றது. இது பெருமளவில் வெள்ளை இனத்தவராலேயே நடத்தப்படுகின்றது. இந்த வெம்பிய வக்கிரத்தை வெளிநாட்டவர் செய்யும் போது நாகரீகமற்ற வகையில் வெளிப்படுவதால், அது முதன்மை படுத்தப்படுகின்றது. இந்த குற்றத்தின் நாகரீகமும் காட்டுமிராண்டித்தனமுமே அளவு கோலாகி வெளிநாட்டவர்களை குற்றவாளியாக்கின்றனர். சொந்த குழந்தைகளை (மகளையும் மகனையும்) கூட பாலியல் வன்முறைக்குள்ளாக்கும் ஒரு சமூக அடித்தளத்தின் வக்கிரம், நாகரிகமான பண்பாட்டால் மூடிமறைக்கப்படுகின்றது. இப்படி குற்றங்கள் ஒவ்வொன்றுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை முதன்மைப்படுத்தி வெளிநாட்டவரை நாசிகள் தனிமைப்படுத்துகின்றனர். இதன் பின்னால் மற்றைய கட்சிகள் காவடி எடுத்து ஆடுகின்றனர்.

இந்த வேறுபாட்டின் சமூக அடித்தளத்தை ஆராய்வதன் மூலமே இதை நாம் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும். இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் சமூக பொருளாதார பண்பாட்டுக் கூறால் பிளவுபட்டே வாழ்கின்றனர். இது இரண்டு வகையில் நிகழ்கின்றது.

1.வெளிநாட்டவர்கள் வேறு ஒரு சமூக பொருளாதார பண்பாட்டுக் கலாச்சார கூறுகளின் அடிப்படை வழிவந்தவர்களாக இருப்பதால், மேற்கு சமூகத்துடன் இயல்பில் முரண்படுகின்றனர்.
2.ஏகாதிபத்திய நிற இன வர்க்க ஜனநாயக அமைப்பு, வெளி நாட்டவர்களை ஒதுக்கி வைக்கும் இனவெறித் தீண்டாமையை திட்டமிட்டே ஆளும் வர்க்கங்கள் கையாளுகின்றனர்.

இதில் இன நிற வர்க்க ஒதுக்கல் கொள்கையே, வெளிநாட்டவர்களின் மரபுவழி பண்பாட்டை கலாச்சாரத்தை தக்கவைக்கின்றது. இதில் இருந்தே இன நிற சமூகப் பிளவுக்கு வழிசமைக்கின்றது. இந்த வெளிநாட்டுச் சமூகங்கள் குற்றவாளி சமூகமாக இருப்பதில்லை. கடும் உழைப்பும், கடும் தியாகமும் கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளான, ஒரு சமூக வாழ்வை வாழ்கின்றனர். இந்த சமூகத்தின் உழைப்பின் ஆதாரத்தையும், கூலியையும், வாழ்விடங்களையும், சமூகப்புறக்கணிப்பையும் இன நிற ஒதுக்கல் கொள்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்படும் போதே, குற்றங்கள் இழைக்கப்படுகின்றன. இதைவிட எல்லா சமூகத்துக்கே உரிய சமூக விரோத புல்லுரிவிகள் இங்கும் இருப்பதும் பொதுவானது. ஆனால் இந்த வெளி நாட்டவர்களின் குழந்தைகளின் வன்முறைகள் தான், வெளிநாட்டுச் சமூகத்தை ஒட்டு மொத்தமாக குற்றவாளியாக்க நாசிகளால் முடிகின்றது. வெளிநாட்டு பெற்றோருக்கு பிரான்சில் பிறந்த குழந்தைகளும், இளமையில் பெற்றோருடன் இங்கு வரும் குழளந்தைகளினதும் வன்முறைகள் ஒப்பீட்டு அளவில் அதிகமாக உள்ளது. இதற்கு இங்கு உள்ள இன நிற ஒதுக்கல் கொள்கையே அடிப்படையான மையக் காரணமாகும். ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு பிரஞ்சு பொலிசார் அரபு இளைஞர்களுக்கு எதிராக இன நிற ஒதுக்கல் கொள்கையின் அடிப்படையில் மனித உரிமை மீறல்களை செய்வதை, வருடாந்தம் தன் அறிக்கை ஊடாகவே குற்றம் சாட்டும் அளவுக்கு ஒரு ஏகாதிபத்திய இன நிற ஒதுக்கல் கொள்கையை அமுல் செய்கின்றனர். இந்த நிலமைக்கான சமூக பொருளதார இனநிற ஒதுக்கல் கூறுகளைப் பார்ப்போம்.

வெளிநாட்டவர்களை திட்டமிட்டே ஐரோப்பிய கட்டுமானப் பணியின் தேவையை பூர்த்தி செய்ய உழைப்புச் சந்தைக்கு உள்வாங்கிய போது, உருவாக்கிய வீட்டமைப்புகள் இனநிற பேதத்தை அடிப்படையாக கொண்ட அதேநேரம், சேரிப்புறத்துக்கு நிகரானதாகவே இருந்தது. அத்துடன் அந்த சேரிக்கும் பிரஞ்சு மக்களுக்கிடையில் ஒரு தீண்டாமையை, பண்பாட்டு கலாச்சார பொருளாதார கூறுகள் ஊடாக பிளந்து வேலியிட்டனர். இன்று அரசு வீடுகளாகவும் அடுக்கு மாடிக் கட்டிடங்களாக அவை மாறிய போதும், குடியிருப்பு என்பது இன நிற பேத அடிப்படையில், அதாவது வெளிநாட்டவர் பிரஞ்சுக்காரர் (இது பல ஐரோப்பிய நகரங்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருந்தும்) என்ற பிளவை அடிப்படையாக கொண்ட திட்டமிட்டே குடியேற்றப்படுகின்றனர். இந்த திட்டமிட்ட குடியேற்ற பிளவே, வெளிநாட்டவர்களை பிளந்து காட்டி விடும் நாசிகளின் வளர்ச்சிக்கான அடிப்படையாகும். உண்மையில் இங்கு என்ன நடக்கின்றது.

வெளிநாட்டவர்களின் குழந்தைகள் பிரஞ்சு சமூகத்துடன் ஒன்றிணைவதையும் கலந்துவிடுவதையும் இது செயற்கையையாகவே தடுக்கின்றது. மாறாக பிரஞ்சு மக்களின் சமூக பொருளாதார பண்பாட்டுக்கு எதிராக, அராஜகத்தை அடிப்படையாகவும் அதையே பண்பாட்டாக கொண்ட உதிரி லும்பன் சமூகமாக உருவாகின்றனர். இது பல்துறை சார்ந்து செழித்து வளர்ச்சி பெறுகின்றது.

1.மக்களுடன் இணைந்து கலந்து வாழும் மனித சமூகப் பண்பை, ஆளும் வர்க்கங்கள் ஜனநாயக பூர்வமாக தடை செய்கின்றனர். இதனால் தனித்து ஒதுக்கப்படும் அந்த சமூகம் இதை எதிர்த்து போராடும் வகையில் ஒரு அரசியல் எழுச்சி சமூகப் போக்கில் இல்லை. இதனால் தனது எதிர்ப்பை வெளிப்படுத்த அராஜக வழியில் சமூகத்துக்கு எதிராகவே கையாளுகின்றனர்.

2.தனித்து ஒதுங்கி வாழ விடப்பெற்ற வெளிநாட்டுப் பெற்றோர்களின் குடியிருப்புக்களில், சொந்த நாட்டின் பண்பாட்டுக் கூறுகளே ஆட்சி செய்கின்றன. இது மத அடிப்படைவாதமும், நிலப்பிரபுத்துவ பண்பாட்டு கூறுகளுடன் இணைந்த பண்பாட்டை உருவாக்கின்றது. குழந்தைகள் வாழ்கின்ற நாட்டின் பொருளாதார கூறுக்கு இணங்க இதனுடன் நேரடியாகவே முரண்படுகின்றனர். நிலப்பிரபுத்துவ மத அடிப்படைவாதத்தல் கட்டுப்படுத்தும் பெற்றோரின் அடக்குமுறையும், அதேநேரம் ஏகாதிபத்திய பொருளாதார பண்பாட்டு இன நிற ஒதுக்கல் கொள்கையாலும் குழந்தைகள் புறக்கணிக்கப்படுகின்றனர். இந்த நிலையில் இரண்டிலும் இருந்து இரண்டுக்கும் எதிரான அராஜகவாத பண்பாட்டை அடிப்படையாக கொண்ட, தன்னியல்பான லும்பன் குழுக்களையும் தனிமனிதர்களையும் உருவாக்கின்றது. இது சொந்த பெற்றோரைச் சார்ந்து நிற்கும் அதேநேரம், வாழும் சமூகத்தை எதிரியாகவே காண்பதுடன் அதன் மேல் வன்முறையை கையாளுவது ஒரு போக்காகின்றது.

3.வன்முறை பெருமளவில் ஏகாதிபத்திய பொருளாதாரக் கூறுகள் சார்ந்தே நேரடியாக பிரதிபலிக்கின்றது. இது சிறு வழிபறிக் கொள்ளையாக, வன்முறையாக பரிணமிக்கின்றது. ஏகாதிபத்திய நாடுகளில் சரி, உலகமயமாகும் உலகிலும் சரி நுகர்வின் அடித்தளமே பண்படாக்கியுள்ளது. நுகர்வை அடைவதே வெற்றிகரமான வாழ்வாகிய நிலையில், இதை அடைவதில் வெவ்வேறு வழிமுறைகளை சமூக பொருளாதார கூறுகளில் இருந்தே கண்டறிகின்றனர். இனநிற வர்க்க ஒதுக்கல் கொள்கையால் லும்பன்களாக வாழத் தொடங்கும் குழந்தைகள், நுகர்வை அடைவதற்கான ஒரு வழியாக வழிபறியையும் அதில் தோல்வி பெறுபவன் சமூகம் மீதான வன்முறையையும் கையாளுகின்றான். சொந்தக் குடும்பத்தில் அடிப்படை தேவைக்கே போராட்டம் என்ற நிலையில், ஆடம்பரமான கவர்ச்சிகரமான விளம்பர நுகர்ச்சி உலகமயமாகின்ற போது இன நிற ஒதுக்கள் குடியிருப்பிலும் புகுந்துவிடுகின்றது. சுரண்டும் மூலதனத்துக்கும் அனைத்து எல்லைகளையும் கடப்பதில் முரண்பாடு இருப்பதில்லை. இனநிற ஒதுக்கல் குடியிருப்பு சேரிகளில் வாழும் இளைஞர், இளைஞிகள் சமூகத்தில் இந்த ஆடம்பர நுகர்வை அடையும் தகுதி இருப்பதில்லை. பெற்றோருக்கு அதை வாங்கும் சக்தியிருப்பதில்லை. அத்துடன் பெற்றோர்கள் கடும் உழைப்பை கொண்ட ஒரு பாட்டாளியாக இருப்பதாலும், இந்த ஆடம்பர நுகர்வுக்கு எதிரான உணர்வுகளின் எதிர்ப்பு இயல்பாகின்றது. இந்த நிலையில் பெற்றோர்களின் குழந்தைகள் எந்த சமூகத்தையும் சாராத அராஜக வழிகளில் நுகர்வை அடைய முயல்கின்றனர். வழிபறி கொள்ளை, சிறு களவுகள் என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தளத்தில் இது பரிணமிக்கின்றது. இதை அடையும் வழிகளில் சிறு குழுவாக மாறுகின்றனர். இந்த சிறு களவுகளில் கூட கைத் தொலைபேசியை பறித்தல், சிறிய தொகை பணத்தைப் பறித்தல், 'மார்க்' உடுப்புகளை சாப்பத்துகளை பறித்தல் போன்ற வன்முறைகளே 99 சதவீதமாக அடையாளம் காணமுடிகின்றது. பண அட்டை (கிரடிற் காட்), செக், விசா (அடையாள அட்டை) போன்றன, அவர்கள் கையில் கிடைப்பின் அதை அவர்கள் வீசியெறிந்துவிடுவார்கள். ஆனால் திட்டமிட்டு இயங்கும் கிரிமினல் குற்றவாளிகள், இதை தெளிவானகவே பயன்படுத்துகின்றனர். இந்த கிரிமினல் நடவடிக்கையை தமிழர்களிடையே தெளிவாகவே வேறுபடுத்தி காணமுடியும். பண அட்டை போன்றன வீதியில் கண்டு எடுத்தாலும் அல்லது வேறு வழியில் கிடைத்தாலும், அதை ஒரு கிரிமினல் நடவடிக்கைக்காக சிலர் துல்லியமாக பயன்படுத்துகின்றனர். இதில் இருந்தே நாம் குற்றத்தின் தன்மையை, அதன் சமூக அடிப்படையையும் வேறுபடுத்தி பார்க்கமுடியும். உண்மையில் பிரஞ்சு வீதிகளில் நடக்கும் கைத்தொலைபேசி பறிப்பு, பணப்பறிப்பு போன்றவை தன்னெழுச்சி வகைப்பட்ட, ஒரு அராஜகத் தன்மை கொண்டவை. இவை ஒழுங்குமுறைக்கு உட்பட்டவை அல்ல. சமூகத்தின் அவலங்களில் இருந்து எழும் சீழ்களின் விளைவுகளால் நடப்பவையே.

4.வன்முறையை கலாச்சாரமாக்கும் ஏகாதிபத்திய பண்பாட்டு பொருளாதாரக் கூறுகள் இதன் மற்றொரு கூறாகும். நுகர்வு வெறியை இணைத்து முன்வைக்கும் வன்முறை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் சினிமாக்கள் இதன் மற்றொரு அடிப்படையாக உள்ளது. சிறுவருக்கானது என்ற பெயரில் வெளிவரும் காட்டூன்கள் முதல் அனைத்து நிகழ்ச்சிகளும் வக்கிரத்தையும் வன்முறையையும் அடித்தளமாக கொண்டு சமூக மயமாக்கின்றனர். இதன் சமூக விளைவு என்றுமில்லாத அளவுக்கு சமூக வன்முறைக்கு வித்திடுகின்றது. தனிமனித நுகர்வு வெறி, தனிமனித பாதுகாப்பு, தனி மனித சுயநலம் என்று அனைத்தையும் தனிமனித மயமாக்கும் போது, சமூக வெறுப்பு உயர்வானதாக மாற்றப்படுகின்றது. தனிமனித நலன் சமூக நலனுக்கு எதிரிடையாக முதன்மைப்படுத்தப்படுகின்றது. இந்த பண்பாட்டு பொருளாதாரக் கலாச்சாரக் கூறு சமூகப் பிளவுகளால் தனிமனிதன் சார்ந்து வெளிப்படும் போது, வக்கிரமாக வன்முறையாக பிரதிபலிக்கின்றது. வன்முறை கவர்ச்சிகரமான பண்பாக, நாகரீகமாக சமூக அந்தஸ்துக்குரியதாக மாறுகின்றது. மார்க் உடுப்புகள் முதல் மார்க் பொருட்களை பயன்படுத்தும் தகுதியே, கௌரவமானதாக சமூகத் தகுதியாகவுடைய அந்தஸ்தை கோருவது சமூகப் பண்பாகின்றது. இதை அடையும் நுகர்ச்சி விளம்பரம் சார்ந்த பண்பாடு சமூக மயமாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் வைரமாளிகை என்ற விளம்பரத்தை தாங்கிய மேலாடையை அணிந்த படி நீண்ட காலமாக உலாவிய ஒரு உயர மனிதன், அங்கு கேலிக்குரிய ஒருவனாக மதிப்பிட்ட நிகழ்வுகளை இதை அறிந்தவருக்கு தெரிந்து இருக்கும். இதற்கு நிகராகவே மார்க்கின் பெரிய சிறிய எழுத்துக்களுடன் உடுப்புகளை போட்டு திரிவது இன்றைய நாகரிகமாக, சமூக அந்தஸ்ததாக உலகமயமாதல் உலகளவில் ஏற்படுத்தியுள்ளது. தனிமனிதன் தன்னை மார்க்கின் ஒரு வடிவமைப்பாக காட்டிக் கொள்வதன் மூலம், பணத்திமிரும், பாலியல் வக்கிரமும் கொப்பளிக்க சமூக விரோதத்தைக் கொண்ட தனிமனித வக்கிரத்தை பீற்றும் ஒரு சமூக பிராணியாக உருவாகின்றான். இப்படி உருவாகும் சமூகத்தில் காதநாயகனுக்குரிய இந்த நுகர்வு வெறியே, அடிக்கடி பொருளை மாற்றக் கோருகின்றது. மூலதனம் சந்தையை தக்கவைக்க பொருளின் கவர்ச்சியை மாற்றி சந்தைப் படுத்த, அதன் நக்கி குலைக்கும் ஒரு அடிமை நாய்களாக சமூகம் உருவாகின்றது. பொருட்களின் மேலான இந்த நுகர்வு, பெண்ணையும் கூட மாற்றி மாற்றி நுகரும் அடிப்படைக்கான கண்ணோட்டத்தை ஆணாதிக்கம் சார்ந்து முன்வைக்கின்றது. இது எதிரிடையில் பெண்ணும் ஆணை மாற்றி மாற்றி நுகரும் அடிப்படைக்கு வித்திடுகின்றது. பாலியல் நுகர்வின் எல்லையில் அனைத்து மரபையும் தகர்க்கின்றது. இந்த சமூகத்தளத்தில் நுகர்வை அடையும் வழியில் உள்ள தடைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்து செல்ல, வன்முறை ஒரு கருவியாகின்றது. மேற்கத்திய சமூகத்தில் பாலியல் வன்முறைகள், வழிபறிக் கொள்ளைகள், சமூக வன்முறைகளில் இதன் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இது வெளிநாட்டு சமூகத்தில் புகுகின்ற போது, இதன் வெளிப்பாடு அராஜக வழிகளின் வித்தியசமான வடிவத்தில் வெளிப்படுகின்றது. இந்த நுகர்வு வெறியில் நிகழும் வன்முறையின் விளைவின் தன்மை, மேற்கு சமூகத்தில் இருந்த வேறுபட்ட வகையில் பிரதிபலிக்கும் போது, இது சமூகத்தில் முன்பு தனிமைப்படுத்தி கட்டப்படுகின்றது. இதை நாசிகள் முன்னிலைப்படுத்தி வெளிநாட்டவருக்கு எதிரான பிராச்சாரத்துக்கு அடிப்படையாகின்றனர்.

திட்டமிட்ட இன நிற வர்க்க அடிப்படையிலான குடியிருப்புகள், பிரஞ்சு சமூக பண்பாட்டு கலாச்சார வாழ்விடங்களில் இருந்து வேறுபட்ட ஒரு வாழ்வுமுறைக்குள் நகர்ந்துவிடுகின்றது. இதனால் இந்த வாழ்விடங்களுக்கும் மற்றைய வாழ்விடங்களுக்கு இடையிலான முரண்பாடு ஆழமாகின்றது. வெளிநாட்டவரை அதிகமாக கொண்ட குடியிருப்புக்கும் பொலிசாருக்கும் இடையில் ஒரு மோதல் நிலைமை வளர்ச்சி பெறுகின்றது. சமூக ரீதியான பிரச்சனையை இனநிற ஒதுக்கல் கொள்கை மூலம் மேலும் ஆழமாக்கி அரசுகள் கையாளும் போது, அரசு அமைப்பின் அத்திவரமான பொலிசாரின் அதிகாரம் இனம் நிறம் சார்ந்து வெளிப்படுகின்றது. வெளிநாட்டவர்களை குற்றவாளியாக அடையாளம் காண்பதும், நீதி விசாரணைகளை பிரஞ்சு சமூகத்துக்கு புறம்பான வடிவத்தில் தாமே நடத்துகின்றனர். அதாவது கைதுக்கு பதில் சுட்டுக் கொல்வதும், தாக்குவதும், பண்பாடற்ற வகையில் நடத்துவது போன்றன இன நிற சட்ட நெறியாகின்றது. வெளிநாட்டு பெற்றோரின் குழந்தைகளை அணுகும் போது எதிரியாகவும், அதன் அடிப்படையில் விடையங்களைக் கையாள்வதும் பொலிசின் இனநிற பண்பியலாக வெளிப்படுகின்றது. இதனால் வெளிநாட்டு குடியிருப்புகளில் வாழும் இளையர்கள் தாம் வாழும் பகுதியையும், சுற்றுப் புறத்தையும் ஒரு அராஜக நிலைக்குள் மாற்றிவிடுகின்றனர். வன்முறை, வழிபறி இங்கு ஆட்சி செய்கின்றது. இந்த பிரதேசங்கள் ஒரு கொரில்லா பிரதேசமாக மாறிவிடுகின்றது. இப்பிரதேசங்கள் பொலிஸ் மற்றும் வெளிநாட்டு பெற்றோரின் குழந்தைகளின் கைகளிலும் மாறி மாறி அதிகாரம் செலுத்தும் ஒரு சூனியமான நிலை நிலவுகின்றது. இரவில் பொலிசார் இப்பிரதேசத்துக்குள் உட்புக முடியாதநிலை பல பாகங்களில் அடிக்கடி ஏற்படுகின்றது. மோதல் ஒன்று நிகழும் போது, நூற்றுக்கணக்கான வாகனங்கள் எரிக்கப்படுவது முதல் அரசு சொத்துகளை நொருக்கிவிடுகின்றனர். இதன் பழிவாங்கும் படலம் சில நாட்கள் தொடர்ச்சியாக பல பிரதேசங்களில் கொரிலாப் பணியில் நடக்கின்றது. இவை அனைத்தையும் நாசிகள் எடுத்துக் காட்டி, வெளிநாட்டவருக்கு எதிரான வெறுப்பை சமூக மயமாக்கின்றனர். இன நிற வர்க்க விரோத கொள்கையே அடிப்படையான காரணமாக இருக்க, இதை நாசிகள் வெறும் சட்ட ஒழுங்கு பிரச்சனையாக்கின்றனர். நாசிசம் முன்வைக்கும் சட்ட ஒழுங்கு பிரச்சனையை எடுத்துக் கொள்ளும் வலதுகள் முதல் இடதுகள் வரை, வெளி நாட்டவருக்கு எதிரான கடும் சட்டங்களையும் தண்டனைகளையும் படிப்படியாக ஏற்படுத்துகின்றனர்.

உண்மையில் காணப்படும் இன நிற வர்க்க ஒதுக்கல் கொள்கையை எதிர்த்துப் போராட எந்த கட்சியும் இல்லை. மறாக பொலிஸ்சுக்கு அதிகாரங்களை கொடுப்பதன் மூலம், கடும் சட்ட ஒடுக்குமுறைகளை ஏற்படுத்துவதன் மூலம், வன்முறையின் தன்மையை நுட்பமாக்கி அதிகரிக்க வைக்கின்றனர். பிரான்சில் ஆட்சியில் இருந்த சோசலிச கட்சி, கம்யூனிச கட்சி, பச்சைக் கட்சி கையாண்ட வழிமுறைகளில் ஒன்றைப் பார்ப்போம். வன்முறை ரீதியாக அடையாளம் காணப்படும் சில பத்து குடியிருப்பை முற்றாக குடியெழுப்பியதே. வீட்டை மறு சீரமைப்பு செய்வது என்ற பெயரில் 100 வீடுகள் முதல் 1000 வீடுகளில் வசித்தோரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முற்றாக குடியேழுப்பி, வன்முறைக் குழுக்களை சிதறடிக்கும் வகையில் இன நிற குடியிருப்புக்குள் மீள மாற்றியதே. இதை ஏற்படுத்தியதன் மூலம் குழுவின் தன்மையை சிதைத்தனர். இதன் மூலம் வன்முறையைக் கட்டுப்படுத்தும் இன நிறவாத அணுகுமுறையை கையாண்டனர். இதனால் வன்முறையை பழையவர்களிடம் இருந்து தற்காலிகமாக தடுத்த போதும், புதிய வன்முறைகள் மீண்டும் தோற்றம் பெற்றன. வன்முறைக்கு அடிப்படையான சமுகக் காரணம் யதார்த்தமாக உள்ள போது, வன்முறைக் குழுக்கள் இளைமையுடன் செழித்து வளர்கின்றது. குடியெழுப்பிய குடியிருப்புகளுக்குள் புதிய இன நிற வர்க்க அடிப்படையில், வெவ்வேறு இடத்தில் எழுப்பிய வெளி நாட்டவர்களையும், புதிய வெளிநாட்டவர்களை கொண்டே உருவாக்கினர். இப்படிதான் இடதுசாரிகள் என்று சொன்னவர்கள் செய்தார்கள். ஆனால் இந்த அராஜக வாழ்வியல் சார்ந்து வன்முறைகளை, அரசால் நிறுத்த முடியவில்லை. மாறாக அதிகரித்துள்ளது.

புதிய ஆட்சிக்கு வந்துள்ள வலதுசாரிகளோ பொலிஸ் அதிகாரத்தை அதிகரிப்பதன் மூலம் வன்முறையை கட்டுப்படுத்த பிரகடனம் செய்கின்றனர். பொலிசாருக்கு அதிக சலுகைகள், அதிக பொலிசாரை சேர்ப்பது, சட்டங்களை வெளிநாட்டவருக்கு எதிராக கடுமையாக்குவது, வெளிநாட்டவர் வரவை கட்டுப்படுத்துவது என்ற வழியில் நாசிசத்தை சட்டபூர்வமான ஜனநாயக வடிவமாக்கின்றனர். இதே வலதுசாரிக் கட்சிகள் பல பிரதேசங்களில் பிரதேச ஆட்சிகளில் நாசிக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியில் இருப்பதுடன், இன்றைய மந்திரி சபையில் இருப்போரில் சிலர் நாசிக் கட்சியின் ஆதரவை பெற்றதுடன், அதைத் தொடர்ந்து பெறுவதற்கு வக்காளத்து வாங்கியவர்கள். ஐரோப்பாவிலேயே அதிக பொலிசாரைக் கொண்ட ஜனநாயக ஆட்சி பிரதேசமாக இன்று பிரானஸ் இருக்கின்றது. பிரான்சில் பொலிஸ் உடுப்பில் உள்ள ஒருவர் 256 மக்களை கண்காணிக்கும் விகிதசாரம் காணப்படுகின்றது. இது ஜெர்மனியில் 296யாகவும், பிரிட்டனில் 380 யாகவும் உள்ளது. இதைவிட முக்கிய இடங்களில் மக்களை கண்காணிக்கும் இராணுவம், தனியார் பாதுகாப்பு வளையம், போக்குவரத்து பாதுகாப்பு பிரிவு, கிராமசபை பாதுகாப்பு பிரிவு, பெரும் சுப்பர் மாக்கற்றைக் கண்காணிக்கும் தனியார் கண்காணிப்பு பிரிவு, கண்காணிப்பு கமாரக்கள் (10 லட்சத்துக்கு மேல் உள்ளது) என்று பல பாதுகப்பு வடிவங்கள் உண்டு. தொடர்ந்து இவற்றையும், பொலிசார் எண்ணிக்கையை மேலும் அதிகாரிப்பதன் மூலம், தனிமனித சட்ட பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் என்றே வலதுசாரிகள் களமிறங்கியுள்ளனர். அதாவது இன நிற வர்க்க ஒடுக்கமுறையை தீவிரப்படுத்தவே, ஜனநாயக அரசுகள் பிரகடனம் செய்துள்ளனர்.

நாசிகள் ஜனாதிபதி வேட்பளாரக தெரிவான தேர்தல் வெற்றியை அடுத்து, மக்கள் இந்த வழி முறைகளுக்கு எதிராக போராட தன்னெழுச்சியாக அலை அலையாக வீதியில் இறங்கினர். முதல் சுற்று தேர்தல் முடிவு நாசிகளுக்கு சார்பாக வெளிவந்து கொண்டிருந்த நடு இரவிலேயே தன்னியல்பாக பிரஞ்சு நகரங்களில் ஊர்வலம் தொடங்கியது. பத்துக்கு மேற்பட்ட பிரஞ்சு நகரங்களில் அன்று இரவு நடந்த ஊர்வலங்கள், நாசி எதிர்ப்புக் கோசத்துடன் நடந்தது. இந்த நாசி எதிர்ப்பு போராட்டத்தைக் கண்டு ஆளும் வர்க்கங்கள் நடுங்கின. ஆட்சியில் இருந்த இடதுசாரிக் கட்சிகள் போராட்டத்தை கைவிடும்படி வேண்டின. போராட்டம் தொடர்சியாக வளர்ச்சி பெற்றபோது, சோசலிச கட்சியுடன் ஆட்சியில் இருந்த பச்சைக்கட்சி, கொம்யூனிசக் கட்சி ஆதாரவளிப்பது போல் நடித்து, போராட்டத்தின் உள்ளடகத்தை மளுங்கடிக்க முனைந்தன. வலதுசாரிகளோ இறுதிவரை மக்களின் போராட்டங்களை எதிர்த்து நின்றதுடன், நாசிசத்துக்கு எதிராக ஒரு துருமைத் தன்னும் முன்வைத்தப் போராடவில்லை. மக்களின் தீர்ப்புக்கு எதிராகவும் ஜனநாயகத்துக்கு முரணாகவும் இப்போட்டங்கள் நடப்பதாக, நாசிக் கட்சி கூக்குரல் இட்டபோது வலதுசாரிகள் தாளம் போட்டனர். நாசிகள் சுரண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகத்தின் காவலராக தம்மைக் காட்டிக் கொண்டனர். இந்த தேர்தலின் வலதுசாரிகள் இடதுசாரிகளின் ஆதாரவுடன், 80 சதவீத்ததுக்கு அதிகமான வாக்கைப் பெற்று நாசிகளை தோற்றகடித்தனர். ஆனால் இந்த இடத்தில் இடதுசாரிகளுக்கும் நாசிகளுக்கும் இடையில் தேர்தல் என்ற நிலை ஏற்பட்டு இருப்பின், வலதுசாரி ஆதரவில் பெரும் பகுதி நாசிக் கட்சிக்கே கிடைத்திருக்கும். வலதுசாரி கட்சிகளை இரண்டாக பிளந்திருக்கும். நாசிக் கட்சி பெரும் பலத்தை பெற்றிருக்கும். அதாவது 1930 இல் கிட்டலரின் நாசிக் கட்சி எதை சாதித்ததோ, அந்த நிலை ஏற்பட்டிருக்கும். ஜனதிபதி தேர்தலைத் தொடர்ந்து நடந்த தேர்தல் முடிவுகள், இன்று இருப்பதற்கு பதில் நாசிக் கட்சி பாரிய பலத்தைப் பெற்றிருக்கும். வலதுசாரிகள் நாசிசத்துடன் உள்ள அக்கம் பக்கமாக அரசியல் நிலப்படுகளும் உறவுகளுமே, இதை தெளிவாக துல்லியமாக காட்டுகின்றது.

நாசிகளுக்கு எதிராக நடுஇரவில் தொடங்கிய போரட்டத்தைத் தொடர்ந்து, அடுத்த நாள் உயர்தர பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் காலையில் புதிய ஊர்வலங்களை பிரஞ்சு தேசம் எங்கும் நடத்தத் தொடங்கினர். அன்று தொடங்கிய நாசி எதிர்ப்பு ஊர்வலங்கள் இரண்டாவது சுற்று தேர்தல் நடத்த திட்டமிட்ட தொடர்சியான 14 நாட்களும் அலை அலையாக ஒவ்வொரு நாளும் நடைபெற்றது. புதிதாக பலர் இந்த ஊர்வலங்களில் இணைந்ததுடன் புதிய போராட்டங்களையும் நடத்தினர். சிறிய கிராமங்கள் முதல் பெரிய நகரங்கள் வரை பல்வேறு நாசி எதிர்ப்பு போராட்டங்கள் நடந்தனர். தொழில் சங்கங்களும், மக்கள்திரள் அமைப்புகளும் போராட்டங்களை நடத்தினர். தன்னிச்சையாக தன்னியல்பாக எழுந்த போராட்டம், பிரஞ்சு சமூக அறிவியலை கேள்விக்குள்ளாக்கி புதிய தேடுதலுக்கான அத்திவாரத்தையிட்டது. இந்த ஊர்வலங்கள் நடந்த போது, சில நூறு பாடாசாலைகள்

## தன்னெழுச்சியான மக்கள் எழுச்சியும், போர் குணம்சத்தின் வெட்டுமுகமும்

பிரான்சின் தலைநகரான பாரிசில் நடந்த ஊர்வலத்தில் 10 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். வழமையாக இந்த மே தின ஊர்வலத்தில் 20 ஆயிரம் மக்களே கலந்த கொள்பவர்கள். அதிலும் பல்வேறு நாடுகளின் பிரச்சனைகளை உள்ளடக்கிய வண்ணம், தனியான குழுவாக நடக்கும் ஊர்வலங்களில், இனத் தேசிய இன வாதங்களையும் ஊர்வலம் உள்ளடங்கியிருக்கும். உதாரணமாக ஜே.வி முதல் புலி வரை தனித் தனியான கோசங்களுடனேயே கடந்த காலத்தில் நடந்துவந்தன. இம்முறை நாசிசத்துக்கு எதிரான எழுச்சி நடந்து கொண்டிருந்த போதும், பலர் தமது குறுகிய நோக்குடனேயே கலந்து கொள்ளவந்தனர். ஆனால் இம்முறை மக்கள் வெள்ளம் அனைத்துவித பாசிசத்தையும் சிதறடித்தனர். நாசிச எதிர்ப்பு கோசத்தின் கீழ் அனைத்தையும் சிதறடித்தனர்.

நாங்கள் வழமை போல் மேதின ஊர்வலத்துக்கு சென்றபோது, இம்முறை செல்ல முடியுமா என்ற கேள்வி 10 கி.மீற்றருக்கு வெளியில் போக்குவரத்து நெருக்கடியில் கேள்விக்குள்ளாகியது. மக்கள் வெள்ளம் பாரிஸ் மையத்தை நோக்கி அலை அலையாக செல்லக் காத்துக்கிடந்தது. பாரிசைச் சுற்றி பாரிசைச் சென்றயடையும் பாதைகள் எங்கும் மக்கள் வெள்ளத்தால் அடைபட்டுக் கிடந்தது. பாரிஸ் மையத்தை நோக்கிச் செல்ல முடியாத மக்களில் கணிசமானோர், மீண்டும் வீட்டை நோக்கி திரும்பினர். ஊர்வலம் செல்லும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாசி எதிர்ப்பு மையங்களாகியது. வாக்குரிமையற்ற இந்த இளம் மாணவ மாணவிகள், வெளிநாட்டு மக்களுக்கு எதிராக முன்வைக்கும் நாசிய பிரச்சாரத்தை கேள்விக்குள்ளாக்கியதன் மூலம், சொந்த பெற்றோருடனும் முரண்படுவது ஒரு அரசியலாகியது. எங்கும் வாதப் பிரதி வாதமாகியது.

நாசி எதிர்ப்பு ஊர்வலங்களின் எழுச்சியாக மே முதலாம் திகதி மாறியது. பிரான்ஸ் முழுக்க 20 லட்சம் மக்கள் தன்னியல்பாக ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தியதுடன், பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். அண்ணளவாக மே முதாலம் திகதி 500 பிரதேசங்களில் நாசி எதிர்ப்பு ஊர்வலங்களை மக்கள் நடத்தினர். இப் போராட்டங்கள் எந்த மையக் கோசத்தையும் பொதுமைப்படுத்தவில்லை. தன்னியல்பான நாசி எதிர்ப்பே மையக் கோசமாகியதுடன், அவை தன்னியல்பான மனித உணர்வுகளை பிரதிபலிக்கும் வண்ணம் பல வடிவில் மக்கள் அதை வெளிப்படுத்தினர். (பார்க்க பெட்டிச் செய்தியை)

வெளிநாட்டவர்களின் ஐரோப்பியா வரவும், அவர்களின் ஐரோப்பிய வாழ்வு ஜனநாயக உரிமையாகும். ஐரோப்பிய ஜனநாயக விரோத ஜனநாயகச் சட்டங்கள் இதை குற்றமாகவே கருதுகின்றது. ஐரோப்பா எங்கும் நாசிக் கட்சிகள் பெறும் அதே வாக்குக்கு சமமாக வாழும் வெளிநாட்டவர்களுக்கு, இன்றுவரை வாக்குரிமை வழங்கபடவில்லை. இவர்களில் பலர் 30, 40 வருடம் வாழ்ந்தாலும் வாக்களிக்க முடியாது. ஆனால் அவர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தல்களாகவே எப்போதும் இருந்து வருகின்றது. ஒரு வெளிநாட்டவன் ஐரோப்பா வருவதும், வாழ்வதும் ஒரு ஜனநாயக உரிமை என்பதை மறுப்பததன் மூலம், இந்த ஜனநாயக அமைப்பு இன நிற வர்க்க பிளவை அடிப்படையாக கொண்ட ஜனநாயகமாக

இடத்தை நெருங்கிய போது எம்மால் நகர முடியவில்லை. மக்கள் வெள்ளத்தில் நாம் சிக்கிய போது 2,3 மீற்றரை கடந்து ஒதுங்கவே 30 நிமிடங்கள் கூட தேவைப்பட்டது. சிறு அசாம்பவிதம் கூட, மிதிப்பாட்டு மரணங்களை ஏற்படுத்தும் அளவுக்கு நிலமை அலைமோதியது. சிறு குழந்தைகள் முதல் வயது போனவர்கள் வரை இந்த மக்கள் வெள்ளத்தில் காணப்பட்டனர். உற்சாகத்துடன் நாசி எதிர்ப்பு கோசமெழுப்பிக் கொண்டிருந்தனர். கைகளில் விரும்பியவாறு நாசிசத்தை அம்பலம் செய்யும் ஏதோ ஒரு கோசத்தை, தூக்கி காட்டிய படி நின்றனர். சிறு குழந்தைகளின் மேலாடையை நீக்கிவிட்டு, சில பெற்றோர் நெஞ்சிலும் முதுகிலும் நாசி எதிர்ப்பு கோசங்களை எழுதியிருந்தனர். தந்தை அல்லது தாய் சொந்த குழந்தைகளை தோளில் துக்கிவைத்த படி நாசிசத்தை அம்பலம் செய்யும் கோசத்தை உலகுக்கு தெரியும் படி உயர்த்தி காட்டியபடி நடந்தனர். காதலன் காதலிக்கிடையிலும் கூட இது போன்ற வடிவில் செய்தனர். நாசித்தை வேட்டை நாய்க்கும் அல்லது கோரமான அழுக்கான பன்றிக்கும் ஒப்பிட்டு பல ஓவியங்கள் மக்கள் கலையாக்கி, அதை தமது நாசி எதிர்ப்பு பாதகையாக கொண்டு வந்தனர். கறுப்பின மக்களுடன் கை கோர்த்தும், பரஸ்பரம் முத்தமிட்டபடியும் நடந்தனர். பற்பல இசைகளை அவர் அவர் விருப்பத்துக்கு இணங்க நாசிகளை எதிர்த்தும், மக்களின் ஒன்றுபட்ட வாழ்வை உயர்த்தியும் இசைத்தனர். மக்கள் அதன் தள கதியில் ஒன்றிணைந்து, அதனுடன் இணைந்து ஆடினர். குறிப்பிடத்தக்க ஒரு இசையை உலகளாவிய பல்வேறு நாடுகளின் இசை கருவிகளுடனும், தாள வாத்தியங்களுடன் இசைத்த போது, அந்த இடமும், இசையும், மக்களின் குதூகலிப்பும் இணைந்து ஒன்றாக அதிர்ந்தது. மக்கள் கூட்டம் அந்த இசையுடன் இசைந்து பெரும் வட்டவடிவாக மேலும் கீழுமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதுவதை அங்கீகரிப்பதாகும். உலகம் உலகமயமாக்கும் ஏகாதிபத்திய நனவுகளின் தொடர்ச்சியில், உலகமே ஒரு நாடாகியுள்ளது. இங்கு நகரங்களும் கிராமங்களுமாக நாடுகள் இருப்தால், பிளவுகள் அதிகாரித்து நகரத்தை நோக்கி கிராம மக்கள் நகர்வதும் அதன் பொது விதியாகும். இதை உருவாக்குபவர்கள் நகரத்தில் வாழும் சுரண்டும் வர்க்கங்களே. அவர்கள் உருவாக்கிய தேசங்கடந்த மூலதனத்தின் பக்கவிளைவுகளை கட்டுப்படுத்த, அவற்றை சட்டவிரோதமாக்கின்றனர்.

முன்பு ஒரு நாட்டில் முதலாளித்துவ புரட்சி நடந்த போது எது நடந்ததோ, அதுவே உலகமயமாகும் போது நிகழ்கின்றது. கிராமப்புறங்கள் சூறையாடப்பட்டன. கிராமப் புறத்தை ஒரு சில புல்லுரிவிகள் அபகரித்து மக்களை விராட்டியடித்தனர். மக்கள் நகரங்களை நோக்கி நகர்வது முதலாளித்துவத்தின் ஒரு அரசியல் விதியாகியது. இதுவே உலகமயமாதலின் விதியும் கூட. உலகை சூறையாடத் துடிக்கும் மூலதனம், உலகை உலகமயமாக்கி வருகின்றது. ஏகாதிபத்திய நாடுகளின் இந்த நடைமுறை, மக்களின் பஞ்சம் பிழைக்கும் வாழ்வையே அழிக்கின்றது. மக்கள் வாழ்விழந்து சொந்த பிரதேசத்தை விட்டு வெளியேற்றுவதை, ஒரு பொதுவான நடைமுறையாக மூலதனம் கையாளுகின்றது. இப்படி வெளியேறுபவர்கள் மூலதனம் குவிந்து கிடக்கும் பிரதேசங்களை நோக்கி நகர்வது தவிர்க்கமுடியாத ஒரு இயங்கியல் போக்காகும். இந்த இயங்கியலை ஜனநாயக விரோதமாக மேற்கு இனநிற வாதிகள் காட்டுவதுடன், இதை ஒடுக்குவதையே ஜனநாயகமாக காட்டுகின்றனர். இந்த இனநிற ஜனநாயகம் மூலதனத்தின் தொட்டில் தாலாட்டு பெற்றே வளர்ச்சி பெற்றது, பெறுகின்றது.

## நாசிகளின் வளர்ச்சி

மேற்கு ஐரோப்பா முதல் கிழக்கு ஐரோப்பா வரை எங்கும் எல்லா நாட்டிலும் தேசிய கோசங்களுடன் நாசிகள் வளர்ச்சி பெற்று வருகின்றனர். சில நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட நாசிக் குழுக்கள், நாசிக் கட்சிகள் செய்ற்படுகின்றன. இவற்றில் ஒரு

அசைந்தனர். இப்படி பற்பல வடிவத்தில் நாசிசத்தை எதிர்த்து மக்கள் கூட்டம் திரும்பிய இடம் எங்கும் அலை மோதியது. ஊர்வலம் குறித்த பாதையால் செல்ல முடியாத வகையில், மக்கள் வெள்ளம் காணப்பட்டது. மக்கள் பல்வேறு பாதைகளை தெரிவு செய்து, பல வழிப்பாதையூடாக ஊர்வலங்களை குறித்த இடத்தை நோக்கி நடத்தினர். எது ஊர்வலம் நடக்கும் பாதை என்பது தகர்ந்து, சகல வீதிகளும் மக்கள் வெள்ளத்தால் குவிந்து கிடந்தது. பலர் நெருக்குதலில் சிக்கி மயங்கி வீழ்ந்த வண்ணம் இருந்தனர். நெருக்கடிகளை தவிர்க்க முன்னேறுங்கள் என்ற கோசம் கூட, சில நேரத்தில் மையமான கோசமாகியது.
என்னுடன் இருந்த நண்பர்களை நான் தவறவிட்டு இருந்தேன். நான் மைய இடத்தை விட்டு 3 மணி நேரமாக நகர முடியாத நிலையில் நின்றிருந்தேன். அந்த இடத்தில் இருந்தே இறுதியாக திரும்பினேன். நான் வீடு திரும்பிய போது 3,4 கி.மீற்றர் அப்பால், அதாவது ஊர்வலத்தின் எதிர் திசையலும் மக்கள் கூட்டம் நின்று இருந்தையும், திரும்பிக் கொண்டிருந்தையும் காணமுடிந்தது. மக்கள் தன்னியல்பாக, சொந்த போர்க்குணம்சத்தை பல வழிகளில் வெளிப்படுத்தினர். இது வரப்போகும் வர்க்கப் போராட்டத்துக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்ததுடன், மக்களின் விழிப்புணர்வையும் அரசியல் ரீதியான வர்க்க நடை முறைக்கும் வழிகாட்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி தேர்தல் மூலம் ஆட்சியைப் கைப்பற்றும் போக்கில் தீவிரமாக செயற்படுகின்றன. புதிய நாசிப் பண்பாட்டு கலாச்சார அடிப்படைகளுடன், இராணுவ ரீதியான ஒழுங்குடன் இருக்கின்ற பொருளாதார அமைப்பின் மேல் தம்மை விரிவுபடுத்துகின்றன. மற்றைய பகுதி சட்டவிரோதமாகவும் சட்ட பூர்வமாகவும் இயங்கும் குழுக்கள், தீவிரமான வன்முறைகளில் இறங்குகின்றன. வெளி நாட்டவர்களை தாக்குவது, வெளிநாட்டு அடையாளங்களை தகர்ப்பது முதல் பாட்டாளிவர்க்க போராட்ட வரலாற்று அடையளங்கள் மற்றும் வெற்றிகள் மேல் வன்முறையை கட்டமைக்கின்றனர். நாசி எதிர்ப்பு ஊர்வலங்களையும், மூலதனத்துக்கு எதிரான போராட்டங்களையும் தடுப்பது, எதிர்த் தாக்குதலை நடத்துவது என்ற தீவிர செயல்முறையை ஈடுபடுகின்றனர். இதை பொலிசுடன் இணைந்தும், அக்கம் பக்கமாகவும் நின்றும் நடத்துகின்றனர்.

நாசி கட்சிகள் மற்றும் குழுக்களின் வளர்ச்சியில் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பகிரங்கமாக இனைந்து செய்றபடவிட்டலும், ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றன. அத்துடன் இந்த நாசிக் கட்சிகள் ஐரோப்பிய கட்சிக்கு இடையிலான ஒருங்கினைப்பையும், உலகளவிய நாசிக் கட்சிகளுடன் நெருக்கமான உறவையும் பேணுகின்றன. ஐரோப்பாவில் நடக்கும் நாசி ஊர்வலங்கள் மற்றம் போராட்டங்களில், மற்றயை நாட்டு நாசிகள் இணைந்து கொள்வது அதிகரித்து வருகின்றது. ஐரோப்பாவில் நடைபெறும் பிராந்திய உதைபந்தாட்ட குழுக்களின் பின்பும், நாசிகளின் ஆதரவு தளம் விரிவாகியுள்ளது. உதைப்பந்தாட்ட போட்டிகளில் நாசியக் கோசங்களுடன் தான் ஊற்சாகமூட்டப்படுகின்றது. வீடு குடியிருப்பு, சினிமா, வேலைவழங்கல் என்று பல்துறை சார்ந்து இன நிறவாதம் பேணுவது அதிகரித்து வருகின்றது. இது ஒரு சட்டபூர்வமான மனிதவிரோத நடத்தையாகி வருவது, நாசிகளின் செல்வாக்கை திட்மிட்டே ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவத்தில் வளர்த்தெடுக்கின்றது.

தீவிர இன நிறவாதம் மூலம் மற்றயை மக்களை கிண்டல் செய்வது தொடங்கி வன்முறையை ஏவுவதன் மூலம், அரசு அதிகாரத்தை ஒரு வன்முறை வடிவத்தில் கைப்பற்றும் எல்லை வரை ஒரு தயார் நிலையில் இக் கட்சிகள் தம்மை தயார் செய்கின்றன. பெரிய பண மூலதனங்களுடன் இயங்கும் இக் கட்சிகள் சரி, அதன் தலைவர்களின் ஆடம்பரமான சொகுசு வாழ்விலும் சரி, உயர்ந்த இனநிற அதிகாரத் திமிர்த்தனம் படர்ந்து போய் காணப்படுகின்றது. இன்றைய ஐரோப்பிய ஜனநாயக பாராளுமன்றங்கள் உலகமயமாதலில் ஏகாதிபத்திய போட்டியாளனுடன் போட்டியிட்டு உலகைச் சந்தையை கைப்பற்றும் தகுதி தான், நாசிகளின் ஆட்சி அதிகாரத்தை இந்த அமைப்புக்குள் தடுக்கும் ஒரேயோரு எல்லையாக உள்ளது. உலகமயமாதல் போட்டியில் ஐரோப்பிய மூலதனத்தின் அதிகாரம் உலகில் கொடிகட்டி பறக்கத் தவறுகின்ற ஒவ்வொரு கணமும், இயல்பில் நாசிக் கட்சிகளின் அதிகாரம் தவிர்க்க முடியாத மூலதனத்தின் தீர்வாகின்றது. இன்று நாசிக் கட்சிகள் சமூகதத்தில் ஏற்படும் ஒவ்வொரு நெருக்கடிகளையும், வெளி நாட்டவர்களின் வரவினால் ஏற்பட்டதாக காட்ட முயலும் போது, உண்மையில் மூலதனத்தின் குணம்சம்சம் முடிமறைக்கப்படுகின்றது. சமூக பிரச்சனைகளும் அதன் விளைவுகளும் இன்றைய மூலதனத்தின் கொடையாகும் என்பதை, நாசிக் கட்சிகள் திட்மிட்டே பூசி மொழுகி பாதுகாக்கின்றன. வெறுமனே வெளி நாட்டவர் பிரச்சனையாக சமூகப் பிரச்சனைகளை காட்டுவதன் மூலம், வெளி நாட்டவர் மீதான வெறுப்பை உலக ஆக்கிரமிப்புக்கான தாயரிப்பாக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியில் பிரான்சின் நாசிக் கட்சியின் வளர்ச்சியை நாம் ஆராய்வோம். பிரான்சின் முன்னணி நாசிக்கட்சியான லுப்பெனின் தேசிய முன்னணியின் இன நிற சமூகப் பிளவினூடக எப்படி வளர்ச்சி பெறுகின்றனர் எனப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் பெற்ற வாக்குகள் மற்றும் இவை மொத்த வாக்களார்களில் எத்தனை சதவீதம் என்பதைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 1973 | பராளுமன்ற தேர்தல் | 122 000 | 0.55 சதவீதம் |
| 1977 | ஜனாதிபதி தேர்தல் | 190 921 | 0.74 சதவீதம் |
| 1978 | பராளுமன்ற தேர்தல் | 82 743 | 0.30 சதவீதம் |
| 1981 | பராளுமன்ற தேர்தல் | 90 422 | 0.35 சதவீதம் |
| 1984 | ஐரோப்பிய தேர்தல் | 2 184 248 | 10.95 சதவீதம் |
| 1986 | பராளுமன்ற தேர்தல் | 2 705 497 | 9.72 சதவீதம் |
| 1986 | உள்ளூர் தேர்தல் | 2 658 500 | 9.56 சதவீதம் |
| 1988 | ஜனாதிபதி தேர்தல் | 4 375 894 | 14.39 சதவீதம் |
| 1988 | பராளுமன்ற தேர்தல் | 2 359 528 | 9.65 சதவீதம் |
| 1989 | ஐரோப்பிய தேர்தல் | 2 129 668 | 11.73 சதவீதம் |
| 1992 | உள்ளூர் தேர்தல் | 3 396 141 | 13.90 சதவீதம் |
| 1993 | பராளுமன்ற தேர்தல் | 3 158 843 | 12.52 சதவீதம் |
| 1994 | ஐரோப்பிய தேர்தல் | 2 049 634 | 10.51 சதவீதம |
| 1995 | ஜனாதிபதி தேர்தல் | 4 571 138 | 15.00 சதவீதம் |
| 1999 | ஐரோப்பிய தேர்தல் | 1 005 225 | 5.69 சதவீதம் |
| 2002 | ஜனாதிபதி தேர்தல் | 4 770 270 | 17.19 சதவீதம் |

லுப்பெனுக்கு வெளியில் லுப்பெனில் இருந்து பிரிந்த மிக்கிரெ (Mégret), வில்லியரும் (Villiers) சமகாலத்தில் நாசிய சிந்தனைகளை சமந்தரமாக பிரச்சாரம் செய்கின்றனர். இதைவிட பலர் கடந்த காலத்தில் இருந்தனர். இதனடிப்படையில் பிரான்சின் இயங்கும் மற்றைய நாசிக் கட்சிகளின் வளர்ச்சியைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 1956 | பராளுமன்ற தேர்தல் | 2 483 813 | 12.00 சதவீதம் |
| 1965 | ஜனதிபதி தேர்தல் | 1 260 208 | 5.19 சதவீதம் |
| 1995 | ஜனதிபதி தேர்தல் | 1 443 186 | 4.74 சதவீதம் |
| 1999 | ஐரோப்பிய தேர்தல் | 578 774 | 3.28 சதவீதம் |
| 1999 | ஐரோப்பிய தேர்தல் | 2 304 285 | 13.05 சதவீதம் |
| 2002 | ஜனதிபதி தேர்தல் | 661 348 | 2.38 சதவீதம |

பிரான்சில் நாசிகளின் வளர்ச்சி என்பது ஒட்டு மொத்தமாகவே அதிகரித்துச் செல்லுகின்றது. இந்நிலைமை ஐரோப்பிய நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் கூட இதுவே பொது நிலையாகும். ஒட்டு மொத்த நாசிக் கட்சி முதலாம் சுற்றில் பெற்றதைவிட இரண்டாம் சுற்றில் அண்ணளவாக 15000 வாக்குகள் அதிகம் பெறமுடிந்தது. நாசிக் கட்சிக்கு வாக்களித்தவர்கள் யார் என்று ஆராய்ந்த போது, தொழிலாளர்கள் 33 சதவீதமாகும். அதாவது உழைக்கும் மக்களின் பிரச்சனைகளை பாட்டாளி வர்க்க கட்சி தனது ஆணையில் வைக்க மறுக்கின்ற போதே, நாசிக் கட்சி உழைக்கும் மக்களின் நலனின் பெயரில் ஆட்சிக்கு வருகின்றனர். கிட்லரின் தேசிய சோசலிசம் என்ற கோசத்தை வைத்த போதும் சமூக ஜனநாயகக் கட்சியின் துரோகத்தின் துணையுடன் இதுவே நிகழ்ந்தது. கம்யூனிசக் கட்சி தனது துரோகத்தை, தொழிலாளர் வர்க்கத்தின் முதுகில் மேல் ஏறி ஒடுக்க துணைபோகின்ற வரலாற்றிலேயே நாசிகள் கொட்டமடிக்கின்றனர். துரோக கம்யூனிசக் கட்சி படிப்படியாக மக்கள் புறக்கணிக்க அது மறைந்து வருவதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. நாசிக்கட்சி தனது தேர்தல் வெற்றி பற்றிய பிரகடனத்தில், கம்யூனிஸ்ட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியை அழித்து அதில் தனது வெற்றியை நிலை நாட்டியதை பெருமைப்பட அறிவித்தனர். உண்மையில் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை கம்யூனிஸ்ட் கட்சியின் துரோக வரலாற்றின் மூலம் காட்டிக் கொடுத்ததன் மூலம், நாசிகளின் வரவை துரிதமாக்கினர். இதுவே ஐரோப்பா எங்கும் உள்ள பொதுநிலையாகும்.

அடுத்து சிறு உற்பத்தியாளர்கள் 20 சதவீதமும், உத்தியோகத்தர்கள் 20 சதவீதமும் அதிகமாக நாசிக்கு வாக்களித்தனர். ஆகக் குறைவாக வாக்களித்தோர் உயாந்த அதிகாரத்தில் இருந்தவர்களும், அறிவித்துறையினருமேயாகும். அதாவது 7 முதல் 8 சதவீதம் பேரே நாசிகளுக்கு வாக்களித்தனர். ஒட்டு மொத்த ஆண்கள் 22 சதவீதம் பேர் நாசிக்கு வாக்களித்த அதே நேரம் பெண்கள் 15 சதவீதம் பேரே வாக்களித்தனர். 25-34 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 22 சதவீதம் பேர் நாசிக் கட்சிக்கு வாக்களித்தனர். வீட்டுச் சொாந்தக்காரர் அல்லது தனியார் வீடுகளை வாடகைக்கு எடுத்தோர் நாசிக்கட்சிக்கு 17 முதல் 18 சதவீதம் பேரே வாக்களித்தனர். அதே நேரம் அரசு வீடுகளில் வசிப்போரில் 27 சதவீதம் பேர் நாசிக்கட்சிக்கு வாக்களித்தனர். வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களில் 23 சதவீதம் பேர் நாசிக்கட்சிக்கு வாக்களிக்க, வன்முறையால் பாதிக்கபடாதவர்கள் 14 சதவீதம் பேர் வாக்களித்தனர். உண்மையில் நாசிக் கட்சிக்கான வாக்களிப்பில் இந்த சமூக பொருளாதார பாதிப்பின் உடனடி வினைவுகள் சார்ந்து, அதிகம் பாதிகப்பட்டவர்களே வாக்களிக்கின்றனர். சமூக பொருளாதார பாதிப்பை உணர்ந்து அவதிப்படுவோர், நாசிசத்தின் பின் அணிதிரளுகின்றனர். சொந்த வேலை, சுரண்டலின் கொடூரம், வேலை இழப்புக்கு உள்ளாகும் நிலையில் உள்ளோர், வேலை இழந்தோர், சிறு உற்பத்தி இழக்கும் நிலையில் உள்ளோர், வேலையை தேடும் வயதுடையோர், அரசு வீடுகளில் வாழ்வோர், சமூக பொருளாதாரத்தில் ஏற்படும் வன்முறையால் பாதிக்கப்படுவோர் என அனைத்தும் இந்த சமூக அமைப்பின் வெடிப்புகள் சார்ந்தே, நாசிசம் வளர்ச்சி பெறுகின்றது. உண்மையில் ஒரு பாட்டாளி வர்க்க கட்சி சமூதாய பிரச்சனைகளுக்காக போராடவும், அதை மாற்றி அமைக்க போராடவும் தயாரற்ற நிலையில், நாசிக்கட்சி பாசிச வழிகளில் இதை பற்றி பிரகடனங்களை செய்கின்றனர்.

மக்கள் கட்சிகள் மேல் நம்பிக்கை இழக்கின்றனர். இரண்டவது சுற்றில் 17 லட்சம் வாக்குகள் யாருக்கும் போடாது காகித உறையை மட்டும் தேர்தலில் போட்டனர். இது இம்முறை மட்டும் அல்ல, கடந்த பல தேர்தலில் இவை ஒரு போக்காக தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. அத்துடன் மக்கள் வாக்களிக்க செல்வது என்றுமில்லாத குறைந்து வருகின்றது. மக்களின் நலன்களில் இருந்து கட்சிகள் விலகிச் செல்ல, நம்பிக்கை இழப்பு ஒருபோக்காக வளர்ச்சி பெறுகின்றது. இன்றைய கட்சிகள் மக்களின் வாழ்வை வேட்டையாடும் வகையில், மூலதனத்துடன் தம்மை இணைத்து ஆட்டம் போடும் போது, நாசிக்கட்சிகள் அந்த வெற்றிடத்தில் வெளிநாட்டவருக்கு எதிரான கோசத்துடனே தன்னை நவீனப்படுத்தியபடி முன்னிலைக்கு வருகின்றது.

ஐரோப்பாவில் நாசிகளின் வளர்ச்சி என்றுமில்லாத வகையில் வளர்ச்சி பெறுகின்றது. ஒஸ்ரியாவில் விடுதலைக் கட்சி 1999 இல் 26.91 சதவீத வாக்குகளைப் பெற்றது. இத்தாலியில் வடக்கு பாதை கட்சி 1996 இல் 10.1 சதவீத வாக்குகளை பெற்றது. இது 2001 இல் 3.9 சதவீத வாக்குளைப் பெற்றது. சுவிஸ்சில் ஒன்றுபட்ட மத்திய ஜனநாயக கட்சி 1999 இல் 22.5 சதவீத வாக்குகளைப் பெற்றது. பெல்ஜியத்தில் வலம்ஸ் பிளாக் 1999 இல் 15.5 சதவீத வாக்குகளை பெற்றது. 2000ம் ஆண்டில் 33 சதவீத வாக்குகளைப் பெற்றது. நெதர்லாந்து 2001ம் ஆண்டு உள்ளூர் தேர்தலில் நாசிக் கட்சி 34 சதவீத வாக்குகளைப் பெற்றது. இதன் தலைவரே இந்த வருட தேர்தலுக்கு முன்பாக பச்சைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சி உறுப்பினரால் கொலை செய்யப்பட்டார். நோர்வையில் முன்னேற்ற கட்சி 1997 இல் 15.3 சதவீத வாக்குகளைப் பெற்றது. 1993 இல் 6.3 சதவீத வாக்குகளையும், 1995 இல் 12 சதவீத வாக்குகளையும் பெற்றது. டென்மாாக்கில் டென்மார்க் மக்கள் கட்சி 2001ம் ஆண்டு 12 சதவீத வாக்ககுளைப் பெற்றது.. ஜெர்மனியில் பல கட்சிகள் தடை செய்யப்பட்ட நிலையிலும் மூன்று நாசிக் கட்சிகள் சட்டபூர்வமாக செயற்படுகின்றன. கம்பேர்க் உள்ளுர் தேர்தலில் முன்னேற்ற கட்சி 2001ம் ஆண்டு 19.4 சதவீத வாக்குகளைப் பெற்றது.

இவை ஐரோப்பிய ஜனநாயக அமைப்பில் முதலாளித்துவ ஆய்வாளர்களால் இனம் காணப்பட்டு, நாசிசமாக வரையறுத்தை அடிப்படையாக கொண்டது. உண்மையில் இதைவிட பல கட்சிகள் நாசிசத்துடன் கூட்டும், அருகாமையிலும் தமது கொள்கைகளை வைத்திருப்பவர்களை இது உள்ளடக்கவில்லை. சோசலிசக் கட்சிகள் உட்பட அனைவரும் இனநிற பேதத்தை அடிப்படையாக கொண்ட, வெள்ளையின ஐரோப்பிய மூலதனத்தை கட்டிப் பாதுகாப்பவர்களே. நாசிசத்தின் படிநிலை வளர்ச்சியில் பல படிக்கட்டுகளாக பல கட்சிகளும், சிந்தனை தளங்களும், செயல்முறைகளும் ஐரோப்பா எங்கும் செறிந்து காணப்படுகின்றது. மரபான கட்சிகளுக்கு வெளியில் இதற்கு எதிரான தன்னெழுச்சியான போராட்டங்களும், புரட்சிகரமான கட்சிகளின் தலைமையிலும் வர்க்கப் போராட்டங்களும் அலை அலையாக மக்களைச் சார்ந்து எழுச்சிபெற்ற வருகின்றது. அது நாசித்தை மட்டுமல்ல உலகமயமாதலையும் எதிர்த்தும், மூலதனத்தின் ஜனநாயக அமைப்பையே தகர்க்கும் கோசத்துடன் உலகம் எங்கும் எதிரொலிக்கும் வகையில் வளர்ச்சி பெற்று வருகின்றது.

# *வெளிநாட்டவர்கள் ஐரோப்பாவில்*

ஐக்கிய நாட்டு அறிக்கை ஒன்று 2050 ஆண்டுக்குள் ஐரோப்பாவை நோக்கி 130 கோடி மக்கள் குடியேறுவர் என்று கூறுகின்றது. அதாவது இவை ஆயுள் மரணங்களை உள்ளடக்கிய வகையில் வந்தோரை உள்ளடக்கியது. இன்று ஒவ்வொரு வருடமும் 12 லட்சம் மக்கள் ஐரோப்பாவிற்குள் வருகின்றனர். அத்துடன் ஐரோப்பாவில் வெளிநாட்டவர்கள் வருடாந்தம் 37 லட்சம் பேர் இறக்க 40 லட்சம் பேர் புதிதாக பிறக்கின்றனர். வெளிநாட்டவர் அதிகரிப்பு பிறப்பு ரீதியாக வருடந்தம் 3 லட்சமாக உள்ளது. வருடாந்தம் 5 லட்சம் பேர் சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குள் வருவது அதிகரித்துள்ளது. 1985 க்கும் 1990 க்கும் இடையில் ஐரோப்பாவுக்குள் வந்த வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை 5 லட்சமாக அதிகரித்து, வருகை 15 லட்சமாக மாறியுள்ளது. இது 1994 க்கும் 1997 க்கு இடையில் 10 லட்சமாக அதிகரித்தது வருகை 25 லட்சமாகியது. ஐரோப்பாவில் வெளிநாட்டவர் மொத்த சனத் தொகையில் 2.2 சதவீதமாக இருக்க, அமெரிக்காவில் 3 சதவீதமாகவும், கனடாவில் 6 சதவீதமாகவும் உள்ளது.

2000ம் ஆண்டில் உலககளவில் 12 கோடி மக்கள் நாடு கடந்து, புதிய நாடுகளுக்கு சென்றதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு அறிவித்துள்ளது. அதாவது உலகளவில் 500 மக்களுக்கு ஒருவர் நாட்டை விட்டு வெளியேறினர். இது தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. 1990 இல் 11 கோடி மக்களே நாட்டை விட்டு வெளியேறினர். இது 1965 இல் 6.5 கோடியாக மட்டுமே இருந்தது.

ஐரோப்பாவில் உள்ள மொத்த வெளிநாட்டவாகள் எண்ணிக்கை 1.8 கோடியாகும். உலகளவில் நாட்டை விட்டு வெளியேறுபவர்களில் ஆறுக்கு ஒருவரை விட சற்றுக் குறைவனவர்கள் ஐரோப்பா செல்லுகின்றனர். அமெரிக்காவுக்கு ஆறுக்கு ஒருவர் செல்லுகின்றனர். ஆசியாவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து வெளியேறும் 4 கோடி பேரில், மூன்றில் ஒருவர் இந்தியா பகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்.

ஐரோப்பாவில் வாழும் 37.4 கோடி மக்களில் வெளிநாட்டவர் எண்ணிக்கை 3.3 சதவீதமாகும். 1990இல் வாழ்ந்த வெளிநாட்டவர்களில் வாழும் நாட்டின் பிரஜாவுரிமை பெற்றவர்கள் நெதர்லான்டில் 6 சதவீதமாகவும், இத்தாலி மற்றும் லுக்சம்போர்க்கில் 1 சதவீதத்துக்கும் குறைவாகவும், ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் 3 சதவீதமாகவும், பிரான்சில் 2.5 சதவீதமாகும். ஐரோப்பாவில் பிறக்கின்ற குழந்தைகளில் 10 சதவீதமானவர்களின் தாய் தந்தை வெளிநாட்டவர்களாக இருக்கின்றனர். இது பிரான்சில் 10.2 சதவீதமாகவும், இங்கிலாந்தில் 13.2 சதவீதமாகவும், ஜெர்மனியில் 13.2 சதவீதமாகவும் உள்ளது. ஐரோப்பாவில் உள்ள வெளிநாட்டவர்களில் 65 சதவீதமானவர்கள் ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்தில் வாழ்கின்றனர். இதனுடன் பெல்ஜியம், இத்தாலி, நெதர்லந்தையும் இணைத்தால் 80 சதவீதமாக மாறுகின்றது.

1998 இல் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை ஐரோப்பாவில்

| நாடுகள் | லட்சத்தில் | தொத்த சனத் தொகையில் |
|---|---|---|
| ஜெர்மனி | 55 லட்சம் | 6.7 சதவீதம் |
| பிரான்ஸ் | 23 லட்சம் | 4 சதவீதம் |
| இங்கிலாந்து | 13 லட்சம் | 2.3 சதவீதம் |
| பெல்ஜியம் | 4 லட்சம் | 3.3 சதவீதம் |
| இத்தாலி | 7.5 லட்சம் | 1.3 சதவீதம் |
| கொலண்ட் | 5 லட்சம் | 3.1 சதவீதம் |
| ஸ்பானியோல் | 3.5 லட்சம் | 0.9 சதவீதம் |
| சுவீடன் | 5 லட்சம் | 4 சதவீதம் |

ஜெர்மனியில் அதிக வெளிநாட்டவராக துருக்கியைச் சோந்த 21 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். பிரான்சில் 7 லட்சம் அல்ஜீரியவைச் சேர்ந்தவர்களும், 6 லட்சம் மொரோக்கோவைச் சோந்தவர்களும் வாழ்கின்றனர். இங்கிலாந்தில் இந்தியாவைச் சேர்ந்த 1.4 லட்சம் பேர் வாழ்கின்றனர். இத்தாலியில் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் அதிகமாகவும், மொரோக்கோவைச் சேர்ந்தவர்கள் 1.3 லட்சம் பேரும், அல்பேனியாவைச் சேர்ந்த 1.4 லட்சம் பேரும் வாழ்கின்றனர். பிரிட்டனுக்குள் வாழும் வெளிநாட்டவர்களில் தகுதி வாய்ந்த உயர்ந்த உழைப்பில் 45 சதவீதமானவர்கள் ஈடுபடுகின்றனர். இந்த வகையில் வருடாந்தம் அவுஸ்ரேலியா, நியுசிலாந்து, வட அமெரிக்காவுக்கு 50000 பேர் வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்றனர். இப்படி வருபவர்களில் பெரும்பான்மையானவர்கள் மேட்டுக்குடி கலாச்சாரத்துடன் நெருங்கியவர்களாகவும் 17 முதல் 27 வயதுடையவராகவும் இருக்கின்றனர். உலகில் இருந்து வெளியேறுபவர்களில் 2 கோடி பேர் உயர் கல்வித் தகுதி பெற்றவர்களாகும். உண்மையில் மூன்றாம் உலக மக்களின் உழைப்பில் உருவாகும் இந்த மேட்டுக் குடிகள், அந்த மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான உழைப்புக்கே வேட்டு வைக்கும் வகையில் தம்மை நிலைநிறுத்துகின்றனர். அமெரிக்கா வருடாந்தம் 5 லட்சம் பேருக்கு விசா வழங்குகின்றது. இவை பெருமளவில் அமெரிக்கா பொரளாதார நலனக் சார்ந்தாகவே கையாளப்படுகின்றது. 1998 இல் இதை ஆராய்ந்தால் பல்கலைக்கழக பேராசியர்கள், விஞ்ஞானிகள், தனியார் உற்பத்தியில் உயர் அதிகாரியாக 40000 பேர் அமெரிக்கா சென்றனர். உயர்ந்த கல்வித் தரமுள்ளவர்கள் 40000 பேரும், வேலையில் உயர் தகுதியுடையவர்கள் 30000 பேருக்கு அமெரிக்கா விசா வழங்கியது. தனிப்பட்ட ரீதியில் விசேட உற்பத்தி செய்யும் தனிநபர்கள் 10000 பேருக்கும், 5 லட்சம் டொலர் முதலீடு செய்யக் கூடிவர்களும், 10 லட்சம் டொலர் முதலீட்டு 10 பேருக்கு வேலை வழங்க கூடியவர்களான 10000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேருக்கும் (இதன் மூலம் 1000 கோடி டொலரை மூன்றாம் உலக நாடுகளில் இருந்து, அமெரிக்காவுக்குள் கடத்திச் சென்றனர்) விசா வழங்குகின்றனர். கொள்ளையடிப்பில் அறிவின் வளம், உழைப்பின் திறன், மூலதனம் என்ற அடிப்படையில் அமெரிக்கா வருடாந்தம் 5 லட்சம் பேரை உள்வாங்குகின்றது. இதன் மூலம் உலகளாவிய சமூகச் சிதைவை விரைவாக்கின்றனர்.

கட்டுமானப் பணிக்காக 1974 க்கு முன் வெளிநாட்டவர்களை வேலைக்கு கொண்டு வருவது ஐரோப்பாவில் அதிகரித்தது. பிரான்சில் 1960-74 இடைப்பட்ட காலத்தில் வெளிநாட்டில் இருந்து வேலைக்கு கொண்டுவருவது அதிகரித்தது. இதனால் குடும்ப இணைப்புகள் பின்னால் படிப்படியாக அதிகரித்து பின் குறைந்தது. 1970 இல் 80000 ஆயிரம் பேர் குடும்ப இணைப்பு சார்ந்து சட்டபூர்வமாக பிரான்ஸ் வந்தனர். இது 1987 இல் 36000 பேரும், 1997 இல் 15000 பேரும், 1998 இல் 26000 பேருமாக குறைந்து வருகின்றது. இதே நேரம் ஜெர்மனிக்கு 1996 இல் 14000 பேர் மட்டுமே வந்தனர்.

அரசியல் புகலிடம் ஐரோப்பாவில் கோருவது 1998 இல் 3 லட்சம் பேரும், 1999 இல் 4 லட்சமாகவும் இருந்தது. இது ஜெர்மனியில் 1997-1999 இல் வருடாந்தம் 95 ஆயிரமாக இருந்தது, 2000ம் ஆண்டில் 78 ஆயிரமாக குறைந்தது. ஐரோப்பாவில் வெளி நாட்டவருக்கு எதிரான சட்டங்கள் கடுமையாக, இங்கிலாந்தில் புகலிடம் கோருவது அதிகரித்தது. அதாவது ஐரோப்பியாவுக்கு உள்ளான முரண்பாடுகள் சார்ந்து இது வளர்ச்சி பெற்றது. இது இங்கிலாந்தில் 1998 இல் 50 ஆயிரமாக இருந்தது. 1999 இல் 70 ஆயிரமாகவும், 2000ம் ஆண்டில் 98 ஆயிரமாகவும் அதிகாரித்தது. பிரான்சில் 1996 இல் 20ஆயிரம் பேரும், 1998 1999 இல் வருடாந்தம் 30 ஆயிரம பேரும், 2000ம் ஆண்டில் 39 ஆயிரம் பேரும் புகலிடம் கோரினர். 2000ம் ஆண்டில் அரசியல் புகலிடம் கோரி ஐரோப்பிய வந்தவர்களில் யூக்கோசிலவியாவைச் சேர்ந்தோர் 52300 பேரும், ஈராக்கைச் சேர்ந்தோர் 34700 பேரும், ஆப்கானைச் சேர்ந்தோர் 28800 பேரும், ஈரானைச் சோந்தோர் 27100 பேருமாவர். அதாவது ஏகாதிபத்தியங்கள் நடத்தும் உலகளவிய யுத்த வெறியாட்டங்கள், நாட்டை விட்டு வெளியேற்றுவதை துரிதப்படுத்துகின்றது.

ஐரோப்பிய மொத்த சனத் தொகை (மேற்கையும் கிழக்கையும் உள்ளடக்கிய வகையில்) 1998 இல் 72.9 கோடியாகும். இது 2050 இல் 62.8 சதவீதமாக வீழ்ச்சியடையும். இதன் மூலம் உழைப்பின் வளங்களை இறக்குமதி செய்வது தவிர்க்கமுடியாது. அதாவது 50 வருடத்தின் பின்பு, 1998 யை விட 10 கோடி மக்கள் ஐரோப்பாவில் குறைவாகவே வாழ்வர். இதில் இங்கு வாழும் வெளி நாட்டவர்களை உள்ளடக்கியதே. மூலதனத்தின் விரிவாக்கம் சுரண்டலை தீவிரமாக்கும் போது, ஐரோப்பிய வயோதிபர்களையும் குழந்தைகளையும் பராமரிக்க, வெளிநாட்டவர்களின் உழைப்பு வளம் ஐரோப்பாவில் நிபந்தனையாக உள்ளது.

உலகில் 225 உற்பத்தியாளர்கள் உலகில் 47 சதவீதமான எழை மக்களின் வருமானத்துக்கு சமமாக உலகைக் கொள்ளை அடிக்கின்றனர். இது 1960 இல் 20 சதவீதமான பணக்காரர்களின் வருமானம் சராசரியான 20 சதவீதமான ஏழைகளின் வருமானத்தை விட 30 மடங்கு அதிகமாக உலகில் இருந்தது. வருமானம் பணக்கார நாடுகளையும், அதில் ஒரு சிலரிடமும் குவிகின்ற போது சமுதாயப் பிளவுகள் அதிகரிக்கின்றது. பிழைப்பத் தேடி பணக்கார நாடுகளை நோக்கி வெளியேறுவதை நிபந்தனையாகின்றது. இந்த பணக்காரர்கள் உலகை கொள்ளையிட்டு சூறையாடும் வடிவம் வீங்கிச் செல்ல, பணக்கார நாடுகள் வழங்கிய உதவிகள் குறைந்தும் வருகின்றது. ஐக்கியநாட்டு சபை 1960 இல் 0.7 சதவீத வருமானத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளுக்கு கொடுக்க வேண்டும் என்பதை அமுல் செய்ய கோரியது. ஆனால் மூன்றாம் உலக நாடுகள் கொள்ளையடித்து கொழுக்கும் வளர்ந்த நாடுகள் 1997 இல் 0.22 சதவீதத்தை கொப்பதையே நிபந்தனைக்குள்ளாக்கினர். அமெரிக்காவோ 0.08 சதவீதத்தையே கொடுப்பதை கூட அதாவது 100 ரூபாவில் 0.08 சதத்தை வழங்கும் போது, அடிமைத்தனத்தை வக்கிரப்படுத்துகின்றனர். மக்கள் பஞ்சம் பிழைக்கும் அடிப்படைத் தேவைகள் கூட மறுக்கப்படுவது ஜனநாயமாகின்றது. ஆபிரிக்காவின் கடன் அந்த மக்களின் 70 சதவீதமான தேசிய உற்பத்திகது சமனாக மாறியுள்ளது. இதற்கு வட்டி கட்ட மக்களின் இரத்தத்தையே தானம் செய்ய நிர்ப்பந்திக்கின்றன மூலதனம். பிழைப்புத் தேடி 1980 க்கும் 1990க்கும் இடையிடையில் ஆபிரிக்காவில் இருந்த 60 லட்சம் மக்கள் வெளியேறியுள்ளனர். உலகில் தமது வாழ்விடத்தை விட்டு வெளியேறிய 3 கோடி பேரில், ஆபிரிக்காவில் மட்டும் 1.6 கோடியாக உள்ளது.

உலகாளவிய சமுதாய சிதைவுகள், பஞ்சம் பிழைக்கும் பிழைப்பைத் தேடி உலக அளவில் புலம் பெயர்வை நிபந்தனையாக்கின்றது. இந்த வகையில் 2001ம் ஆண்டு ஐரோப்பாவில் வந்து சட்டவிரோதமாக விசாக் கோரியோர்.

| | |
|---|---|
| ஜெர்மனி | 88 290 |
| பிரிட்டன் | 88 300 |
| பிரான்ஸ் | 47 290 |
| ஒஸ்ரியா | 30 140 |
| நெதர்லான்ட் | 32 580 |
| சுவீடன் | 23 520 |
| பெல்ஜியம் | 24 550 |
| டென்மாக் | 12 400 |
| அயர்லாந்து | 10 320 |
| ஸ்பானியோல் | 9 400 |
| இத்தாலி | 9 620 |
| கிறிஸ் | 5 500 |
| பின்லாந்து | 1 650 |
| லுக்கசம்போர்க் | 690 |
| போத்துக்கல் | 190 |
| ஐரோப்பா மொத்தமாக | 384 530 |

ஏழை நாட்டு மக்கள் பணக்கார நாட்டிடம் விசா கோருவதும், அதை பணக்காரன் மறுப்பதும் ஒரு ஜனநாயக விதியாக மாறிவருகின்றது. பணக்கார நாடுகள் உலகச் சூறையாட, நகரங்களை நோக்கி மக்களை புலம் பெயரக் கோருகின்றது. உலகம் ஒரு நாடாக, பணக்கார பிரதேசங்கள் நகரங்கள் ஆகிவிடுகின்றது. இந்த நகரங்களை நோக்கி மக்கள் அலை அலையாக புலம் பெயர்கின்றனர். உலகளாவிய புலம் பெயர்வுகள், உலகளாவிய மூலதனத்தினால் ஏற்படும் யுத்த நெருக்கடிக்குள் மேலும் துல்லியமாக அதிகரிக்க வைக்கின்றது. இந்த புலம்பெயர்வுகள் இந்த ஜனநாயக அமைப்பில் சட்டவிரோதமாக, மூலதனத்தின் வாலைப் பிடித்து தொங்கும் நாசிகள் படிப்படியாக தலை மேல் ஏறிவிடுகின்றனர்.

வேண்டாத விருந்தாளியாக இந்த மக்கள் கூட்டத்தை சித்தரித்து விசா மறுக்கப்படும் போது, சட்ட விரோதமான நடத்தைகள் அதிகரிக்கின்றது. சொந்த உடல் உழைப்பு கூட சட்டவிரோதமாகி, மிகக் குறைந்த கூலியைப் பெறும் நிலைக்கு தாழ்ந்துவிடும் போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூறையாடல் வரைமுறையின்றி அதிகரிக்கின்றது. ஐரோப்பாவின் தேசிய வருவாயில் 4 முதல் 20 சதவீதம் சட்விரோதமான உழைப்பு மூலம் இன்று பெறப்படுகின்றது. இருந்த போதும் இது தனியாக வெளிநாட்டவரை உள்ளடக்கி மட்டும் கிடைப்பது அல்ல.

வெளிநாட்டவருக்கு எதிரான நாசிகளின் மனிதவிரோத நடத்தைகள் அனைத்தும், இன்றைய ஜனநாயகத்தின் அச்சான மூலதனத்தின் விரிவாக்கத்தால் ஏற்படுகின்றது. மூலதனம் விரிவாக விரிவாக, மக்களின் அவலம் பன்மடங்காக அதிகரிக்கின்றது. இதில் நாட்டை விட்டு வெளியேறும் மக்களின் அவலம் தனியானதாகின்றது. இதையே நாசிகள் மேலும் துல்லியமாக அகலமாக்கி வேட்டையாட களமிறங்குகின்றனர். இதையே ஐரோப்பிய ஜனநாயகம் கம்பளம் விரித்து வரவேற்கின்றது.

குறிப்பு: நாட்டை விட்டு வெளியேறும் உழைப்பு சக்தி பற்றி விரிவாக, எனது நூலக விரைவில் வெளிவரவுள்ள ‘உலகமயமாதலும் சர்வதேசியமும்’ என்ற நூலில் விரிவாக ஆராய்துள்ளேன்.

# யுத்த வெறியர்களின் மத்தியஸ்தமும் சமாதனமும்

சுகந்தன்

## உலகமெங்கணும் அமைதியும் சமாதானமும் வேண்டி தரப்புக்களுக்கிடையில் தரகராக பணிபுரியும் நோர்வேயின் சமாதான வெண்புறா அதன் இறக்கைகளுக்குள் ஒளித்து வைத்திருப்பது என்ன?

ஆப்கானிஸ்தான் மீது நேரடித் தாக்குதலுக்கென தனது எவ்-16 அதி நவீன போர் விமானங்களை மத்திய ஆசியாவின், முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் ஒன்றான கீர்கிசிஸ்தானில் நிலை கொள்ள வைத்திருக்கும் இந்த நடவடிக்கை எந்த சமாதான முயற்சிகளில் சேரும்! ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்புக்கு தனது படைகளையும் விமானங்களையும், ஆசிகளையும் வழங்கிய நோர்வே அணிவகுத்து நிற்பது யாருக்குப் பின்னால்? எந்த சமாதானத்துக்கு? ஒருபுறத்தில் கொலைக்களத்துக்கு கொலைகருவி தந்தது மட்டுமின்றி கொலையாளியாகவும் பங்கேற்றிருக்கும் நோர்வே மறுபுறத்தில் புத்தருக்கு போதனை செய்யப் போகின்றது. எப்படி?

கீர்கிசிஸ்தானில் படைத்தளம் அமைத்து அதனை அண்டிய மத்திய ஆசியப் பிரதேசங்களின் மீது தனது மேலாண்மையையும் இராணுவமுற்றுகையையும் ஏற்படுத்தும் அமெரிக்க படைகளுக்கு உறுதுணையாக தனது படைக்கலன்களை அனுப்பிக் கொண்டிருக்கும் நோர்வேயின் நோக்கம் என்ன சமாதானமா? அமைதியா? நாட்டின் வரவு செலவுப்பட்டியலில் 50 கோடி நோர்வேஜிய நாணயம், இங்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் எவ்-16 விமானங்களை, தரை இலக்குகளை துல்லியமான தாக்கியழிக்கும் லேசர் கருவிகளோடு நவீனப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி போருக்கானதா சமாதானத்துக்கானதா?

எந்தவிதமான பொதுசன ஊடகங்களின் விவாதப்பிரதிவாதச் சலசலப்புகளும் இன்றி இவ்வாறான இராணுவப் பங்காளிப்பு பாத்திரத்தை நோர்வே கீர்கிசிஸ்தானில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய கூட்டு விமானப்படைக்கு தனது ஆகாயப்படை தளவாடங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கியதன் மூலம் ஆக்கிரப்பு நோக்கத்தை நிருபித்திருக்கிறது.

நோர்வேயின் விசேட படைப்பிரிவுகள், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஏற்கனவே பங்கு கொண்டிருந்தமை யாவரும் அறிந்ததே. இப்போது நாசகாரி விமானங்கள் கீர்கிசிஸ்தானின் ஆயயெள விமானப்படைத்தளத்தில் மையம் கொண்டிருக்கும் அமெரிக்க ஏவுபடைகளுடன் இணைந்திருந்து செய்யப்போவது என்ன சமாதானமா? சமாதானத்துக்கு நோபல் பரிசில் வழங்கும், உலகெங்கும் சமாதான தேவதையாக வேடமிட்டிருக்கும் நோர்வே உண்மையில் 1991 இலிருந்து நேரடியாகவே போர்களில் ஈடுபட்டிருக்கின்றது.

இலங்கையில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தி யுத்த மீறல் கண்காணிப்பிற்கு பொறுப்பேற்றிருக்கும் நோர்வேயின் மறுமுகம் நோக்கம் என்ன? நோர்வேயின் முதுகுக்குப்பின் ஒளிந்திருப்பது நயவஞ்சகமான அமெரிக்க ஏகாதிபத்திய மேற்குலக நாடுகளின் சுரண்டல் பொருளாதார நலன்களும், உலகமயமாதல் கனவுகளும், இராணுவ நலன்களும் தான். ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகின்ற கதை வெளிப்பட நாட்கள் தூரத்தில் இல்லை.

செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்கா மீதான தாக்குதலின் பின்னாலே தான், பயங்கரவாதத்துக்கு எதிராக கச்சை வரிந்து கட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கு பயங்கரவாதத்துக்கு எதிரான பொது நோக்குப் போரில் கைகொடுக்கும் நோர்வேயின் நடவடிக்கையாக இருக்கின்றது என்பதை, படையனுப்பிய நிகழ்வு காட்டுகின்றது. ஆனால் மத்திய கிழக்காசியா என்பது ஐரோப்பிய ஆசிய வலயத்துள் ஒருங்கே கிடக்கும் நாடுகளின் மீதான இராணுவப்பிடியின் திறவுகோல் என்ற இராணுவ உபாயத்தில் குறிகொண்டலையும் அமெரிக்க இராணுவ இரும்புப்பிடியை இறுக்கி, இப்பிராந்தியங்களில் உள்ள முன்னாள் சோவியத் குடியரசுகளாகவிருந்த உஸ்பெகிஸ்தான், கீர்கிஸ்தான் போன்ற நாடுகளின் அவல நிலையைப் பயன்படுத்தி அந்நாடுகளை வியூகம் கொண்டு மத்திய கிழக்காசியாவின் மீதான தனது நீண்ட நாளைய ஆக்கிரமிப்பு வளைப்புக்களை செய்வதே அமெரிக்காவின் கனவாகும். இது செப்டம்பர் 11 ம் திகதிக்கெல்லாம் முன்னமேயே இடப்பட்ட திட்டமாகும். காலம் கனிந்து இலகுவாக ஆக்கிரமிப்புக்களை செய்ய பயங்கரவாதப் பூச்சாண்டி காட்ட முடிந்தது என்பது மட்டுமே செப்டம்பர் 11 ம் திகதிக்குப் பின்னதான விளைவாகும். உலகைப் பேய்க்காட்டுவதற்கு அவர்களுக்கு செப்படம்பர் 11 ம் திகதி ஒரு சாட்டு. மற்றைய உலகநாடுகளின் மீதான அராஜக இராணுவ நடவடிக்கைகளுக்கு உள் நாட்டில் கிளம்பும் எதிர்ப்பை சமாளித்துக்கு கொள்ளவும் இந்த பயங்கரவாதப் பூச்சாண்டி நன்கு பயன்படுகின்றது.இதே போல் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கு பக்கப்பாட்டு பாடவும், ஏன் நேரடியாக போருக்கு படைபலம் தரவும் நோர்வே போன்ற மேற்குலக அரசுகளுக்கு இது வசதியான சாட்டாகுமே தவிர, இவர்கள் சமாதானத்தின் தூதுவர்கள் அல்லர். நோர்வே போருக்கு குதித்திருப்பது அமெரிக்க சர்வதேச இராணுவ விரிவாக்கத்திட்டத்திற்கு உறுதுணை புரிவதற்காக அன்றி வேறொன்றல்ல.

சீன எல்லையிலிருந்து ஆக 25 மைல்கள் தூரத்திலேயே இந்த அமெரிக்க கூட்டு விமான ஏவுபடைகள் இருப்பது கவணத்துக்குள்ளாகியுள்ளது. இந்தப் பிரதேசங்களில் இராணுவ பிரிவுகளை வைத்து சுற்றி வளைப்பதன் மூலம் சீனத்தின் வாசலில் தனது படையணியை பலப்படுத்தும் அமெரிக்க நடவடிக்கையின் ஒரு கூறு இதுவெனவும், எண்ணெய் குழாய் நிர்மாணத்துக்கும், அது ஊடறுக்கும் நாடுகளின் அரசுகளை தனது இராணுவப்பிடிக்குள் கட்டி வைக்கும் நடவடிக்கைக்கும், எதிர்காலத்தில் முரணான நிலையெழும் வகையில் ருசியா நடவடிக்கைகளில் இறங்குமாயின், அதன் வாசலியே அதனை எதிர் கொள்ளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவ நிலைகளை வைத்திருப்பதற்குமான ஒரு இராணுவ போர்வியூகத்தின் முன்னோடிய தயாரிப்பு வேலை தான் இந்த கீர்கிஸ்தான் விமானப்படைக்கூட்டு மையமாகும். இதற்கும் பயங்கரவாதத்தை எதிர்த்த போருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

மத்திய ஆசியா , அதனுடைய ஐந்து முன்னாள் சோவியத் குடியரசுகளான துர்க்மேனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கசாக்ஸ்தான், தாட்சிகிஸ்தான், கீர்கிசிஸ்தான் என்பவை உள்ளடங்க, ஈரான், ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான், இந்தியா நாடுகளுக்கு வடக்கில் அமைந்திருக்கும் அதேவேளை அதன் மேற்கெல்லையாக கஸ்பிக்கடலையும், கிழக்கில் சீனாவையும் கொண்டு அமைந்திருக்கும் ஒரு இராணுவ கேந்திரமான பிரதேசமாகும். அது மட்டுமல்லாமல் அது எண்ணெய், எரிபொருள் மூலவளங்களை பெருமளவில் தன்னகத்துள் கொண்டது. வல்லரசுகளின் இந்த எண்ணெய் வளத்தின் மீதான போட்டா போட்டிக்கு இந்தப் பிரதேசம் குறிவைக்கப்பட்டிருக்கின்றது. செப்டம்பர் 11 ம் திகதிக்குப்பின் இந்த நாடுகள், இவை ருசியாவின் பின்புல நாடுகளாக இருந்துகொண்டிருப்பினும் (இந்த முன்னாள் 5 சோவியத் குடியரசுகளும்) தமது நாட்டை அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கும், தளம் அமைப்பதற்கும் திறந்து விட்டன. இந்த அமெரிக்க படைகளின் வரவு மத்திய ஆசியாவின் சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயமாகும். அமெரிக்க, மேற்குலக இராணுவம் முதல் தடவையாக இப்பிரதேச மண்ணில் மகா அலெக்சாண்டரின் ( கி.மு 334) பின் முதல் தடவை காலடி பதித்திருப்பது இப்போது தான்.

சீனத்தேசத் தலைமைகளால் இந்த படைவரவு சீனத்தை முற்றுகை கொள்ளும் நடவடிக்கையாக உணரப்பட்டுள்ளது. ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஆதிக்கப் போட்டிகளில், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் என்றுமில்லாதவாறு தமது இராணுவ வல்லமையை கட்டியமைக்கும் முயற்சியில் போட்டாபோட்டி போடுகின்றன. இந்த வல்லமைகளோடு உலகின் எஞ்சிய நாடுகளின் மீதான ஆதிக்கத்துக்கு அமெரிக்காவுடன் ஈடாக பலத்தில் நிற்பதற்காக தயார் செய்கின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் கொண்டிருக்கும் நாடுகள் அமெரிக்க இராணுவ விஸ்தீரணத்தைக் கண்டு அது தமது கட்டுக்கோப்புக்குள்ளிருக்கும் மற்றை நாடுகளின் மீதான தமது மேலாதிக்க நலன்களை கொள்ளை கொண்டு போய் விடும் என்று அஞ்சுகின்றன என்று அண்மையில் வெளியான வுாந நுஉழெழஅளைவ எழுதியுள்ளது. இன்றைய அமெரிக்க உலக ஒழுங்குக்கு சரி சமமாக தாமும் தம்மை சரி செய்து கொண்டு தயாராகாத வரை, தாம் ஓரம் கட்டப்பட்டு விடுவோம் என்ற அச்சம் இந்நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

சிறிய நோர்வே போன்ற மேற்குலக நாடுகள், தமது பாட்டுக்கு சும்மா இருந்துவிடமுடியுமா? அவை அமெரிக்காவின் முதுகுப்பின் ஒளிந்திருப்பது தேவையாகி விடுகிறது. இந்த கூட்டுச் சேர்க்கைக்கு ஒசாமா பின்லாடனோ, பயங்கரவாதமோ அல்ல பின்னணி. உலகை அடக்கி, உழைப்பை கசக்கி பிழிந்து சுரண்டிக் கொழுக்கும் அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய போட்டா போட்டிகளும் குழுச் சேர்க்கையும் தான் காரணம்.

அந்த வகையில் நோர்வே இலங்கை பிரச்சனையை எடுத்துக் கொண்டால் அமெரிக்காவுக்கு இலகு வழி சமைக்கும் ஒரு சமாதான வேடதாரி தான் நோர்வே. தமிழ் மக்கள் மீதோ, சிங்கள மக்கள் மீதோ பாசமும் பற்றும் கொண்டு சமாதானத்தை உருவாக்கித் தர இவர்கள் வரவில்லை. இருபத்தியோராம் நூற்றாண்டு புதிய அமெரிக்க சகாப்தமாக விளங்கும் என்று கூறிய கிளின்ரனின் கூற்றுக்கு இவர்கள் தான் கதாபாத்திரங்கள். உலக ஆக்கிரமிக்கவும், மறு காலனியாக்கவும் நோர்வை போன்ற நாடுகளின் சமாதான வேடங்கள் கூட படிகற்கள் தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரிந்துணர்வு உடன்பாடும் மக்களின் அவலங்களும்

*தமிழ் மக்களின் பிரச்சனை என்ன? அவர்களின் அடிப்படை சமூக பொருளாதார பண்பாட்டுத் தேவைகளை எப்படி பூர்த்தி செய்வது? தமிழ் மக்களின் தேசிய போராட்டம் யாருக்கு எதிரானது?* இவற்றை தெளிவாக விளக்கும் வகையில் **"இலங்கை யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாதலின் பரிணாமமும்"** என்ற எனது 112 பக்க சிறு நூல் ஒன்று விரிவாக ஆராய்கின்றது. பார்க்கவும். இதற்கு வெளியில் புரிந்துணர்வு உடன்பாட்டின் இன்றைய நிலைமையை இக் கட்டுரை குறிப்பாக ஆராய்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பும் தமது நலன் சார்ந்து கையெழுத்திட்ட ஒப்பந்தமே. கையெழுத்திட்டவர்கள் அதை கடைப்பிடிப்பது ஒரு அடிப்படையான விடையமாகும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைதிக்கானதும் சமாதனத்துக்குமானதும் எனக் கருதும் ஒவ்வொருவரும், இதன் மீறல்களை கண்டிப்பது அவசியமானதும் நிபந்தனையானதுமாகும். இந்த அமைப்பினுள் அமைதி சமாதனம் என்று கோருபவர்கள், செய்து கொண்ட ஒப்பந்தத்தின் இருதரப்பு மீறலையும் நிபந்தனையின்றி கண்டிக்க வேண்டும். கண்டிக்க மறுப்பவர்கள், தாம் கூறும் அமைதி சமாதானம் என்பது வெறும் பித்தலாட்டமே என்பதை தமது நடத்தைகள் மூலம் வெட்ட வெளிச்சமாக்கின்றனர். இன்று புலிகள் சார்பாக நின்று அரசின் மீறல்களை மட்டும் கண்டிக்கும் போக்கு, சமாதானம் அமைதி மீதான வேடத்தை வெகுளித்தனமாக மாற்றியுள்ளது. ஆக்கிரமிப்பாளன் ஆக்கிரமித்த பிரதேசத்தில் புரிந்துணர்வை மீறுவது என்பது மிககுறைவாக சமகாலத்தில் இருந்துள்ளது. (பார்க்க கண்காணிப்பு குழு அறிக்கையை) இந்த மீறல் தன்னிச்சையாகவும், ஆக்கிரமித்து வாழ்ந்த வாழ்விடங்கள் சார்ந்துமே அதிகமாக இருந்துதுள்ளது. ஆனால் புலிகள் சொந்த மக்கள் மேல் புரிந்துணர்வு மீறலை செய்வது என்றுமில்லாத

www.tamilarangam.net

**வகையில் அதிகரித்துள்ளது. இவை தன்னிச்சையாக அல்ல. இவை தலைமையின் வழிகாட்டலுக்குட்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் தொடர்ச்சியாக நிகழ்கின்றது. இவர்கள் தாமே செய்து கொண்ட புரிந்துணர்வும், அதன் மீதான மீறலையும் இதுவரை யாரும் மக்கள் நலனில் நின்று கண்டிக்கவில்லை. தனிப்பட்டவர்கள் மட்டும் கண்காணிப்பு குழுவுக்கு தம் மீதான சொந்த மீறல்களை அறிவித்ததுடன், பல மடங்கு அத்துமீறல்களை சொந்த வாய்க்கு வெளியில் முன்வைக்க முடியாத பீதிக்குள் முடங்கிவிடுகின்றனர். அத்துமீறல்கள் ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக இருந்து கண்டிக்க தவறியிருந்தாலும் கூட, நாம் அதன் தார்ப்பரியத்தை ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால் அதுவே சொந்த மக்களுக்கு எதிராக இருப்பதால், இதை எப்படி ஏற்றுக் கொள்வது. சமாதனம் அமைதி தமிழ் மக்களின் உன்னதமான வாழ்வு என்று கூறி செய்த ஒப்பந்தத்தை தாமே மீறிவிடும் போது, அதன் பின் வால்பிடித்து செய்யும் பினாமி அரசியல் மற்றும் கருத்துகள் தமிழ் மக்களின் அமைதியான சமதனமான வாழ்வுக்கே வேட்டு வைக்கின்றது. இதை நாம் விரிவாக பார்ப்போம்.**

யுத்தநிறுத்தம், அமைதி, சமாதானம் என்பது எப்போதும் மக்களுக்கானதே. ஆனால் அது சிலரின் குறுகிய நலன் சார்ந்துவிடும் போது, மக்களின் அவலம் ஆறாகவே பெருகுகின்றது. மக்களுக்கு எதிரானதாகவே யுத்தநிறுத்தம், அமைதி, சமாதானம மாறிவிடுவதை அண்மைய புரிந்துணர்வு உடன்பாடு நிறுவுகின்றது. மக்களின் அவலத்தை புதிய வடிவில் ஒழுங்கமைப்பதே புரிந்துணர்வு உடன்பாடு என்றால், சமுதாயதச் சிதைவு மேலும் துரிதமாவது தவிர்க்கமுடியாது. எதிரி மேலும் பலம் பெறவும், ஆக்கிரமிப்பு நியாப்படுத்துவதற்கும் குறுந்தேசிய வாதிகளின் நடத்தைகள் அத்திவாரமாகிவிடுகின்றது. எதிரி ஆயுத முனையில் மட்டும் தமிழ் மக்களை அடக்கியாளவில்லை என்ற உண்மையை நாம் புரிந்து கொண்டாகவேண்டும். எதிரிகளும் புலிகளும் ஒரே பொருளாதார கொள்கையை கொண்டு இருப்பதாலும், உலகமயமாதலை இருவரும் ஒரேவிதமாக கையாண்டு தேசியத்தை விற்பதாலும், அரசியல் முரண்பாடு இவர்களுக்கிடையில் இருப்பதில்லை. உண்மையில் ஆக்கிரமிப்பின் மனித விரோதத்தை புலிகள் தமது குறுகிய நலனில் இருந்து அரசியலாக்கின்றனர். இதேபோன்று குறுந்தேசியவாதிகளின் மக்கள் விரோதத்தை, ஆக்கிரமிப்பாளன் குறுகிய நலனில் இருந்து அரசியல் ஆக்கின்றன். மக்களுக்கு வேறு தெரிவற்ற நிலையில் இரண்டு தளத்திலும், காலத்துக்கு காலம் மாறுபட்டு வெளிப்படும் மக்கள் விரோத தன்மைக்கு இசைவாக மக்கள் ஊசலாடுகின்றனர். அரசு இரணுவ வழிகளின் மட்டும் தமிழ் மக்களை அடக்கியளவில்லை. புலிகளின் மக்கள் விரோத நடத்தைகளை அரசியலாக்கியுமே, தமிழ் மக்களை அடக்கியாள முடிகின்றது. இன்றைய புலிகளின் நடத்தைகள் ஆக்கிரமிப்பாளனின் இராணுவ வழியை விட அரசியல் வழியை பலப்படுத்துகின்றது. புலிகளின் மக்கள் விரோத அரசியலை அரசு, தனது ஆக்கிரமிப்புக்கு சாதகமாக பிரச்சாரமின்றியே மாற்றியமைக்கின்றது. புலிகள் ஆப்பிழுத்த குரங்காகவே செயற்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள பௌத்த இனவாத அரசு தமிழ் மக்கள் மேல் தொடர்ச்சியாக நடத்திய ஒரு இன அழிப்பு யுத்தம், பல்வேறு வழிகளில் மக்களின் அடிப்படை வாழ்வையே சிதைத்தது. பொருளாதார கட்டுமானங்கள், பண்பாட்டு கலாச்சார அடிப்படைகள், சமுதாயத்தின் கூட்டு வாழ்வியல் தொடங்கி குடும்பங்களை சிதைப்பது வரை, எல்லா வழிகளிலும் மக்களின் வாழ்வின் ஆதாரங்களை அழித்து ஒழித்தது. குறிப்பாக கடந்த 20 வருடங்களில் சீரான அழித்தொழிப்பு சார்ந்து வளர்ச்சி கண்ட இனவாத யுத்தம், தமிழ் மக்களை மட்டுமின்றி மலையக முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் வாழ்வையும் கூட அழித்துள்ளது, அழித்து வருகின்றது.

இந்த இனவாத யுத்தம் 60000 மேற்பட்ட தமிழ் மக்களை பலிகொண்டது. புலிகளில் அண்ணளவாக 18 ஆயிரம் போராட்ட வீரர்களை பலிகொண்டது. மற்றைய இயக்கங்களில் சில ஆயிரம் வீரர்களையும் (1987க்கு முன்பாக), இராணுவத்தில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டோரையும் யுத்த முனையிலும், அழித்தொழிப்பிலும் பலியெடுத்தது. இதைவிட போராடியவர்களை உள் இயக்க படுகொலைகள் தொடங்கி மாற்று இயக்க படுகொலைகள் ஒரு தேசிய அரசியலாகியது. இந்த அரசியல் மக்கள் விரோத படுகொலைகள் முதல் சமூகத்தின் முன்னேறிய சமூக சிந்தனை கொண்டவர்களையும் விட்டுவிடவில்லை. ஒட்டு மொத்தமாக 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பேரை ஏன், எப்படி, எதற்காக இவை என்று கேட்டதற்காகவே படுகொலை செய்த வரலாறு தொடருகின்றது. அத்துடன் எல்லைப்புற அப்பாவி சிங்கள முஸ்லிம் கிராமங்கள் மீதான தாக்குதல்கள் படுகொலைகள் மற்றும் பொதுவாக உழைக்கும் மக்கள் கூடும் இடங்களில் நடத்திய குண்டு வெடிப்புகள் மூலம், 5 முதல் 10 ஆயிரம் மக்கள், போராடியவர்களால் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். சிங்களச் சிறையில் விசாரணையின்றி கால வரைமுறையின்றிய ஒரு தலைமுறை அடைபட்டு துன்பத்தை துயரத்தை அனுபவிக்கின்றனர். தமிழ்ச் சிறைகளில் சித்திரவதை படுகொலை என்று கதறல்கள் தொடருகின்றது. இவர்களின் கதறல்கள் எதுவும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கும் சரி, தேசியத்துக்கு சரி, கேட்டுவிடாத காதடைப்பில் சமாதானம் பற்றி புலம்புகின்றனர்.

தமிழ் பெண்களின் துயரம் வரைமுறையற்றது. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பெண்கள் விதைவைகளாகியுள்ளனர். யுத்தம் காரணமாக குடும்பத்தில் இருந்து வெளியேறும் ஆணினால், பெண்களின் வாழ்க்கை நரகமாகி நாசமாக்கியுள்ளது. ஆணாதிக்க நெருக்கடிக்குள்ளும் நீடித்த இயல்பான பாலியல் தேவைகள் சிதைந்தன் மூலம், சமூகம் மனநோய்க்குள்ளாகின்றது. அத்துடன் வெளிநாடுகளை நோக்கி புலம் பெயர்ந்த சில லட்சம் ஆண்களால், பெண்களின் சுமை தலைக்கு மேல் எற்றியது. குழந்தைகளின் புலம் பெயர்வு, இராணுவ கடத்தல்கள் கைதுகள், இயக்கத்துக்கு செல்லல் மற்றும் கடத்தல்கள், மாற்றுக் கருத்து கொண்டிருந்தால் வீதிப் படுகொலைகள் முதல் காணமல் போனவர்கள் என நீளும் பட்டியல், பெண்ணின் தாய்மைப் பண்பில் பாரிய வேதனையுடன் கூடிய துயரத்தையும் மனநோயையும் உருவாக்கியுள்ளது. தாய் தந்தையின் சமூக அரவணைப்பற்ற நிலையால், குழந்தைகள் வக்கிரப்பட்டு ஆயுத கவர்ச்சிக்குள்ளாகியும் லும்பன் நிலையை அடைகின்றனர். சுற்றத்தையும் உறவுகளை இழந்த சமூகத்தில், குடும்ப பொறுப்பு உட்பட அனைத்து சுமையையும் சுமக்கும் அவலத்தைச் பெண்கள் சந்திக்கின்றனர். யுத்த பிரதேசத்துக்கே உரிய பொருளாதாரத்தை பெண்கள் ஈடுகொடுத்த வாழ்வு என்பது, ஆணாதிக்க பாலியல் வக்கிரத்தின் நெருக்கடிக்குள் பெண்ணை பாலியல் அடிமையாக்குவது, சுரண்டுவது, சூறையாடுவது ஒரு வடிவமாகியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து சிலருக்கு செல்லும் ஏகாதிபத்திய கறைபடிந்த பண நோட்டுகள், இரண்டு நேர் எதிரான சமூக வாழ்வை தமிழ் மண்ணில் வீங்க வைத்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மண்ணில் வாழ்வின் ஆதாரங்களான நிலத்தை வைத்திருந்தவர்களின் தயவில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள், உழைப்பும் கூலியுமின்றி பஞ்சம் பிழைக்கின்றனர். மூலதனமின்றிய, கூலியுமின்றிய வாழ்வை வாழ்வது என்பது, அவர்களின் சாதிய அடிமை விதியாகியுள்ளது. நிலபுலமின்றி, சாதிய அடிமைத்தனத்தில் சிக்கி வாழும் வாழ்வு கோரமானதாகவும் கேவலமானதாகவும் உள்ளது. தேசியம் உயர்சாதி ஆதிக்கம் சார்ந்து ஆயுதபாணியாகிய போது, அவர்களின் இயல்பான எதிர்ப்புகளைக் கூட ஒடுக்குவது தேசிய உணர்வாகியது. உயர்சாதிய தேசிய ஆட்சி அமைப்பில் இந்த மக்களின் துயரத்தையிட்டு எதையும், எந்த தேசிய தலைவனும் இந்த மக்களுக்காகச் செய்துவிடவில்லை. இன்று வடக்கில் பெரும்பான்மை மக்களாக தாழ்த்தப்பட்டவர்கள் மாறிவிட்ட நிலையிலும், சொத்துரிமை மற்றும் பொருளாதார ஆதாரமின்றி சிறுபான்மையினரின் அடிமைகளாக நக்கி பிழைக்கின்றனர். இதை மீறுவது தேசிய குற்றமாக, தேசத் துரோகமாக கருதி அடக்கப்படுகின்றனர். கஞ்சிக்கு அரசின் தயவில் கிடைக்கும் கூப்பன் அரிசியில், காலத்தை ஒட்டுவது தேசிய விதியாகிவிட்டது.

சிங்கள ஆக்கிரமிப்புகள் கூர்மையான போது, தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டு வெறும் கையுடன் அகதியாகிய புலம்பெயர்வுகள் எண்ணிக்கையில் அடங்காதவை. ஒட்டமொத்த பிரதேசங்களை இனவாத அரசு ஆக்கிரமித்த போது, அந்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் ஒட்டுமொத்தமாகவே வேறு பிரதேசங்களுக்கு புலம் பெயர்ந்தனர். இதில் போராடியவர்களின் குறுகிய நலன்களும் இனைந்த போது, இந்தப் புலம் பெயர்வின் சோகம் பலமடங்காகியது. இனவாத யுத்தமும், போராடியவர்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளும் கூர்மையாகிய போது, மேற்கு நோக்கி 5 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களை, சொந்த மண்ணில் இருந்தே துரத்தியுள்ளது. இதைத் தவிர இந்தியா மற்றும் மத்திய கிழக்கை நோக்கியும் 2 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களை நடுகடத்தியுள்ளது. வடக்கு கிழக்கு அல்லாத பிரதேசங்களை நோக்கி 10 லட்சம் வரையிலான தமிழ் மக்களை புலம் பெயரவைத்துள்ளது. தமிழ் மக்கள் தமது சொந்த வாழ்விடத்தை பறிகொடுத்து, சொந்த உறவுகள், பண்பாடுகள், பொருளாதார ஆதாரங்களை எல்லாம் இழந்து, சொந்த மண்ணுடன் இருந்த இரத்த உறவையே கைவிட்டு விடுமளவுக்கு யுத்தத்தின் கோரம் எள்ளி நகையாடியது, நகையாடுகின்றது. தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையையே கேள்விக்குள்ளாக்க, இந்த புலம்பெயர்வு கோரத் தொடங்கியுள்ளது. புலிகளின் அதிகாரத்தில் கடந்த 15 வருடமாக தமிழ் குறுந்தேசியவாதம் வக்கிரமான போது, சொந்த மண்ணைவிட்டு வெளியேறிவது ஒரு போக்காகியது. இவை மேலும் துல்லியமாக வளர்ச்சி பெறுகின்றது. சுயநிர்ணயத்தை அழித்தொழிக்கும் பலவடிவங்களை புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பும், என்றுமில்லாத வகையில் சமூகம் கண்டு வருகின்றது.

குறுந்தேசியவாதிகளின் மக்கள் விரோத தேசிய விரோத அரசியல், முஸ்லீம் மக்களை சொந்த மண்ணிலேயே எதிரியாக்கியுள்ளது. யாழ்குடா நாட்டில் வாழ்ந்த பாரம்பாரிய முஸ்லீம் மக்களை, அங்கிருந்தே உடுத்த உடுப்புடன் துரத்தினர். மன்னார், முல்லைத்தீவு வவுனியா தொடங்கி கிழக்குவரை விரிந்த தளத்தில் முஸ்லிம் விரோதப் போக்கு கையாளப்பட்டது. கிழக்கில் முஸ்லீம் கிராமங்கள் முதல் பள்ளிவாசல்கள் வரை கூட்டம் கூட்டமாகவே மக்களை படுகொலை செய்யவும், கிராமங்களை விட்டு துரத்துவதும் கூட தமிழ் தேசிய விடுதலைப் போராட்டமாகி தியாகமாகியது. இது போன்று அப்பாவி சிங்கள மக்களையும் கிராமாகவே எல்லையோரங்களில் கொன்றுவிடும் தேசிய விடுதலை நிகழ்வுகள் தொடர்ச்சியாக நிகழ்ந்தன. இதற்கு பதிலடியாக தமிழ் மக்களை ஈவிரக்கமின்றி கொன்றுவிடும் நிகழ்வுகள் நிகழ்ந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

35000 சிங்கள இனவாத பௌத்த இராணுவ வீரர்கள் இராணுவத்தை விட்டு ஒடிய அளவுக்கு, எந்த இராணுவ வீரனும் புலிகளிடம் சரணடையவில்லை. எதிரியை ஈவிரக்கமின்றி கொன்றுவிடும் காட்டுமிராண்டித்தன நிலைக்கு போராட்டம் தரம் தாழ்ந்தால், இன்று வரை புலிகளுக்கு எதிரான சிங்கள இனவாத இராணுவமாக இராணுவம் நீடிக்கமுடிகின்றது. சரணடைவே மரணம் என்கின்ற போது, போராடிமடிவது எதிரியின் (கூலி இராணுவத்தின்) வீரமாகிவிடுகின்றது. கொன்று விடுவதே தேசியமாகி வீரமாகின்ற போது, எதிரி இறுதி வரை தன் உயிருக்காக போராடும் பண்பு வளர்ச்சி பெறுகின்றது. புலிகளிடம் சரணடைந்த இராணுவ எண்ணிக்கையை விட, இராணுவத்திடம் சரணடைந்த புலிகளின் எண்ணிக்கை அதிகமாகும். குறிப்பாக புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பின் பல பத்து போராளிகள், சிங்கள அரசிடம் சரண் அடைந்துள்ளனர்.

இலங்கையில் அமைதி, சமாதானம் என அனைத்தும் ஒட்டு மொத்த மக்களுக்கும் வழங்கப்படவேண்டும். அவர்களின் வாழ்வியல் முன்னேற்றம் தான் உண்மையான அமைதியும் சமாதானமுமாகும். ஆனால் மக்களின் அடிப்படையான வாழ்வியல் மீது இந்த புரிந்துணர்வு ஏற்படவில்லை. மக்களின் துன்பங்கள் துயரங்களை துடைக்கும் வகையில் புரிந்துணர்வு எற்படவில்லை. மாறாக புலிகளின் குறிப்பான நலன்களில் இருந்தும், அரசின் நலன்களில் இருந்தும் இந்த புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. இந்த புலிகளின் குறிப்பான நலன்களில் இருந்து கிடைக்கும் எச்சில் இலைகளில் தான், மக்கள் நலன்கள் வாயளவில் பேசப்படுகின்றது. மறு தளத்தில் மக்களின் சுமை, புதிய வடிவில் புலிகளின் நலன் சார்ந்து அதிகரித்து வருகின்றது.

## புலிகள் நலனும் மக்களின் துயரமும்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான போது புலிகளும் அவர்களின் பினாமிகளும் கூறியது என்ன? யுத்த அவலத்தில் இருந்து மக்களை மீட்கவும் அவர்கள் பொருளாதார ரீதியாக மூச்சுவிடவும், இடைகால நிர்வாகம் தமது கையில் தரப்படவேண்டும் என்றனர். மக்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் யுத்த அவலங்களை நிவர்த்தி செய்யும் நிவாரணத்தை செய்யப் போவதாக அறிவித்தனர். மக்கள் மத்தியில் அரசியல் வேலை (இப்படி கூறியதன் மூலம், இவ்வளவு நாளும் மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்யவில்லை என்பதை ஒத்துக் கொண்டனர்) செய்யப் போவதாக கூறினர். சர்வதேச நிருபர்களை சந்தித்தது, முஸ்லீம் தலைவர்களை சந்தித்தது என்று பல தரப்பட்டவர்களுடன் முதன்முதலாக உரையாடினர். தாம் இனிமேலும் புலிகள் அல்ல, பூனையாகி விட்டதாக கூறாமல் கூறிச் சத்தியம் செய்தனர். மக்கள் தமிழ் மக்கள் என்று அடிக்கடி கூறுவது வார்த்தைக்கு வார்த்தை அதிகரித்தது. ஆனால் மக்கள் என்ன நிவாரணத்தை, என்ன அனுகூலத்தை புதிதாக பெற்றனர் என்று ஆராய்ந்தால், இதன் வெட்ட முகம் நிர்வாணமாவது தவிர்க்க முடியாது.

புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி, காடுகளில் இருந்த புலிகள் நகரத்துக்கு சுதந்திரமாக சட்டபூர்வமாக வந்தனர். புலிகளின் கட்டுப்பாடு அல்லாத பிரதேசங்களில், புலிகள் சுதந்திரமாக நடமாடத் தொடங்கினர். சுதந்திரமாக சட்டபூர்வமாக வந்தவர்கள், மக்களுக்கு எதைத் தானமாக நிவரணமாக கொடுத்தனர்.

1.இராணுவ கட்டுப்பட்டு பிரதேசத்தில் விற்கப்படும் பொருட்களுக்கும், மக்கள் பெறும் அன்றாட கூலிக்கும் நேரடி மற்றும் மறைமுக வரியை அமுல் செய்து சூறையாடுவதன் மூலம், மக்களின் சுமையை புதிதாக தலைக்கு மேலே ஏற்படுத்தினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.அனைத்து அசையா சொத்துகளின் மேல் குறிப்பாக நிலங்களில் உற்பத்தி நடந்தாலும் சரி நடக்கா விட்டாலும் சரி அவற்றின் மேல் குறித்த தொகையை தரப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளனர். அப்படி கோரும் பணத்தைக் கட்ட மறுத்தால் அல்லது முடியாவிட்டால் குறித்த அசையா சொத்தை அல்லது நிலத்தை தம்மிடம் ஒப்படைக்க கோரிவருகின்றனர். மக்கள் இனம் தெரியாத புதிய வரிகள் மற்றும் பண வசூல் மூலம் வதைபடுவது அதிகரிக்கின்றது.

3.பெரிய சொத்துடையவர்கள் தனித்தனியாக இனம் காணப்பட்டு, அவர்களிடம் விரும்பியவாறு பெரும் தொகை (லட்சக் கணக்கில் அதாவது லட்சம் முதல் 40 50 லட்சமும் அதைவிட கூடவும்) பணத்தை கோரியும் மிரட்டிப் பறிப்பது நிகழ்கின்றது. இதன் மூலம் தேசிய முதலாளித்துவத்தின் அடிப்படை நிதி ஆதாரத்தையும், அந்த சக்தியில் முதலீட்டு திறனையும் அழித்தொழித்து, அதை தேசிய எல்லை கடந்து ஓட நிர்ப்பந்திக்கின்றனர்.

4.தமிழ்பிரதேசங்களுக்கு திறகப்படும் பாதையெங்கும், அதை கடந்து செல்லும் அனைத்துக்கும் குறிப்பாக ஆள்வரி, வாகனவரி, உள்வரும் பொருட்களுக்கு வரி, வெளிச்செல்லும் பொருட்களுக்கு வரி என மக்களின் அனைத்து வாழ்வுக்கும் செயற்பாட்டுக்கும் வரி அறவிடப்படுகின்றது. மக்களின் வாழ்வியல் மேல் எப்படி பணம் புடுங்குவது என்பது சுதந்திரமான புலிகளின் நடமாட்டத்தின் மையக் குறிக்கோலாகியுள்ளது.

5.மக்கள் மக்கள் என்று வாய்க்கு வந்தபடி கூறுபவர்கள், ஆட்சேர்ப்பை தீவிரமாக்கியதுடன் மக்களுக்கு தெரியாமல் (பெற்றோருக்கு) தெரியமல் குழந்தைகளின் சுயவிருப்பம் என்ற அடிப்படையில் இரகசியமாக கொண்டு செல்லப்படுகின்றனர். மக்கள் புலிகளை வரவேற்கின்றனர் என்பது, பெற்றோருக்கு தெரியாமல் பிள்ளைகளை கொண்டு செல்லும் போது இதில் முரண்படும் மக்கள் என்ற வர்த்தை ஜாலமும் வெற்று அரசியல் உள்ளடக்கமாகும். இங்கு இந்த ஆள் சேர்ப்பின் போது ஆயுதக் கவர்ச்சியும், அறியாமையும், மறைமுக நிர்ப்பந்தமுமே ஒரு தேசிய அரசியலாக உள்ளது. சொந்த பெற்றோருக்கு தெரியாமல் நடத்தப்படும் ஆட்சேர்ப்பு எல்லாம், மக்களின் நலனுக்கு (பெற்றோரின் நன்மைக்கே) என்று சத்தியம் செய்யத் தவறுவதில்லை. அத்துடன் கிழக்கில் வீட்டுக்கு ஒருவரை தரவேண்டும் அல்லது சொந்த அசையா சொத்தை தம்மிடம் ஒப்படைக்க கோருகின்றனர்.

6.ஆட்சோப்பில் கட்டாயப்படுத்தி பிள்ளைகளை கடத்தி செல்வது மற்றொரு வடிவமாக வரைமுறையின்றி தொடருகின்றது. 1990 இல் ஈ.பி.ஆர்.எல்.எப்.யும் ஈ.என்.டி.எல்.எப்.யும் இந்தியக் கைக்கூலிகளாக செயற்பட்ட போது, இயக்கத்துக்கு ஆட்களை கட்டாயமாகக் கடத்திச் சென்று எப்படி இணைத்தனரோ, அதை விட மோசமாக கட்டாயமாக இணைப்பது நிகழ்கின்றது. பிள்ளைகளுக்கு கிழக்கில் கிராமம் கிராமமாக பெற்றோர் இரத்த திலகமிட்டு இணைத்தாக குறுந்தேசியம் கடந்தகாலத்தில் சத்தியம் செய்த மண்ணில், இன்று அது சூனியமாகிவிட்டது என்பது அதன் வெட்டுமுகத்தின் கொடுரத்தையே நிர்வாணமாக்கின்றது. இந்த கட்டுரை எழுதிக் கொண்டு இருந்த போது, கிழக்கில் புலிகளுக்கு தெரியாமல் தப்பிய சில பத்து புலிகள் இராணுவத்திடம் சரணடைந்துள்ளனர்.

7.புலிகளுடன் முரண்பாடு கொண்டவர்களை (பல்துறை சார்ந்து) கடத்திச் செல்வது, தாக்குவது அரசியல் மயமாகியுள்ளது. இனந்தெரியாத தாக்குதல், படுகொலைகள் புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பு ஆங்காங்கே அதிகரித்து நடக்கின்றது.

8.பல தொழில்களை சொந்த உரிமையாளரிடம் இருந்து, கட்டாயமாக நஸ்டஈடு இன்றி அபகரிக்கின்றனர்.

9.பல சுயதீனமான வெகுஜன அமைப்புகளை அவர்களின் அனுமதியின்றி முறைகேடாக புலிகள் பயன்படுத்துகின்றனர் அல்லது அப்படியே அபகரித்து சொந்த அமைப்பாக்கி விடுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீவிரமான புலிகளின் அரசியல் நடவடிக்கையாக இவையே அரங்கேறுகின்றது. இவையே தமிழ் மக்களுக்கு வழங்கும் நிவாரனமாக உள்ளது. தீவிரமாக எந்த வழிகள் ஊடாக பணத்தை கறப்பது, தீவிரமாக எப்படி ஆட்களைச் சேர்ப்பது, முரண்பட்டவர்களை எப்படி எந்த வழிகளில் ஒழித்துக் கட்டுவது போன்றனவே, புலிகளுக்கு தெரிந்த ஒரேயொரு அரசியலாகும். மக்கள் பெற்றுக் கொண்ட அமைதி சமாதானம் இதைத் தாண்டியவையல்ல. இதற்கு வெளியில் மக்கள் எதையும் புதிதாக பெற்றுவிடவில்லை. புலிகளின் அணுகுமுறைகளில் நடந்துள்ள சில மற்றங்கள் அரசியலில் நடக்கவில்லை. சர்வதேச ரீதியாக எதிர் கொள்ளும் நெருக்கடிகள் மற்றம் சர்வதேச ரீதியாக பலரை அணுக வேண்டிய நிர்ப்பந்தங்களால், கடந்த கால அனுகுமுறைகளில் சில மற்றத்தை புலிகள் செய்துள்ளனர். இதனால் அண்டிப் பிழைக்கும் பினாமியம் சக்கடைகளில் இருந்து வரைமுறையின்றி பெருக்கெடுக்கின்றது. ஆனால் புலிகளின் அரசியலில் எந்த மற்றமும் நிகழவில்லை. இதனால் அவர்கள் கையாளும் அனுபவமற்ற புதிய எல்லா பிரச்சனையிலும், மக்கள் விரோத கண்ணோட்டம் நேருக்கு நேர் மக்களுக்கு எதிராக பிரதிபலிக்கின்றது. மக்கள் எப்படி வாழ்கின்றனர் என்பதை இவர்கள் அனுபவ ரீதியாக புரிந்து கொள்வதில்லை. அன்றாட வாழ்வின் தேவைக்கு மக்கள் எப்படி வாழ்கின்றனர், அவர்களின் பசி பட்டினிகள் என் நிகழ்கின்றன, போராடுபவர்கள் எப்படி இதை இல்லாது ஒழிக்க முடியும், என்று எதைப் பற்றியும் சிந்திக்காதவர்கள், மக்களின் துயரத்தை அவர்களின் முதுகில் தூக்கி வைக்கவே முடிகின்றது.

1.பொது இடங்களில் இருந்து (பாடசாலை, வழிபாட்டுத் தலங்களில்...) ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றக் கோரும் புரிந்துணர்வு உடன்பாடு, அடிப்படையில் புலிகளின் இராணுவ நலன் சார்ந்த கோரிக்கையாகவே இருந்துள்ளது. இதில் மக்கள் எதாவது நன்மையடைகின்றார்கள் எனின், புலிகளின் நோக்கத்துக்கு பின்னால் கிடைக்கும் எச்சில் சோறுதான். மக்கள் நலன் சார்ந்த, தேசிய நலன் சார்ந்த கோரிக்கையை புரிந்துணர்வு உடன்பாடு கொண்டிருக்கவில்லை. அதேநேரம் மக்களின் நலன் சார்ந்து புலிகளின் பிரதேசத்தில் மக்களிடம் அபகரித்த எந்த சொத்தையும் புலிகள் மக்களிடம் மீள கொடுத்துவிடவில்லை. அத்துடன் முஸ்லீம் மற்றும் சிங்கள மக்களின் பாடசாலைகள், வழிப்பாட்டு தலங்கள், சொத்துக்கள் என எதையும் புலிகள் மீளக் கொடுத்துவிடவில்லை.
2.மீன்பிடித் தடை நீக்கம் கூட இராணுவ நலன் சார்ந்ததே. புலிகளின் கடற் புலிகளின் சர்வதேச நடமட்டாத்துக்கு இது அவசியமானதாக இருந்தது. அத்துடன் உளவு நடவடிக்கைக்கு இது நிபந்தனையாக இருந்தது. மின் பிடியை நம்பி மக்கள் வாழ்வை தொடங்கும் போது, மீனுக்கு வரி என்ற நிலைமையும் மக்களின் வாழ்வை சுமையாக்கின்றது. பாதை திறப்பில் பொருளுக்கு வரியும், மக்களின் இடம் பெயர்வுக்கு வரியுமாக எங்கும் எதிலும் புலிகளின் நலனே மைய விடையமாகவுள்ளது. மக்களின் நலன்கள் இரண்டாம் பட்சமானவை.
3.இப்படி நிலங்கள் முதல் அனைத்திலும் குறிப்பான புலிகளின் இராணுவ நலனும், அதில் இருந்து பண வசூலிப்பும் மைய நோக்கமாகின்றது. மக்கள் உண்மையில் இதில் எச்சிலில் சோறு பொறுக்கி வாழ்கின்றனர் என்பதே உண்மை.

நிவாரண அரிசி முதல், பிச்சை எடுத்து வாழும் வாழ்க்கை வரை கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளது. அதில் ஒரு பகுதி சோற்றை விருப்பத்துக்கு மாறாக அபகரிக்கப்படுகின்றது. இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் புலிகளின் வரவை மக்கள் வரவேற்பதாகவும், கொண்டாடுவதாகவும் கூறிக் கொள்ளும் பின்னணியில், மக்களின் விருப்பத்துக்கு வெளியில் ஒரு வன்முறை அரசியல் சமூகமயமாகியுள்ளது. உண்மையில் இப்படி வரவேற்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தியவர்களும், கொண்டாடியவர்களும் யார்? ஆக்கிரமிப்பு இராணுவ நிர்வாகத்தில் மக்களின் இரத்தை உறிஞ்சி வாழ்ந்த ஒட்டுண்ணிகளுடன் இணங்கி போகாத அல்லது முரண்பட்ட ஒட்டுண்ணிகள்தான் என்பது இன்னமொரு உண்மையாகும். இவர்கள் புலிகளின் அனுசாரணையுடன் மக்களின் இரத்தை உறுஞ்சி வாழவும், எதிர்தரப்பை ஒழித்துக்கட்டி தாம் மட்டும் மக்களின் இரத்தை உறிஞ்சும் இரத்த உரித்தை அடைய விரும்பியவர்களே களமிறங்கினர்.

யாழ் பல்கலைக்கழகம் போன்றவை நடத்திய போராட்டங்கள் தன்னியல்பான சில ஜனநாயக கோரிக்கை சார்ந்த ஆரம்பத்தில் இருந்த போதும், பின்னால் அதன் தலைமை குறுகிய நோக்கத்தை படிப்படியாக வெளிப்படுத்திய போது, அங்கு போராட்டமும் ஒய்ந்துவிட்டது. உண்மையில் ஆரம்பத்தில் இருந்த ஜனநாயக கோரிக்கை சார்ந்த உணர்வோட்டங்களும், அது சார்ந்த போராட்டங்களும் படிப்படியாக ஒய்ந்து, சிலரின் நலன் சார்ந்த போராட்டங்களை உருவாக்கிய போது மக்களின் வெறுப்புக்கு உள்ளாகின்றது. குறுகிய நோக்கம் கொண்டவர்களின் குறிப்பான நலன்கள், புலிகளின் இராணுவவாத நலன்கள் என எல்லாம் இணைந்து, மக்களை நேரடியான வன்முறைக்குள் அடக்கிவிடுவது நிர்வாணமாகின்றது. இராணுவ வன்முறையை விட இது அதிகமானதாகவும், நேரடியானதாகவும் வெளிப்படுகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பு என்பது பொதுவான சமூகத் தளத்தில் கண்காணிப்பு, கட்டுப்பாடுகள் என்ற விரிகின்றது. தனிப்பட்ட அத்த மீறல்கள் விதிவிலக்காகவே இருக்கின்றது. அது பாலியல் வன்முறை, சந்தேக நபர்களை கடத்தல், கொள்ளையடித்தல்.... என்ற குறிப்பானவை வக்கிரமாக வெளிப்பட்டது. ஆனால் இவை பொதுவான ஆக்கிரமிப்பு விதிக்கு உடபட்டது.

ஆனால் புலிகள் தனிப்பட்ட ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ ஒன்றை அல்லது பலதை நேரடியாகவும் மறைமுகமாகவும் புடுங்கிவிடும் நோக்கில் வரி, ஆட் சேர்ப்பு, மிரட்டல் என்பன தீவிரமான வடிவமாகிவிட்டது. இதை நேரடி மறைமுக மிரட்டல், துரோகி பட்டம் என பல வடிவில் நிர்ப்பந்தம் கொடுத்து கையாளுகின்றனர். இதன் மேல் பொதுவான கண்காணிப்பு, கட்டுப்பாட்டை இதன் மேல் நிறுவுகின்றனர். தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் மீதான சுமை மற்றும் அடக்குமுறை கடுமையாகின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் இன்று இரட்டைச் சுமையை மக்கள அனுபவிக்கின்றனர்.

## பினாமி அரசியலின் பின்னுள்ள துரோக நோக்கமும்

தமிழ் மக்களின் முதுகில் மேல் சவாரி செய்து, அவர்களுக்கே துரோகம் செய்த தமிழ் கங்கிரஸ் புலிகளின் பினாமி அரசியலின் இன்று தமிழ் மக்களுக்கு எதிரான தரகராக மாறியுள்ளனர். புலிகளால் துரோகியாக அறிவிக்கப்பட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் உட்பட பலர் துரோக குற்றச்சாட்டில் கொல்லப்பட்டனர். பல தொண்டர்கள் புலிகளின் வதைமுகாமில் காணமல் போனார்கள். உண்மையில் துரோகிகளாகவே பவனிவந்தவர்கள், இன்று புலிகளின் உத்தியோகபூர்வமற்ற பினாமி அரசியல் கட்சியாகியுள்ளது. துரோகியாக அறிவிக்கப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் நாபா உட்பட பல தலைவர்களையும், அவர்களின் உறுப்பினர்களையும் புலிகள் கொன்றனர். ஆனால் இந்த இந்தியக் கைக்கூலி துரோக தலைவர்கள், புலிகளின் உத்தியோகபூர்வமற்ற பினாமி பேச்சாளராக மாறியுள்ளனர். ரெலோ உறுப்பினர்களையும் அதன் தலைவர்களையும் உயிருடன் வீதிகளின் எரித்தது முதல் படுகொலைக்கு உள்ளானவர்கள். இந்திய இலங்கை கைக்கூலியாக செயல்பட்டு அரசியலில் பிழைத்தவர்கள், இன்று புலிகளின் நம்பிக்கையான பினாமி ஆலோசராகவும் பேச்சாளராகவும் மாறியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்த கட்சிகளும், இதன் தலைவர்களும் தமிழ்மக்களும் துரோகமிழைத்தனர். ஈவிரக்கமற்ற வகையில் தமிழ்மக்களை படுகொலைகள் செய்யப்படுவதற்கு பச்சயையாக துணைபோனவர்கள். இந்திய இலங்கை அரசின் கைக் கூலிகளாக நக்கி பிழைத்ததுடன், அவர்களின் தயவில் மீள அவதாரம் பெற்று அரசியல் வாதியானவர்கள். அவர்களின் பாதுகாப்பில் பிழைத்த கிடந்தவர்கள். இன்று புலிகளின் கைக்கூலியாகவும் பினாமியாகவும் இடமாறியுள்ளனர். இந்த பினாமித்தனம் கூட மற்றொரு கைக்கூலித்தனமாகும். இவர்களின் சுயமான அரசியல் வாழ்வின் பின், இந்தியா இலங்கை அரசின் கைக்கூலியாக இருந்த போதும் சரி, புலிகளின் கைக்கூலி பினாமியாக இன்று மாறிய போதும் சரி, இவர்கள் மக்களுக்கு துரோகம் இழைக்கும் தமது பொறுக்கி வாழும் அரசியலையே அடிப்படையாக கொண்டுள்ளனர். மக்களின் பிரச்சனையையிட்டு இவர்களுக்கு ஒரு துளிதன்னும் அக்கறை கிடையாது. மக்கள் மீதான அடக்குமுறைகளை தங்களின் நிறத்துக்கு ஏற்ப மூடிமறைத்து, அடக்கு முறைக்கு பச்சையாகவே துணைபோகின்றனர். முன்பு இந்தியா இலங்கை அரசுகள் மக்களுக்கு இழைத்த கொடூரமான அடக்குமுறைகளை முடிமறைத்தபடி, புலிகளுக்கு எதிராக கருத்துக் கூறி நக்கிப்பிழைத்தவர்கள். இன்று புலிகள் மக்களுக்கு எதிராக கையாளும் அனைத்து அடக்கு முறையையும் மூடிமறைத்தபடி, அரசுக்கு எதிராக கருத்துக் கூறியபடி முதுகெலும்பற்ற பினாமியாக மீளவும் நக்கித் திரிகின்றனர். தமக்கென சொந்த அரசியலை முன்வைக்கவும், அதில் இருந்து மக்கள் பிரச்சனையையை முன்னெடுக்கும் அனைத்து தகுதியையும் இழந்துவிட்டனர். தமிழ் மக்களின் இரட்டைத் துயரம் மலையளவானது. ஏகாதிபத்திய ஆசியுடன் சிங்கள இன பௌத்த ஆக்கிரமிப்பாளர்கள், தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்துவிட்டுள்ள ஒடுக்குமுறையை எதிர்த்து போராடுவது என்பது, மக்களின் அடிப்படை நலன் சார்ந்து தான் சாத்தியமானது. ஆனால் மக்களின் நலன்களை துச்சமாக மதித்து, மக்கள் தலையின் மேல் ஏறி இருந்து உதைக்கும் புலிகள் போன்ற அமைப்பின் பினாமியாக கைக் கூலியாக வாழ்வது, இந்த துரோக குழுக்களின் மற்றொரு பச்சசையான கட்டி கொடுப்பாகும்.

மூச்சக்கு மூச்சு புலிகளின் இராணுவ வாதத்துக்கு இசைவாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல் செய்யத் துடிக்கும் இந்தத் துரோகிகளின் அறிக்கைகள் மற்றும் போராட்டங்கள் அனைத்தும், பினாமித்தனத்தின் ஒரு வெட்டுமுகம்தான். இலங்கையை சிங்கள பௌத்த இனவாத தரகு அரசு உலகுக்கே தரைவார்த்துக் கொண்டிருக்கும் போது, இதை மௌனமாக அங்கீகரிப்பது கைக் கூலித்தனத்தின் மற்றொரு வெட்டுமுகம். இந்தியா, சீனா, அமெரிக்கா உட்பட உலகின் ஆதிக்க சக்திகள் அனைத்திடமும் இலங்கையை பிரித்து விற்றுக் கொண்டிருக்கும் போது, அதற்கெதிராக எந்தப் போராட்டத்தையும் இந்த பினாமிகள் முன்னெடுக்கவில்லை. இந்த துரோக கைக்கூலிகள் ஏகாதிபத்தியத்தினதும், பிராந்திய ஆதிக்க வாதிகளினதும் செல்லக் குழந்தைகளாக இருக்கின்றனர். அதே நேரம் ஏகாதிபத்திய உலகமயமாதல் பொருளாதார கொள்கையை, தமது கொள்கையாக கொண்டிருப்பது தேசியத்துக்கு இழைக்கும் அடிப்படையான துரோகமாகும். மக்களின் முதுகின் மேல் ஏறி சவாரி வரவும், அவர்களைக் கொண்டே விபச்சாரத்தை செய்யும் தரகுகளாக இருப்பதும் எதார்த்தத்தின் வெட்டுமுகமாகும்.

இந்த துரோக கைக்கூலி பினாமி கட்சிகளுக்கு வெளியில், இதைப்போன்ற பல குழுக்களும், அறிவித்துறையினரும், பத்திரிகைகளும் அணிதிரண்டு நிற்கின்றனர். தமிழ்மாறன், சோதிலிங்கம், சிவத்தம்பி, யமுனா ராஜேந்திரன், சிவராம் ... என்று பல பத்து பச்சோந்திகளும், வீரகேசரி, தினக்குரல், உதயன் போன்று முதுகெலும்பற்ற பல பத்து பத்திரிகைகளும், செய்தி

www.tamilarangam.net

சேகரிப்பவர்களும், பி.பி.சி முதல் பல தளத்தில் செயற்படும் பினாமி நிலைப்பாட்டுக்கு அப்பால், மக்கள் பிரச்சனையை புலி மற்றும் அரசுக்கு வெளியில் நடுநிலையாக செய்தியை யாரும் வெளிப்படுத்துவதில்லை. மக்களின் துன்பம் துயரத்தை பற்றி கடுகளவு அக்கறை இவர்களுக்கு கிடையாது. ஏகாதிபத்தியத்திடம் நாட்டை விற்றுக் கொண்டிருப்பதை ஆதரித்தும், புலிகளின் இராணுவ கண்ணோட்டங்களை நியாப்படுத்தவும், அவர்களின் மக்கள் விரோத நடத்தைகளை மூடிப் பாதுகாக்கும் நிலைக்கு தரம் தாழ்ந்துள்ளனர். முன்பு செய்தி அமைப்புகள் மக்கள் விரோத சம்பவங்களை வெறும் செய்தியாக கூட தமது பத்திரிகையில் வெளியிட்டன. ஆனால் இன்று எதையும் அவை வெளியிடுவதில்லை. உதாரணமாக புலிகளுக்கு எதிராக ஜீன் 30 வரை 270 முறைப்பாடுகளை கண்காணிப்பு குழுவுக்கு முன் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இதில் 56 முறைப்பாடுகள் யுத்தநிறுத்த மீறலாக கண்காணிப்பு குழுவே அறிவித்துள்ளது. மக்களுக்கு எதிராக இந்த யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டு இருந்த போது, இதைப்பற்றி எந்த செய்தி பத்திரிகையிலும் யாரும் எதையும் பார்க்கமுடியாது. இதை மூடிமறைப்பதே பத்திரிகை தருமமாக பினாமியம் அங்கீகரிக்கின்றது. அறிவுத்துறையினரோ பால் குடிக்கும் பூனை போல் கண்ணை முடிக்கொண்டு புலம்புகின்றனர். உண்மையில் யுத்த நிறுத்த மீறல்கள், புலிகள் தரப்பில் பல பத்து மடங்காகும். ஆனால் அவை முச்சுக் குழாய்க்குள்ளேயே சிக்கி கொலைப் பீதிக்குள் அடங்கிவிடுகின்றது. அரசுக்கு எதிராக 110 முறைப்பாடுகள் வந்த போது, இதில் 20 யுத்த மீறலாக அடையாளம் கண்டுள்ளது கண்காணிப்பு குழு. இதை தேசிய பத்திரிகைகள் முதல் அறிவுத்துறையினர் வரை பல பத்துமுறை புரட்டிப் போட்டு பெரிய செய்தியாக்கினர். இன்று தமிழ் பிரதேசத்திலும் சரி, தமிழில் வெளிவரும் அறிக்கைகள், கண்டனங்கள் அனைத்துமே செயற்கையாகவே உருவாகின்றன. புலிகள் எதைப்பற்றி, எப்படி, என்ன நினைக்கின்றரோ, அதைப்பற்றி மட்டும் அவர்கள் வழியில் கூறுவதே அனைத்து தளத்திலும் கருத்தாகி பினாமியமாக அரங்கேறுகின்றது. இதை அரசியல் வெற்றி என்று புலிகள் கொட்டுமுரசு கொட்டும் போது, சமூக அறியமையும் முடத்தனமும் சமூகமயமாகின்றது. இதன் மூலம் உண்மையில் தமிழ் தரப்பு செய்தி அமைப்புகள், அறிவித்துறையினர் என்று பல பத்து பிழைப்புவாதிகள் மக்கள் மீதான வன்முறைக்கு துணைபோய், பச்சையாகவே தமிழ் மக்களுக்கு துரோகம் செய்கின்றனர். இதன் மூலம் மக்கள் மேலான அடக்குமுறைகள் மேலும் அதிகரிக்க துணைபோகின்றனர். இதுதான் பினாமி அரசியலின் உள்ளடக்கமாகும்.

## குழந்தைகளுக்காக முதலை கண்ணீர் வடிக்கும் ஏகாதிபத்திய நலன்களுடன் இணங்கும் குறுந்தேசியம், சமூக அறியாமையை ஆயுதபாணியாக்கி போராட்டமாக்கின்றனர்

சிறுவர்களை ஆயுதபாணியாக்குவதாக புலிகள் மேல் குற்றம்சாட்டி, இதை ஒரு மனித உரிமை மீறாலாக ஏகாதிபத்தியங்கள் உலகமயமாக்கின்றனர். ஏகாதிபத்தியம் தனது நலன் சார்ந்து கூக்குரல் போட, குறுந்தேசியம் அதன் எல்லைவரை இதை அனுசரித்து போவதும் நிகழ்கின்றது. இதன் மூலம் குழந்தைகளின் அடிப்படை உரிமை மீறப்படுகின்றது. குழந்தைகளின் அறியாப் பருவம், அறிவின் வளாச்சி இன்மை போன்ற காரணங்களால் தான், ஆயுதபாணியாக்கவதை எதிர்ப்பதாக பலர் மார்புதட்டுகின்றனர். உண்மையில் அறிவு என்பது என்ன?

இயற்கையை மனிதன் தனது வாழ்வின் சமூகத் தேவையுடன் மாற்றும் உழைப்பை தொடங்கியது முதல், அதைப்பற்றிய அறிவே அறிவியலாகும். அதாவது மனிதன் இயற்கையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரிந்து கொள்ளவும், தனது வாழ்வின் உயிர்வாழ்வுக்கு அதை மாற்றக் கற்றுக் கொள்ளவும், இயற்கையை அதன் போக்கில் பாதுகாக்கவும் உள்ள அறிவே அறிவியலாகும். இயற்கை அழிக்கப்படும் இன்றைய மனித வாழ்வில், மனிதனின் இயற்கை வாழ்வுக்கு புறம்பாக சூறையாடப்படும் நிலையில், அறிவியல் என்பது முடிமறைக்கப்படுகின்றது. அறிவு என்பது இயற்கையை சூறையாடுவதையும், மற்றவனை துன்புறுத்துவதுமே அறிவியலாகவுள்ளது. மனித வாழ்வில் இயற்கை மீதான உழைப்பும், அதன் பயன்பாடும், இயற்கை பாதுகாப்பும் மூலதனத்துக்கு அடிமையாகிய போது, அறிவியல் என்பது அடிப்படையில் நலனடிக்கப் படுகின்றது. இதை ஒட்டிய சமூக வாழ்வியல் உள்ளடக்கங்கள் எல்லாம் போலித்தனமாக கட்டமைக்கப்படுகின்றது. மனிதனின் இன்றைய வாழ்வில் எதிர் கொள்கின்ற அனைத்து பிரச்சனைகளும், பொருளாதார உறவுகளும், சமூக உறவுகளும், இயற்கையுடனான பிணைப்பு சார்ந்த அறிவு என்பது, அறவே தெரிந்து கொள்ள முடியாத சூனியத்தில் மனிதன் மந்தைக் கூட்டமாக மாற்றப்பட்டுள்ளான். மூலதனம் எதை தனது சந்தைக்கு சாதகமானதாக கருதுகின்றதோ, எதை தனது தேவையாக கருதுகின்றதோ அதுவே அறிவின் எல்லையாக மாற்றிவிடுகின்றது. மூலதனம் தனது லாப நோக்கில் எதை உற்பத்தி செய்கின்றதோ, அதை உற்பத்தி செய்யவும், உண்ணவும், உடுக்கவும், ரசிக்கவும் கற்றுக் கொடுத்த நுகர்வே, சமூக அறிவியலாகவுள்ளது. நுகர்வு அறிவியல் அறிவை பூச்சியமாக்கிவிடுகின்றது. இந்த அறிவு தனிமனித நலனில் வடிகாலகிவிடுன்றது. இயற்கை, உயிரிணத் தொகுதி, மனித சமூகம் என்ற எல்லையில் அறிவு என்பதை மறுக்கும் மூலதனம், தனது நலனுக்கு இசைவாக அறிவை நலமடிக்கின்றனர். உண்மைக்கு பதில் பொய்யையும், வாழ்வுக்கு பதில் சமூகச் சீரழிவையும், சமூகத்துக்கு பதில் தனிமனித வக்கிரத்தையும், இயற்கைக்கு பதில் இயற்கை அழிப்பையும் சமுதாயமயமாக்கி விரிந்த தளத்தில் அறிவை பூச்சியமாக்கப்படுகின்றது.

இந்த இடத்தில் தான் உலகளவில் குழந்தைகள் மட்டுமல்ல பெரியவர்களின் அறிவு என்பது குறுகிய நலன்களின் எல்லைக்குள் சீரழிக்கப்படுகின்றது. இந்த அமைப்புக்காக ஆயுதம் எந்தும் குழந்தைக்கும் பெரியவருக்கும் இடையில் நோக்கத்தில் முரண்பாடு எற்படுவதில்லை. பெரியவர்களை விட சிறியவர்கள் ஏன் எதற்கு என்று பல பத்து கேள்விகளை பெரியவர்களை விட கேட்டுவிடுபவர்கள் தான். ஆனால் அதை அடக்கிவிட்டால் பெரியவர்களை விட, சொன்னதைச் செய்யும் இயந்திர பொம்மையாகிவிடும் இயல்புடையவர்கள். பெரியவர்கள் சமூக வாழ்வில் அதாவது உழைப்பில் ஈடுபட்ட அனுபவம், குழந்தையை விட முன்னேறிய தன்மையாக இருப்பதால் சமூகத் தன்மை கொண்ட குணாம்சம் அதிகமாக இருக்கும். குழந்தை இயந்திரமயமாக அடக்கப்படும் போது அடங்கிப் போகும் தன்மையும், சொன்னதை செய்யும் அடிமை தன்மையும் பெரியவர்களில் இருந்து பண்பியல் ரீதியாக வேறுபடுகின்றது. சமூகத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தும் போது இந்த பண்பியல் கூறு குறிப்பாக செயலாற்றுகின்றது. ஆனால் சமுதாயத்தில் அறிவியலை பூச்சியமாக்கும் உலகமயமாதல், இதற்கிடையில் உள்ள வேறுபாட்டையும் இல்லாது ஒழிக்கின்றது. உதாரணமாக இன்றைய அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ச் புஸ்சுக்கு நைஜிரிய என்ற நாடு எங்கு இருக்கின்றது என்பது தெரியாது. அதே நேரம் அதை அவர் ஒரு கண்டம் என்றார். இவர் தான் அமெரிக்கவின் ஜனாதிபதி. உலகெங்கும் ஆக்கிரமிப்புக்கு வழிகாட்டும் ஒரு ஜனதிபதியின் அறிவு இது. அமெரிக்கா மக்களின் அறிவுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. மற்றொரு உதாரணம் பாரிஸ்சின் முன்னாள் மேயரிடம், பாரிசில் நிலத்துக்கு கீழ் ஒடும் புகையிரத வண்டிக்கான மாதச் சீட்டின் விலை என்ன என்ற கேட்கப்பட்ட போது, அவர் 1950 களில் இருந்த விலையையே கூறினார். (இது போன்ற பல கேள்விகளுக்கு) இன்று அவர் கூறிய விலையை விட 8 முதல் 10 மடங்கு விலை கொடுத்தே பயணயச் சீட்டை பெற்று மக்கள் வாழ்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்தான் பாரிஸ் நிர்வாகத்தையும், மக்களையும் வழிநடத்தினார். இதுதான் பல நாடுகளின் தலைவர்களின் அறிவின் எல்லை. இவை சாதாரணமான விடையங்களில் வெளிப்படுத்திய முட்டாளுக்குரிய .அறிவின் சூனியத்தைக் காட்டியது.

முதலாளித்துவம் உருவான போது குழந்தை உழைப்பு அதன் அச்சாக இருந்தது. அதற்காகவே உலக ஜனநாயகத்துக்கு ஆயிரம் விளக்கங்களையும் சட்ட அமைப்புகளையும் கடந்த 300 வருடங்களாக மாற்றி மாற்றி வகுத்தவர்கள். இன்று குழந்தைகளை ஆயுதபாணியாக்குவதை எதிர்க்கும் ஏகாதிபத்தியங்கள் முதல் அதன் வாலைப்பிடித்து தொங்கும் குறுந்தேசிய வீரர்கள் வரை இதன் அடிப்படை நோக்கத்தை பற்றி கேள்வி எழுப்பவில்லை. உலகின் தனது சொந்த வயிற்றை கழுவவும், குடும்ப பாரத்தையும் சுமக்கும் வகையில் மிகக் குறைந்த கூலியில் உழைக்கும் 25 கோடி குழந்தைகளின் நிலைமைக்கே இந்த ஏகாதிபத்திய அமைப்பே காரணமாகும். குழந்தை உழைப்பை கொண்ட ஜனநாயக சர்வாதிகார நாடுகளின் ஆட்சி அமைப்பையும், பாசிச சர்வாதிகார நாடுகளின் ஆட்சி அமைப்பையும் பாதுகாப்பதே ஏகாதிபத்தியமாகும். 15 வயதுக்கு குறைந்த மூன்று வயது குழந்தைகள், நாளொன்றுக்கு 15 மணி நேரம் வரை உழைக்கும் இந்த பிஞ்சுகளின் இரத்தத்தில் தான், உலக ஜனநாயகம் கொடி கட்டிப்பறக்கின்றது. இதை முதுகுமுறிய பாதுகாக்கும் ஏகாதிபத்தியங்கள் தான் குழந்தைகள் பற்றி முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். உலகமயமாதல் தனது பொருளாதார சந்தையை விரிவாக்கும் போது, அதற்கு தடையாக குழந்தை உழைப்பு மலிவுக் கூலியாகி தடை செய்யும் போதே, அதற்கு எதிராக மூச்சு அடைக்க குக்கூரல் இடுகின்றனர். இன்று ஏகாதிபத்திய பணத்தில் இயங்கும் தன்னார்வக் குழுக்களின் தயவில் குழந்தை தொழிலாளர்கள், தொழிச் சங்கம் அமைத்து போராடும் நிலைமையில் உலகம் உருளுகின்றது. இந்த நிலையில் தான் ஆயுதம் ஏந்துவதை ஏகாதிபத்தியங்கள் எதிர்க்கின்றனர்.

உண்மையில் புலிகள் போன்ற வலது குழுக்கள், மக்களிடமிருந்து அன்னியமான போக்கில் ஆட்பற்றாக்குறையை இந்த குழந்தைகளே நிவர்த்தி செய்கின்றனர். அத்துடன் சமூகத்துக்கு எதிரான நடத்தைகளை, ஆயுதம் ஏந்திய குழந்தைகளைக் கொண்டு இலகுவாக செய்யமுடிகின்றது. அத்துடன் இருக்கும் ஏகாதிபத்திய அமைப்பும், அதன் ஜனநாயக சூறையாடலையும் பாதுகாக்க தடைகற்களாக ஆயுதம் ஏந்திய போராட்டங்கள் உள்ளது. ஆயுதம் எந்திய வலது பிரிவுகள், சூறையாடலில் தமது பங்கையும் தரகையும் கோரும் போது இதை மறுக்கும் மூலதனம் ஆயுதப்பலத்தின் அடிப்படையாக உள்ள குழந்தைகளை பற்றி குக்கூரல இடுகின்றனர். இந்த ஆயுதம் ஏந்தி வடிவத்தை ஒழித்துக்கட்ட, குழந்தை பற்றி முதலைக் கண்ணீர் வடிப்பது அவசியமாகிவிடுகின்றது.

இன்று ஏகாதிபத்திய அமைப்பில் குழந்தைகள் கொண்டு நடத்தப்படும் அழகுராணிப் போட்டிகள் உருவாக்கும் அழகுபண்பாடு, குழந்தைகளின் நுகர்வுச் சுதந்திரம் பற்றியும், அதன் உரிமை பற்றியும் நுகர்வு அமைப்பு குழந்தை உரிமையாக விளக்கம் கொடுக்கின்றது. இது மேட்டுக் குடிகளின் கலச்சாரத்தை ஜனநாயகமாக்கி சமூக பண்பாடாக கட்டமைக்கப் படுகின்றது. நுகர்வுச் சந்தை தளத்துக்கு சுதந்திரம் என்ற கல்வி சாந்து, பண்பாடு, கலாச்சாரமும் குழந்தைகளுக்கு ஊட்டப்படுகின்றது. இப்படி ஏகாதிபத்தியங்கள் உலகமயமாக்கும் பொருளாதார கலாச்சார பண்பாடுகளை குழந்தைகளுக்கு ஊட்டி வளர்த்தபடியே, ஆயுதம் ஏந்தும் உரிமையை மட்டும் இந்த ஜனநாயக கனவான்கள் வேடிக்கையாகவே எதிர்க்கின்றனர்.

இந்த உலகமயமாகும் அமைப்பில் குழந்தைகள் உழைத்து வாழவும், நுகர்வு சுதந்திரத்தை கொண்டிருக்கவும் முடியும் என்றால், குழந்தையின் ஆயுதம் ஏந்தும் உரிமையை நாம் பாதுகாக்க போராடுவோம். அறிவை நுகர்வு வெறிக்குள் மட்டுப்படுத்தின், குழந்தையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயுதம் ஏந்துவதை கேள்விக்குள்ளாக்கும் தகுதி உனக்கு இல்லை. குழந்தையின் கல்வி மந்தைக் கூட்டமாக எல்லைக்குள் நின்று மேயவும் பொறுக்கி வாழவும், நுகர்வு கலாச்சார எல்லைக்குள் நக்கி வாழவும், மூலதனத்தை பாதுகாக்கும் எல்லைக்குள் அடிமையை இருக்கும் வரை, ஆயுதம் ஏந்தும் உரிமை குழந்தைக்கு உண்டு. உலகமயமாதல் எதை குழந்தையின் உரிமை என்று கூறி, அதை தனது நலனுக்கு சேவை செய்யும் வகையில் கட்டமைக்கின்றதோ, அதை எதிர்த்துக் குழந்தைகள் ஆயுதம் ஏந்தும் உரிமையுண்டு.

இன்று புலிகள் தமது வலது அரசியலால் மக்கள் விரோதத்தை அடிப்படையாக கொள்ளும் போது, குழந்தைகளை அதன் கருவியாக்குவதை நாம் எதிர்க்கின்றோம். சமூகம் பற்றி சிந்தனை அறிவோ, மக்களின் நலன் பற்றி எதிர்ப்புணர்வை அறிவியலாக்கி, ஆயுதம் ஏந்தியது எதற்காக என்பதை முழுமையாக புரிந்த கொள்ளாத மந்தைக் கூட்டமாக உருவாக்குவதையே நாம் எதிர்க்கின்றோம். மக்களின் வாழ்வுடன் இணைந்த, அவர்களின் உழைப்பில் பங்கு பற்றியபடி, சமூக நலன் சார்ந்த அறிவை விருத்தி செய்த படி ஆயுதம் ஏந்தி அதற்காக போராடும் உரிமை, அவர்களின் வாழ்வின் அடிப்படையான விடையமாகும். இந்த அமைப்பையும் அறிவையும் மாற்றும் போராட்டம் பெரியவருக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கும் உண்டு. சமூகம் பற்றி கல்வி சிறுவயதில் தொடங்கப்பட வேண்டும். இயற்கை பற்றியும், அதில் உயிரினங்கள் பற்றியும், அதில் மனிதன் சமூக வாழ்வு பற்றி கல்வியும் இன்றைய கல்வி முறைக்கு மாறாக அவசியமானது. இதை முற்றாக மாற்றி அமைக்கும் போராட்டத்தின் தொடர்ச்சியில், ஆயுதம் ஏந்தல் என்பது யாருக்கும் விதிவிலக்கை யாரும் வழங்கிவிடமுடியாது. ஆயுதம் ஏந்தல் என்பது அறிவியல் சிந்தனைத் தளத்தில் இருந்து, இந்த சமூகத்தை மாற்றியமைக்கும் வன்முறை போராட்டம் வரை அனைத்து மக்களுக்கும் உள்ள உரிமையாகும்.

## வரி ஒரு கொள்ளையாக மாறிவிடுவது எப்போது?

பரந்து விரிந்த சமூகமாக மனித இனமாக மாறி தனிமனித சூறையாடும் நலன்களே ஜனநாயமாக உள்ள போது, வரி என்பது அடிப்படை விடையமாக உள்ளது. இந்த வரி மக்களின் நலன் சார்ந்து, மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பயன்படுத்தின் இதன் மீதான விமர்சனம் அவசியமற்றவை. மக்களின் உழைப்பு, அவர்களின் சமூகத் தேவை பூர்த்தி செய்யும் வரையறைக்கு வெளியில் தனிமனித சொத்துரிமை உடைய சமூகத்தில் வரி அவசியமாகின்றது. இது இயற்கை நெருக்கடியை எதிர் கொள்ளும் பொது நிவாரணமாகவும், முதியோர் பராமரிப்பு, குழந்தை பராமரிப்பு, அங்கவீனர் பராமரிப்பு, உற்பத்தி விரிவாக்கம், கல்வி, மருத்துவம், குடியிருப்பு, கலாச்சார விரிவாக்கம் என்ற விரிந்த சமூகத் தேவைகளை மக்களுக்காகவே பயன்படுத்த, அவர்களிடம் இருந்து ஒரு பகுதியை அறவிடுவதை யாரும் கேள்விக்குள்ளாக்குவதில்லை. மக்களிடம் இருந்து பெறுவதை அவர்களுக்கே மீள பயன்படுத்தும் போது, இங்கு வரி என்பது மக்கள் விரோதமாக இருப்பதில்லை.

ஆனால் மக்களிடம் பெறும் வரியை அவர்களுக்கு பயன்படுத்தாது, சிலர் நலன்களை சார்ந்த அவர்களுக்கு பயன்படுத்தும் போது, வரி என்பது கொள்ளையாக சூறையாடலாகிவிடுகின்றது. இன்ற தமிழ் பிரதேசங்களின் வாங்கப்படும் வரி எதற்காக பயன்படுத்துகின்றனர் என்பதே மையமான கேள்வியாகும். பாடாசாலை கல்விச் செலவு, மருத்துவச் சேவை முதல் அரசு ஊழியர்களின் சம்பளம் வரை இலங்கை அரசே தமிழ் பிரதேசத்தில் வழங்குகின்றது. அதாவது இலங்கையில் தமிழ் அல்லாத மற்றைய பகுதிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழும் மக்களின் சமூகத் தேவைகள் போன்றே தமிழ் பகுதியிலும் (மருத்துவம், கல்வி, இலவச உணவு விநியோகம், மானிய உணவு, விவசாயம்,... என எண்ணற்ற விடையங்கள்) அரசே நிர்வகிக்கின்றது. இதில் இன ஒடுக்கமுறை சார்ந்த புறக்கணிப்புகள் இருந்த போதும், ஊழியர்க்கான சம்பளம் முதல் அரசின் தயவில் நிர்வாகச் செலவு முதல் அடிப்படைத் தேவைகள் சார்ந்து உள்ளன. இந்த நிலையில் இந்த உழைப்பின் மேலும், சமூகத் தேவைகள் மீதும் கூட புலிகளால் வரி அறவிடப்படுகின்றது. புலிகளால் வாங்கப்படும் வரி மக்களுக்களின் சமூகத் தேவைக்காக திருப்பி விடப்படவில்லை. ஒரு சில சமூக பராமரிப்புகளை விதிவிலக்காக செய்த போதும், அவை நிர்ப்பந்தம் காரணமாகவே நிகழ்கின்றது. சமுதாயத்தின் தேவை, நலன் என்பதில் இருந்த வரி கையாளப்படவில்லை.

புலிகளின் இராணுவவாத அரசியல் வரியை உறிஞ்சி வாழ்கின்றது. மக்களிடம் வாங்கும் வரியை நவீன ஆயுதச் சந்தையில் தொலைக்கின்றது. உலகில் பல நாடுகள் மக்களிடம் கொள்ளையிட்டு சூறையாடும் வரியை தேசிய பாதுகாப்பின் பெயரில் ஆயுத தளபாடங்களுக்கு எப்படி திருப்பிவிடுகின்றனரோ, அதையே புலிகளும் செய்கின்றனர். உலகளவில் வசூலிக்கும் வரியில் பெரும் பகுதியை, ஆயுத தளபாடங்களுக்கும் சொந்த இராணுவத்துக்கும் செலவு செய்யும் அதிகூடிய சதவீதத்தை உலகளவில் புலிகள் மட்டுமே கொண்டிருப்பர். இது புலிகளின் மக்கள் விரோத வலதுசாரி ஆயுதவாத அரசியல் கண்ணோட்டமாகும். ஆயுதமே அவர்களின் அரசியலாக உள்ள போது, இது அதன் விதியாகின்றது.

வரியின் எல்லையை எடுப்பின், அதன் வரைமுறை என்பது கட்டுப்பாடு அற்றது. ஒரு பொருள் எத்தனை முறை விற்கப்படுகின்றதோ, அத்தனை முறை வரி அறவிடப்படுகின்றது. ஒரு பொருள் எத்தனை முறை உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றதோ அத்தனைமுறை, அவற்றின் மேல் வரி அறவிடப்படுகின்றது. விற்பனை மட்டுமல்ல, உற்பத்தி மீதும், அதன் பயன்பாட்டின் மீதும், பல தளத்தில் இது நேரடி மற்றும் மறைமுக வரி, எல்லைகள் அற்ற விரிந்த தளத்தில் வசூலிக்கப்படுகின்றது. அன்றாட நுகர்வு பொருட்களின் விலை நிர்ணயத்தில் இருந்து, அதை வாங்கும் கூலி பணத்துக்கும் கூட வரி அறவிடப்படுகின்றது. அரசு கட்டுப்பாடு அல்லாத பிரதேசத்துக்குள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வரி அறவிடப்படுகின்றது. அரசின் பொருளாதாரத் தடை பொருட்களை உட் செல்வதை மறுக்கின்றது. அதை நீக்கக் கோரி போராடிய அதே நேரம், புரிந்துணர்வு உடன்படிக்கை அதை நீக்கக்கோரியது. ஆனால் பொருட்கள் உள் வந்த போது 5 முதல் 25 சதவீதமும் அதற்கு கூடுதலான வரியும் புலிகளால் அறிவிடப்படுகின்றது. இதில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து, பொருட்களுக்கு என்ன வரி என்ற ஒழுங்குபடுத்தப்பட்ட பட்டியலை வெளியிட்டனர். இது 5 முதல் 25 சதவீத வரியை பொருட்கள் மீது கோருகின்றது. வரி அற்ற எல்லை என்பது மிக குறைந்த எண்ணிக்கை கட்டுப்படுத்தியது. இந்த பொருட்கள் உட் சென்று மக்களை அடையும் போது, தமிழ் மக்களின் வாங்கும் திறன் குறைந்த பட்சம் 5 முதல் 25 சதவீத பொருளாதார நெருக்கடிக்குள் இந்த வரி கொண்டு வருகின்றது. உதாரணமாக கல்விக்கு அவசியமான பேப்பர் மற்றும் கொப்பிக்கு 20 சதவீத வரி அறவிடப்படுகின்றது. கட்டிட பொருளுக்கு 25 சதவீத வரி அறவிடப்படுகின்றது. உடுப்புக்கு 10 சதவீத வரி. இப்படி வரி பட்டியல் ஒன்றை வரைமுறையற்ற வரிக்கு பதிலாக முன்வைக்க புலிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதை இராணுவ பிரதேசமான யாழ்ப்பாணமும், கிழக்கு பகுதிகளும் புதிதாக சந்திக்கின்றன.

இங்கு வரி சொந்த தேசிய உற்பத்தி பாதிகப்படுமாயின் வெளியில் இருந்து உள் வரும் பொருளுக்கு உயர்ந்த வரி அறவிடுவது அவசியமாகும். ஆனால் தேசிய உற்பத்தி மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய பொருளாதாரத்தை கட்டமைக்காத நிலையில், வரிமுறை என்பது மக்களின் அடிப்படை தேவைகள் மறுக்கப்படுவதை சமூக மயமாக்கின்றனர். இன்று உலகளவில் ஈராக், கியூபா, வடகொரியா போன்ற நாடுகளுக்கு பொருட்கள் கொண்டு செல்வதை தடுக்கும் ஏகாதிபத்திய தடைகள் எப்படியோ, அதையே புலிகள் வரி மூலம் செய்கின்றனர். தேசிய பொருளாதார அமைப்பை பாதுகாக்கவும், அதை பலப்படுத்தவும் வரி அறவிட்டால் வரவேற்க முடியும். தேசி பொரளாதாரத்தை கட்டமைக்காத தேசியம், ஏகாதிபத்திய பொருளாதாரத்துக்கு கம்பளம் விரிக்கும் தேசியத்தின் மேல் அறவிடும் வரி, மக்களுக்கு நஞ்சு ஊற்றிக் கொடுத்து தற்கொலை செய்யத் தூண்டுவதாகும். குழந்தையின் பால் மாவுக்கு 7 முதல் 8 சதவீத வரி என்பதன் மூலம் குறைந்த வரி உடான சலுகை என்று கூறி, தம்மைத் தாம் நியாப்படுத்திக் கொள்வே இது உதவும். இதற்கு வரிவிலக்கு அளிக்கவில்லை. பாடசாலை தமிழ் மாணவர்களின் கல்விப் பொருட்களுக்கு வரி அறவிடப்படுகின்றது. வரி என்பது சொந்த உற்பத்தி பதிக்கப்படும் போதும், ஆடம்பர பொருட்கள் மீதானதாக இருக்க வேண்டும். அடிப்படை தேவைக்கும், தாம் உற்பத்தி செய்யாத பொருட்களுக்கும் வரி என்பது தற்கொலைக்கு வழிகாட்டுவதாகும்.

அடுத்து புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் உற்பத்தி செய்யும் பொருட்கள் மீதான சுழற்சியான வரி என்பது, சொந்த பிரதேசத்தில் வாங்கும் திறனை அழிக்கின்றது. மற்றயை பிரதேசத்தில் சந்தைப்படுத்தும் திறனை இழக்கின்றது. உற்பத்திகள் யுத்தத்தில் சிக்கி பல்வேறு நெருக்கடி மற்றும் வரியால் உற்பத்தி செலவு உயர்வாக மாறுவதால், உள்ளூர் மக்கள் வாங்கும் திறனை இழந்து விடுகின்றனர். இதை வெளியில் சந்தைப்படுத்தும் போது உற்பத்தி மீதும், வர்த்தகம் மீதும் வரியைக் கையாளும் போது, உற்பத்தியாளர்கள் அதை உற்பத்தி செய்வதையே கைவிடுகின்றனர். இதனால் தேசிய வளம் அழிவதுடன், மக்கள் உழைத்து வாழும் திறன் அழிக்கப்படுகின்றது. வரி என்பது மக்களின் சமூக வாழ்வியலை மேம்படுத்தும் வகையில் அறவிடப்படுவது மறுக்கப்படும் வரை, அது சூறையாடலாக கொள்ளையாக மாறிவிடுகின்றது.

## இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களின் அறவிடப்படும் பணம்

மக்களின் மேலான நேரடி மற்றும் மறைமுக மிரட்டல் மூலம், சிறு தொகையில் இருந்து பெரும் தொகையான பணம் வசூலிக்கப்படுகின்றது. புலிகளின் அரசியல் வேலை இது தான் என்பதும், இதைத் தாண்டி எதுவுமல்ல என்பதும் வெளிச்சமாகியுள்ளது. இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்கள் மீதான சிவில் நிர்வாகம் என்பது, பணம் வசூலிப்பதும் ஆட் சோப்பதுமே என்பதை எதார்த்ததில் வெளிப்படுத்துகின்றனர். மக்களின் தேசிய நலன்களை அரசியல் ரீதியாக உறுதி செய்து வளர்த்தெடுக்கும் அரசியல் மயமாக்கல் என்பது, தேசியம் பற்றி தெளிவைக் கோருகின்றது. ஆனால் புலிகள் தேசிய பொருளாதாரம் என்ற அடிப்படை விடையத்தில், ஏகாதிபத்திய பொருளாதாரத்தின் தரகுகளாக செயற்படுவதையே அரசியலாக கொள்ளும் போது, பணத்தைப் பெறுவது அரசியலாகிவிடுகின்றது. தமது சிவில் நிர்வாகம் என்பது மக்களின் தேசிய பொருளாதாரத்தை கட்டமைத்து நிர்வாகிப்பதைக் கோரவில்லை. மாறக இலங்கை அரசின் பணத்தை அடிப்படையாக கொண்டும், ஏகாதிபத்திய உலகமயமாதல் பணத்தை ஆதாரமாக கொண்டு, அரசுசாரா ஏகாதிபத்திய நிதியில் இயங்கும் அமைப்பு மற்றும் கிறிஸ்துவ நிதி ஆதாரங்களை கட்டுப்படுத்தும் அதிகாரத்தையே கோருகின்றனர். இயல்பில் நடந்து கொண்டிருப்பதை தாம் கட்டுப்படுத்தி அதன் மூலம் மக்களை கவரவும், அதிலும் தமது இராணுவ அரசியலுக்கு தேவையானதை சூறையாடவுமே விரும்புகின்றனர். இதன் மூலம் மக்களுக்கு கிடைப்பதில் ஒருபகுதியை நாம் எடுக்கும் அதிகாரத்தையே கோருகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நிர்வாகம் என்பது பணத்தை அறுவடை செய்வதை ஆதாரமாக கொள்கின்றது. இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பண வேட்டையில் இருந்த தடைகளை புரிந்துணர்வு உடன்பாடு இல்லாது ஒழித்தது. இதைத் தொடர்ந்து எல்லா இடத்திலும், எல்லா வீட்டிலும் புடுங்கக் கூடியதை புடுங்குகின்றனர். மறைமுக மிரட்டல், நேரடி மிரட்டல் இதன் அரசியலாக உள்ளது. நிலங்கள் போன்றவை விவசாயம் செய்ய விட்டாலும் கூட வரி அறிவிடப்படுகின்றது அல்லது நிலத்தை தம்மிடம் ஒப்படைக்க கோருகின்றனர். எங்கும் எதிலும் கையை வைப்பதுடன், பணத்தைப் பெறுவதை மையமான குறிக்கோளாக கொள்ளும் போது, போராட்டத்துக்கு எதிரான உணர்வுகள் வளர்ச்சி பெறுகின்றது. இப்படி சேர்க்கும் பணத்தை அந்த மக்களுக்கே பயன்படுத்தப் படுவதில்லை என்பது மற்றொரு உண்மையாகும். இராணுவ வாதம் சார்ந்து நவீன ஆயுதம் மூலம் புரட்சி செய்யும் கனவுடன், மக்களின் வாழ்வு அழிக்கப்படுகின்றது. இது புலிகள் அரசியலாகும் போது, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கே வேட்டு வைத்து விடுமளவுக்கு மாறிச் செல்லகின்றது.

## ஆட்சேர்ப்பு இயல்பு நிலையைக் கடக்கும் போது

பெற்றோருக்கு தெரியாமல் நடத்தும் ஆட் சேர்ப்பும், பெற்றோருக்கு தெரிய நடத்தும் கட்டாய ஆட் சேர்ப்பும் புலிகளின் மற்றொரு அரசியலாகும். பணம், ஆட் சேர்ப்பும் நவீன ஆயுதங்களும் தமிழீழத்தை உருவாக்கும் என்ற குறுந்தேசிய கண்ணோட்டம், தமிழ் மக்கள் மேல் சவாரி வைப்பதை குறிக்கோளாக கொள்கின்றது. வாய்க்கு வாய் புலிகளை இராணுவ பிரதேசங்களில மக்கள் வரவேற்பதாகவும் கூறும் இவர்கள் தான், அந்த மக்களின் குழந்தைகளை அவர்களுக்கு தெரியாமல் கடத்திச் செல்வதில் கவனம் செலுத்துகின்றனர். பராளுமன்ற கதிரைப் பேர்வழிகள் முதல் புலிகளின் அரசியல் பிரமுகர்கள் வரை, மக்களை போராட்டத்துக்கு வென்று எடுக்கும் வழிமுறை இதுதான். குழந்தைகளை கோரியும், காணாமல் போன தமது குழந்தைகள் எங்கே என்று புலிகளிடம் மண்டியிடும் நிலைக்கு, மக்கள் அரசியல் ரீதியாக தாழ்த்தப்படுகின்றனர். பெற்றோருக்கு தெரியாமால் ஆயுதக் கவர்ச்சிய ஏற்படுத்தி கவரும் பிள்ளைகள் மற்றும் கட்டாய ஆட் சேர்ப்பில் உள்ளவோர் அனைவரையும் வன்னி நோக்கிக் கடத்தப்படுகின்றனர். இது மட்டுமே அவர்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் புலிகளின் கடைசி அரசியல் எல்லையாகும். மட்டக்களப்பில் பலர் தப்பிச் சென்று பொலிஸ் மற்றும் இராணுவத்திடம் தொடர்ச்சியாக சரண் அடைகின்றனர். 1990 இல் இந்திய கைக் கூலிகளாக செயற்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் எப்படி கட்டாய ஆட் சேர்ப்பை நடத்தி பிள்ளை பிடிகாரர் ஆனார்களோ, அதே போன்று புலிகள் இன்று பிள்ளை பிடிக்கும் நிலைக்கு தமது அரசியலை தரம் தாழ்த்தியுள்ளனர்.

## தமது எதிரிகளை கடத்துவதும், ஒழித்துக் கட்டுவதும்.

இது புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குள் இருக்கின்றதோ என்ற சந்தேகம் எழுகின்றது. மாற்றுக் கருத்து என்பது நலமடிக்கப்பட்ட தமிழீழ மண்ணில், முரண்பாடுகள் உள்ளிருந்தே புகைகின்றது. அத்துடன் புலிகளின் அரசியலில் இருந்து மாறுபட்டவர்கள் புலிகளின் பினாமியாகவும், தனித்துவமாகவும் முரண்பாடுகின்றனர். அத்துடன் அரசின் தயவில் செயற்படும் குழுக்கள் தனி நபர்கள் என்ற தளத்திலும் முரண்பாடுகள் வெடிக்கின்றன. அரசுடன் இணைந்து செயற்படுவர்களுக்கும் புலிகளுக்கும் இடையில் அரசியல் ரீதியான வேறுபாடு இல்லை. ஆனால் அரசுடன் இணங்கி நிற்பதா எதிர்த்து நிற்பதா என்பதே முரண்பாடு. இதன் அடிப்படையில் அரசியல் முரண்பாடற்ற பல குழுக்கள் புலிகளின் பினாமியானார்கள். முன்னைய துரோகிகள், இன்று தேசிய வீரர்களாக உலாவும் விசித்திரம் நடக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னமும் உடன்பாடத முரண்பாடு கொண்டோரை, புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பாகவும் தாக்குவது, கடத்துவது, காணமல் போவது தொடர்ந்தும் புதிய வடிவத்தில் நிகழ்கின்றது. முன்பு ஆயுத முனையில் நடந்தவை இன்று கொட்டந் தடிகள், முகமூடிகள் முதல் நடு இரவு தாக்குதல்கள் என பல வடிவத்தில் நடைபெறுகின்றது. உயிருடன் கிணற்றில் போட்டு கொல்வது, வடக்கு முதல் கிழக்குவரை ஒரேவிதமாக நடக்கின்றது. எண்ணிக்கை சரியாக தெரியாவிட்டாலும் பல கொலைகள் இதே விதத்தில் நடைபெற்றுள்ளது. பினாமிய பத்திரிகைகள் இதை செய்தியாக வெளியிடுவதைக் கூட ஜனநாயக விரோதமாக கருதுகின்றது. இதுபோன்ற ஆட் கடத்தல்கள், தாக்குதல்கள் என்று பல நடைபெறுகின்றது. என்ன நடக்கின்றது என்பதை, மக்களின் தமக்கிடையிலான செய்தி பரவல் மூலமே செய்தியாக்கி வருகின்றனர்.

காணமல் போனோர் சங்கங்கள் ஒரு குறித்த பட்டியலை வைத்துக் கொண்டு மட்டும் போராடும் மோசடி கேவலமானது. இந்த குறித்த பட்டியலுக்கு முன்பு காணமல் போனோர் பற்றியோ, இதன் பின்னால் காணமல் போனோர் பற்றியோ எந்த அக்கறையையும் வெளிப்படுத்தவில்லை. அவர்கள் காணமல் போனது சரி என்பது, இவர்களின் வக்கிரம்.

## புலிகளின் பாஸ் முறையும், ஆக்கிரப்பளானின் பாஸ் முறையும்

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பு பாஸ் முறையை ரத்துச் செய்யக் கோரி குறுந்தேசிவாதிகள் முதல் பினாமிகள் தலைகீழாக நின்று கோரினர். சிங்கள இனவெறி பௌத்த அரசோ இரட்டை பாஸ் முறையாக உள் வருவதும் வெளிச் செல்வதையும் கட்டுப்படுத்தியது. இந்த இரட்டை பாஸ் முறையில் அனைத்தையும் நீக்கிய போது, இயல்பில் புலிகளும் பாஸ் முறையை நீக்குவர் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இன்று வரை புலிகள் பாஸ்முறையை நீக்கவில்லை. அதாவது புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச மக்கள் மீதான பாஸ் முறை மட்டுமே, அந்த மக்களை புலிகளுடன் நிற்க வைத்துள்ளது. உண்மை என்ன என்பதை ஆராயின், புலிகள் தமது பிரதேசத்தில் பாஸ் முறையை நீக்கம் பட்சத்தில், அங்கு வாழும் மக்கள் அந்த பிரதேசத்தை விட்டே வெளியேறிவிடுவர் என்ற உண்மை வெட்ட வெளிச்சமாகின்றது. வறுமை மற்றும் பொருளாதார பலமற்றவர்கள் எதுவும் செய்ய முடியாது அதற்குள் வாழ்வார்கள். ஆனால் மற்றவர்கள் வன்னியை விட்டே புலம் பெயர்ந்து விடும் அவலம், போராட்டத்தின் வெட்டமுகமே காட்டுகின்றது. தேசியம் மக்களுக்கானதாக இருப்பின் இப்படி நிகழுமா? பினாமிகள் புலிகளின் பாஸ் முறையை ரத்து செய்யக் கோரி மூச்சு விடவேயில்லையே ஏன்?

## புலிகள் பலத்காரமாக வெளியேற்றிய முஸ்லீம் மக்களின் நிலை

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் மீள குடியேற்றவது என்ற விடயத்தில் எந்த குறுந்தேசியவாதிகளுக்கும் சரி பினாமிகளுக்கும் சரி அக்கறையில்லை. பிழைப்புவாத முஸ்லீம் தலைவருடன் பேச்சுவார்த்தை என்ற பெயரில் நடந்த இரகசிய ஒப்பந்தத்தின் பின்னால், இந்த மக்களின் குடியிருக்கும் உரிமை கொடிகட்டி பறக்கின்றது. யுத்த ஆக்கிரமிப்புகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலும், மக்கள் வாழமுடியாத சூனிய பிரதேசங்களிலும் மீள குடியேற்றம் நிகழ்கின்றன அல்லது அது கோரப்பட்டு போராடப்படுகின்றனது. பாடசாலைகள், கோயில்கள் என்று இராணுவத்தை வெளியேற்றியும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியேறக் கோரியும் போராட்டங்களை புலிகளும், பினாமிகளும் ஒழுங்கு செய்கின்றனர். ஆனால் முஸ்லீம் மக்களின் மீள குடியமர்வு பற்றி யாரும் அக்கறைப்படவில்லை. அவர்களின் பாடசாலைகள் கோயில்கள் எல்லாம் இருந்தன. எந்த பல்கலைக்கழகமும், எந்த மாணவர் அமைப்பும், எந்த பொது அமைப்புகளும் இதற்காக குரல் கொடுக்கவோ, போராடவோ இல்லை. உண்மையில் முஸ்லீம் காங்கிரஸ் புலிகளுடன் செய்த இரகசிய பேரத்தின் பின்னால், மீண்டும் முஸ்லீம் மக்கள் மீள வன்முறைக்கு உள்ளானதே எதார்த்தம் காட்டுகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்க கோரும் இடைக்கால நிர்வாக சபையும், நிச்சயமாக முஸ்லீம் மக்களுக்கானவை அல்ல. இதையே கடந்த காலமும் நிகழ்காலமும் காட்டுகின்றது.

## கிழக்கில் நடந்த தமிழ் -முஸ்லிம் மக்கள் கலவரம் தொடர்பாக

தமிழ் கூட்டமைப்பு புலிகளின் பினாமியாக சென்ற தேர்தலில் நின்ற போது, எந்த முஸ்லீம் வேட்பாளரையும் தனது சார்பாக நிறுத்த தவறியதில் இருந்தே, முஸ்லிம் மக்கள் மீதான வெறுப்பை வெளிப்படுத்தினர். கிழக்கில் புலிகளின் பினாமிகள் நடத்திய தொடர்ச்சியான ஊர்வலங்கள், ஒட்டு மொத்த மக்களின் நலனை பிரதிபலிக்கவில்லை. மாறாக புலிகளின் குறிப்பான நலனை பிரதிபலித்தது. புலிகளுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கிடையில் நடக்கும் மோதல்களில் முஸ்லீம் இனத்தவர் ஈடுபடும் போது, அதை முஸ்லீம் இனத்துக்கு எதிரானதாக காட்டவும் சித்தரிக்கவும் செய்தனர். இந்த தனிப்பட்ட மோதல்கள் கூட புலிகளின் ஜனநாயக விரோத அரசியலில் இருந்தே தோற்றம் பெறுகின்றது.

இப்படி நடந்த மோதலில் ஒரு இனத்துக்கு எதிராக மற்ற இனத்தை களத்தில் இறக்கியது புலிகளே. இதை ஊர்வலமாக்கி மற்றயை இனங்கள் வாழும் பிரதேசங்கள் ஊடாக நகர்த்திய போது, அந்த மக்களுக்கு எதிரான கோசங்கள், வன்முறைகளே ஒரு இனமோதலாக வளர்ச்சி பெற்றது. இதில் ஒரு பகுதி முஸ்லிம் இளைஞர்கள் புலிகளைப் போல் தமிழ் மக்களை எதிரியாக கருதி வன்முறையில் ஈடுபட்டனர். இந்த கலவரத்தில் தமிழ் தரப்பின் பின்னணியில் புலிகள் இருந்தனர். புலிகள் இல்லாமல் எதும் அசையாது. அறிக்கை முதல் ஊர்வலம் வரை புலிகளின் பினாமி முத்திரை குத்தியே வெளிவந்து நடக்கும் போது, கலவரம் மட்டும் என்ன விதிவிலக்காக! இல்லை, இதன் பின்னணியில் புலிகள் இருந்தனர் என்பதே உண்மை. இந்த கலவரத்தில் தமிழ் கூட்டமைப்பின் பங்கும் பணியும் கூட இருந்தது என்பதும் மற்றொரு உண்மையாகும்.

## ஜே.வி.பியின் அரசியல் பச்சை இனவாதமே

இடதுசாரிகள், மார்க்கசியவாதிகள் என்ற பெயரில் மார்க்சிய லெனிய படங்களின் கீழும், சிவப்புக் கொடி பிடித்து தமது பச்சை இனவாதத்தை நவீனப்படுத்தவதில் என்றுமில்லாத வக்கிரத்தை வெளிப்படுத்துகின்றனர். புலி என்றும், தமிழ் மக்கள் என்றும் அலறும் ஜேவிபி, இதற்கு எதிரான போராட்டமே வர்க்கப் போராட்டம் என்று முழக்கமிடுகின்றனர். புலிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் உலகளவில் அமெரிக்கா உள்ளிட்ட இந்தியா வரை ஒரே குரலில் ஒடுக்குமுறையை கையாளும் நிலைக்கு, ஜே.வி.பி ஆதரிப்பது தான் வேடிக்கை. இனவாத்தை அரசியலாக்குபவர்கள் நாட்டை ஏகாதிபத்தியத்திடம் கூறுபோட்டு விற்கும் நிலையிலும், சிவப்பு கொடிபிடித்து மா.லெனிய படங்களை தூக்குபவர்கள், புலிகளுக்கு எதிராக களமிறங்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடவில்லை. தமிழ் மக்களையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளை எதிர்த்து நிற்பதன் மூலம், ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு குண்டி கழுவி விடுவதில் ஜே.வி.பி சாதனை படைக்கின்றது. வரலாற்று ரீதியாக இனவாதத்தை இலங்கையில் அரசியாக கொண்ட பெரும்பான்மை கட்சிகள் இரண்டும் அடக்கி வாசிக்க, ஜே.வி.பியோ அந்த இனவாத வெற்றிடத்தை கௌவ்விக் கொள்ள ஆலாய் பறக்கின்றது. இந்த இனவாத அரசியலை அரங்கேற்ற, ஏகாதிபத்தியத்திடம் வாலட்டுவது இலங்கையில் புதிய ஒரு இனவாத அத்தியமே.

## விளம்பரத்தில் மார்க்சியமாகிய அசை

## *பொருளாதாரம் சாராத ஒடுக்குமுறைகள் சமுகத்தில் உள்ளதாக காட்டும் அசை,* திரிபுவாதத்தை மாக்சின் பெயரில் கொடியாக்குகின்றது

**"மரபுரீதியான மார்க்சியர்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சாதியம், ஆணாதிக்கம், சுற்றுச்சூழல் பிரச்சனைகள், சமப்பாலுறவு, உளவியல், இனத்தேசியம் போன்ற *பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகளை* / பிரச்சினைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்கின்ற விமர்சனம் நமக்கிடையில் இருக்கின்றது". என்று கூறி, அசை தனது திரிபுவாத மார்க்சிய அரசியலைப் பற்றி, சொந்த வாக்கு மூலத்தை வழங்குகின்றது. பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகளாக சமுகத்தை விளக்கி அதை மாக்சின் பெயரில் ஆய்வு செய்ய அசை வருகிறதாம். வர்க்க தலைமை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் புரட்சிக்கு முந்திய பிந்திய சமுதாயத்தில் வன்முறை சார்ந்த வர்க்கப் புரட்சியை மறுக்கும் அசை, மார்க்சியத்தை இதன் அடிப்படையில் திருத்தக் கோருகின்றது. பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகளாக சமுகத்தை விளக்கி மார்க்சியத்தை கல்லறைக்கு அனுப்ப முயலும் முதலாளித்துவ அறிவித்துறையினர், "மார்க்சிடம் திரும்பவது" என்ற பெயரில் மார்க்சியவாதிகளது நவீன திருத்தல் வாதமகும். மார்க்சியத்தை முன்வைத்த மார்க்சுக்கு திருத்தத்தை முன்வைத்த திருத்தும் எழுத்துக்களையே, சொந்த அரசியல் வறுமை மீது கையேலாதனத்தில் நின்றே அசை காவடியாக்கின்றது.**

நிறப்பிரிகை, சரிநிகர், நிகரி, உயிர்நிழல், எக்ஸசில், அம்மா, மௌனம், சுபமங்களா, காலச்சுவடு.... போன்ற பல பத்து பத்திரிகைகள் மார்க்சியத்துக்கு எதிராக எதை எல்லாம் பிரசுரித்தார்களோ அதை எல்லாம், தனியாக வெளியிட்டு மார்க்சியத்தை கழுவேற்ற சபதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்ததன் ஒரு முயற்சியாகவே «அசை» வெளிவந்துள்ளது. அத்துடன் பல பத்து சிறு சஞ்சிகையில் மார்க்சியத்துக்கு எதிராக யார் யார் எல்லாம் வண்ணம் வண்ணமாக எழுதியும் மொழிபெயர்த்தும் அவதூறுகளை தொகுத்தனரோ, அவர்களே «அசை» யின் ஆன்மாவாக இருப்பதும், அவர்களே மார்க்சிய அவதூறின் உயிராக இருப்பதும் இதன் சிறப்பு அம்சமாகும். யாராவது இந்த மார்க்சிய எதிர்ப்பு அவதூற்று மன்னவர்கள் இந்த «அசை» யில் கலந்து கொள்ளவில்லை எனின், அவர்களுக்கும் தொகுப்பாசிரியருக்கும் உள்ள இன்றைய தனிப்பட்ட உறவின் விரிச்சலின் இடைவெளிகளினால் மட்டுமே என்பதும் கூட, இதன் மற்றொரு சிறப்புதான்.

இலங்கை, இந்தியா தொடங்கி பல இதழ்களில் முழுபக்க விளம்பரத்துடன், அறிமுக குறிப்புகளுடனும் பாரிசில் இருந்தே «அசை» வெளிவந்துள்ளது. நிகரி-05 இதழில் கார்க்கி என்ற பெயரில் எழுதிய பினாமி "காலம் கருதி வெளிவரும்" ஒரேயொரு மார்க்சிய இதழ் என்று சுய விளம்பர அறிமுகத்தை செய்துவிடுகின்றனர். புதியபூமி "மார்க்சியர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக உள்ளது" என்று முகமன் வழங்கி, செஞ்சோற்றுக் கடனை சார்ந்து விளம்பரம் வழங்கியவர்கள், கோட்பாட்டு ரீதியான விடையங்கள் மேல் நழுவல் ரீதியான சமரசத்தை பூசி மொழுகி கையாண்டுள்ளனர். இப்படி வெளிவந்த சில பத்து அறிமுகங்கள் உண்மைக்கு புறம்பான செய்திகளை திட்டமிட்டே விளம்பரம் செய்தனர். நிகரி தனது பத்திரிகையை வெளியிடுவதற்கு முன்பாக வெளியிட்ட முழுபக்க விளம்பரத்தில் கூறிய உண்மைத் தன்மைக்கும், நேர்மைக்கும் எதிராகவே ஆசிரியர் குழு இதை பிரசுரித்துவிடுகின்றது. இலங்கை இந்தியா தொடங்கி புலம் பெயர் மண் வரையிலான சமூக இயக்கத்தில் நடைமுறை சார்ந்து மார்க்சியத்தை ஒரு சமூக இயக்கமாக முன்வைக்கும் புதிய ஜனநாயகம், நவசாகப்தம், சமர் தொடங்கி பல பத்திரிகைள் வெளிவருகின்றது. அவற்றை எல்லாம் இருட்டடிப்பு செய்து, செய்யும் சுய விளம்பரகாரர்கள், மார்க்சியத்தை அதன் தொண்டைக் குழியில் அறுத்துவிட நினைக்கும் வக்கிரம் கொண்டவர்களின் கனவுகளே நிஜமான விளம்பரமாகிவிடுகின்றன.

"மறுபடியும் மார்க்சிடம்" என்று அசையை தொகுத்த தொகுப்புரைக்கு அசோக் யோகன் பெயரிடுகின்றர். "மறுபடியும் மாாக்சிடம்" அசைகின்ற மார்க்சியம் என்ன என்பதையும் முன்னுரையில் தெளிவாக்கிவிடுகின்றார். மார்க்சை அவரின் வர்க்க அடிப்படையில் இருந்து அசைத்துவிடுவதே மார்க்சியம் என்பதை, அவரின் தொகுப்புரை தெளிவாக்கிவிடுகின்றது. வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் தொடரும் வர்க்கப் போராட்டத்தை, யார் யாரெல்லாம் இதில் ஒன்றை அல்லது முழுமையை எதிர்க்கின்றனரோ, அவர்களையும் அவர்களின் முதலாளித்துவ வண்ண வண்ணத் தத்துவங்களையும் முன்வைத்து, மார்க்சை அசைத்துவிட பெரும் விளம்பரச் செல்வாக்குடன் பிரகடனம் செய்கின்றனர். வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் தொடரும் வர்க்கப் போராட்டத்தை அடிப்படை மார்க்சியமாக ஏற்றுக் கொண்டு நடைமுறையில் ஒரு சமூக இயக்கமாக போராடுபவர்களை அவதூறுபடுத்தி நடைமுறைப் போராட்டத்தை அழித்தொழிக்கவே, «அசை» கங்கனம் கட்டுகின்றது. உலகெங்கும் யார் யாரெல்லாம் மார்க்சியத்தக்கு எதிராக இயங்குகின்றனரோ, அவர்களின் எழுத்துகளை தொகுத்து மாக்சியமாக கட்டுவதே, அசையின் மார்க்சிய விரோத நடவடிக்கையுடன் கூடிய கனவாகும்.

இந்த கனவை நனவாக்கும் வகையில் கூறுவதைப் பார்ப்போம். "ஐரோப்பிய, சீன மார்க்சியமன்றி, ஆபிரிக்க, இலத்தீனமெரிக்கா, மத்திய கிழக்கு மார்க்சியம் என்பதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிமுகப்படுத்தவும் பேசவுமான காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம்'' என்று கூறும் தொகுப்புரை, எப்படி "மறுபடியம் மார்க்சிடம்'' இட்டுச் செல்லும். மார்க்சியம் பலவகை என்று எடுத்துக் காட்டும் தொகுப்புரை, உண்மையில் மார்க்சின் வர்க்கப் போராட்டத்துக்கான மார்க்சியத்தை அதன் வேரில் இருந்து வெட்டிவிடும் ஒரு முயற்சியாகும். ஆபிரிக்காவாக இருந்தாலும், ஐரோப்பாவாக இருந்தாலும், ஆசியாவாக இருந்தாலும் உலகெங்கும் மார்க்சியம் எப்போதும் ஒன்றுதான். இதனால் தான் மார்க்சியம் எப்போதும் ஒரு சர்வதேசிய தத்துவமாக உள்ளது. மார்க்ஸ் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் கூறிப்பிட்டது போல் "பாட்டாளிகளுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை, அவர்களது அடிமைச் சங்கிலியைத் தவிர. அவர்கள் வெல்வதற்கோ ஓர் உலகம் உள்ளது. அனைத்து நாட்டுத் தொழிலாளிகளே ஒன்று சேருங்கள்!" என்று பொது அடிப்படையில் உலகத் தொழிலளாரை மார்க்சியம் அறை கூவ, "மறுபடியும் மார்க்சிடம்'' போவதாக கூறிக்கொள்பவர்கள் கோமளித்தனமாக பல மார்க்சியத்தை அறிமுகம் செய்யப் போகின்றனராம். உலகத் தொழிலாளருக்கு ஒரு நாடு இல்லை என்று மார்க்ஸ் கூறியதை மறுத்து, நாட்டுக்கு ஏற்ற மார்க்சியத்தை அறிமுகம் செய்ய உள்ளதாக «அசை» பிதற்றுகின்றது. மார்க்சின் பெயரால் உருவான மார்க்சியத்தை பலவாக பல வண்ணமாகவும் அறிமுகம் செய்வது, இன்றைய இடது மார்க்சியத்தின் நவீன திரிபுகளாகும். மார்க்சை பாடப் புத்தக வடிவில் கொழுயேற்றுவதும், வர்க்கப் போராட்டத்தை வன்முறையற்ற வகையில் நடத்த முடியும் என்பதே மையமான அசையின் செய்தியாகும். இங்கு அசையின் மைய நோக்கம் வர்க்கப் போராட்டத்தில் புரட்சிக்கு முந்திய பிந்திய புரட்சிகர வன்முறையை மறுப்தாகும். அத்துடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கொச்சைப்படுத்தி கழுவேற்றுவதாகும். இதை சாதிக்க மார்க்சை திரித்து விடும் அண்மைய வரலாற்றின் தொடர்ச்சியாகவே, «அசை» சுய விளம்பரத்துடன் வருகின்றது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் புரட்சிகர வர்க்க வன்முறையை கழுவேற்றும் தொடர்ச்சியில் "புரட்சிகர இயக்கங்களில் ஜனநாயக மறுப்பு மற்றும் பின்புரட்சி சமூகங்களின் அனுபவங்களை...'' பேசி அதை கொச்சைப்படுத்த «அசை» வருகின்றதாம். பாட்டாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தை நடத்துகின்றது எனின், அது புரட்சிகர வன்முறையை அடிப்படையாக கொண்டது. மற்றவனை அடிமைப்படுத்தி சுரண்டும் வர்க்கத்துக்கு (சுரண்டும் வர்க்கத்துக்கு அதாவது இது ஆணாதிக்கம், சாதிய ஆதிக்கம், இனவாதம், நிறவாதம், சுரண்டல், இயற்கை அழிப்பு என்ற பரந்த விரிந்த தளத்தில்) ஜனநாயக மறுப்பை அடிப்படையாக கொள்கின்றது. இந்த இழிந்து போன மனித விரோத சக்திகளுக்கு சுதந்திரம், ஜனநாயகம் என்ற பேச்சுக்கே மார்க்சியத்தில் இடமில்லை. ஆனால் அசை முதலாளித்துவ சுதந்திரம், ஜனநாயகம் என்ற கடைக் கோடியில் நின்று மார்க்சியத்தை திருத்தக் கோருகின்றது. இது புரட்சிக்கு முந்திய பிந்திய சமூகத்தில் ஒரு வர்க்கப் போராட்டத்தை நடத்துகின்ற போது, இதுவே மையமான கோசமும் வடிவமும் ஆகும். உலகில் மார்க்சியமல்லாத வார்க்கப் போராட்ட வரலாறு எல்லாம், மற்றொரு வர்க்கத்துக்கு ஜனநாயகத்தை மறுத்தே வந்துள்ளது. அதாவது உழைக்கும் வர்க்கத்துக்கு ஜனநாயகம், சுதந்திரம் என்பதை என்றும் வழங்கியதில்லை. இதற்கு வெளியில் வர்க்கப் போராட்டத்தை யாரும் விளக்க முடியாது. இதையே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் "கடந்த காலச் சமுதாயம் அனைத்தின் வரலாறும் வர்க்கப் பகைமைகளின் - வெவ்வேறு சகாப்தங்களில், வெவ்வேறு வடிவங்களை எடுத்த வர்க்கப் பகைமைகளின் - வளர்ச்சியில் அடங்கியுள்ளது. ஆனால், அப்பகைமைகள் எந்த வடிவத்தை மேற்கொண்டிருந்தாலும், கடந்த காலச் சகாப்தங்கள் அனைத்துக்கும் பொதுவான ஒரு உண்மை இருக்கிறது. சமுதாயத்தின் ஒரு பகுதியை மற்றொரு பகுதி சுரண்டுவது என்பது உண்மை'' இதை நாம் "மறுபடியம் மார்க்சிடம்'' போய் ஜனநாயகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்த முடியுமா? ஒரு புரட்சிகர இயக்கம் தனது அமைப்பில் ஜனநாயக மத்தியத்துவத்தை தனது ஆணையில் வைக்கின்றது. இங்கு ஜனநாயக மத்தியத்துவத்தை கட்சி கொண்டிருக்கும் போது, போராட்டத்திலும் வலது இடது போக்குகள் கூர்மையாகின்ற போது அமைப்பு உடைகின்றது அல்லது திரிபுவாதம் அரங்கேறுகின்றது. கட்சி ஒரு முதலாளித்துவ கட்சியாக சீரழிகின்றது. இந்த வரலாற்றை நாம் சென்ற இரு நூற்றாண்டிலும் பலமுறை கண்டேயுள்ளோம். இல்லாத எல்லா நிலையிலும் ஜனநாயக மத்தியத்துவத்தை ஆணையில் கொண்டு முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன.

ஒரு புரட்சி என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மற்றைய வர்க்கங்கள் மேல் தொடர்வதையும், தொடர்ந்தும் வர்க்கப் போராட்டத்தை நடத்துவதையும் குறிக்கின்றது. இங்கு அனைவருக்கும் ஜனநாயகம் என்பது மார்க்சியம் அல்ல. அதாவது வர்க்கப் போராட்டத்தை கைவிட்டு, அனைவருக்கும் ஜனநாயகம், சுதந்திரம் என்பது அடிப்படை மார்க்சியத்தை மறுப்பதாகும். பின் "மறுபடியம் மார்க்சிடம்" என்று கூறுவது மாபெரும் மோசடியாகும். வன்முறையற்ற புரட்சியின் பின்னால் அனைவருக்கும் ஜனநாயகம் என்பதும், "மறுபடியும் மாரக்சியம்" என்ற கூறி, மார்க்சியத்தை அசைத்துவிட முயல்வது என்பது 21ம் நூற்றாண்டின் வர்க்க சகாப்தத்தில் கேலிக்குரிய ஒன்றாகிவிடுன்றது.

இந்த கேலியின் தொடர்ச்சியில் "மரபுரீதியான மார்க்சியர்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சாதியம், ஆணாதிக்கம், சுற்றுச்சூழல் பிரச்சனைகள், சமப்பாலுறவு, உளவியல், இனத்தேசியம் போன்ற பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகளை / பிரச்சினைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்கின்ற விமர்சனம் நமக்கிடையில் இருக்கின்றது" என்கின்றர். அந்த **"பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகள்"** என்ற கண்டு பிடிப்பின் மீதான விமர்சனத்தை ஒரே ஒரு வெற்றுச் சொல்லுக்கு அப்பால் எங்கேயாவது வைத்துள்ளனரா? மார்க்சியம் அதை வைக்கவில்லை என்றால், அதை நீங்கள் முன்வைத்து விட்டல்லவா "மறுபடியம் மார்க்சிடம்" போக அழைக்க வேண்டும். மார்க்சியம் வைக்கவில்லை என்ற சொல்லி மார்க்சை திருத்த நினைப்பது நோக்கம் எதிர்புரட்சிகரமானது. மார்க்சியம் **"பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகளாக"** இதை மதிப்பீட்டு, நீங்கள் தலைகீழாக நின்றாலும் ஒருக்காலும் விவதிக்க மாட்டாது. மார்க்சியம் பொருளாதார ஒடுக்குமுறையாகவே மதிப்பீட்டு, இவற்றை அதன் மேலான கட்டுமானமாகவே ஆராய்ந்துள்ளது, ஆராய்ந்து வருகின்றது, தொடர்ந்து ஆராய்கின்றது.

«அசை» யின் மார்க்சிய விரோத நிலைக்கு நிகராக உயிர்நிழல் 20 இல் «பறை» என்ற சிறு சஞ்சிகைக்கான அறிமுக குறிப்பில் எழுதும் முதுகெலும்பற்ற புனைபெயர் பேர்வழி "கார்ல் மார்க்ஸே மார்க்சியம் எனவும், பார்ப்பானே பிரமணியம் எனவும் புரிந்து கொள்ளும் எங்கள் புகலிடச் சூழலில் 'பறை' கருத்தியல் ரீதியாகவும், நடைமுறைரீதியாகவும்..." உள்ளது என்கிறனர். மார்க்சியத்தை வெட்டிப் புதைக்கவும், சாதியத்தை பாதுகாக்கவும் புதுவிளக்கம் கொடுக்கின்றனர். கார்ல் மார்க்ஸ் அல்லாத மார்க்சியம் இருப்தாகவும், பார்ப்பான் இல்லாத பார்ப்பானியம் இருப்பதாக உயிர்நிழல் «அசை» யின் தம்பியாக நின்று குரைக்கின்றது. அதாவது இதை இப்படி பலவாகச் சொல்லலாம். முதலாளியை மூலதனமாகவும், ஏகாதிபத்தியத்தை உலகமயமாதலாகவும், மூலதனத்தை சுரண்டலாகவும், சிலரிடம் குவியும் செல்வத்தை ஏழ்மையாகவும், ஆணை ஆணாதிக்கமாக புரிந்து கொள்வதாக கூறி, அதை மறுக்கும் உயிர்நிழலின் அரசியல் வழியில் அசை வக்கரிக்கின்றது. உண்மையில் மார்க்சின் பெயரில் உருவான மார்க்சியத்தை வெட்டிப் புதைக்கவும், பார்ப்பானை பாதுகாப்பதன் மூலம் சாதியை உயர்த்தவும் தலைகீழாக நிற்கின்றனர். கார்ல் மார்க்ஸ் என்ற நபரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறித்து மார்க்சியத்தையோ, பார்ப்பான் என்ற ஒரு சாதியைக் குறித்து பார்ப்பணியத்தை மார்க்சியம் விளக்குவதில்லை. சமூக பொருளாதார உறவுகளில் இருந்து, அடிக்கட்டுமான பொருளாதார அமைப்பில் இருந்தே அனைத்தையும் மார்க்சியம் ஆராய்கின்றது. இங்கு கார்ல் மாக்ஸ் மார்க்சியத்தை நிறுவிய சமூக பொருளாதார அடிப்படைய அரசியல் விஞ்ஞான உண்மையை நிராகரிக்கின்ற இதன் போக்கில், கார்ல் மார்க்சை கழுவேற்ற நினைக்கும் முயற்சியையே உயிர்நிழல் செய்கின்றது. இது போன்று பார்ப்பனியத்தை உருவாக்கிய பார்ப்பான் என்ற சமூகத் தட்டை விட்டு, பார்ப்பனியத்தை அதிலும் சாதியத்தை மார்க்சியம் விளக்குவதில்லை. பார்ப்பான் என்ற ஆதிக்க சாதி சமூகத் தட்டை விட்டு பார்ப்பனியத்தை, அதாவது சாதியத்தை விளக்க முடியும் என்ற, உயிர்நிழலின் கண்ணோட்டம் சார்ந்து பார்ப்பனியத்தை உறுதியாக தொடர்வதை கோருகின்றனர்.

«அசை» யில் "சாதியம், ஆணாதிக்கம், சுற்றுச்சூழல், சமபாலுறவு, உளவியல், இனத்தேசியம்" என அனைத்தும் **பொருளாதாரத்துடன் தொடர்பற்ற பிரச்சனைகள்** என அசோக் யோகன் தனது தொகுப்புரையில் "மறுபடியம் மார்க்சிடம்" «அசை» கின்ற வழியில் வழிகாட்டுகின்றார். இவை பொருளாதாரத்துடன் தொடர்பற்றவை அல்ல என்று ஆணித்தரமாக உறுதியிட்டு கூறும் நீங்கள், பொருளாதாரம் அல்லாத அந்த மயப்பொருளை விளக்குவீர்களா? யாருக்கு ஐயா கதை சொல்லுகின்றீர்கள்.

முதலில் நீங்கள் தெளிவாக்க வேண்டும் "மறுபடியம் மார்க்சிடம்" அசைக்கின்ற போது, பொருளை அடிப்படையாக கொண்ட ஆய்வா? அல்லது கருத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வா? என்பதை. இங்கு «அசை» கருத்தை அடிப்டையாக கொண்ட கருத்து முதல்வாதத்தையே தனது ஆய்வு முறையாக முன்வைக்கின்றது. பின் இதன் அடிப்படையில் மார்க்சியம் ஆய்வு செய்யவில்லை என்ற குலைக்கின்றனர். இதில் நின்று மார்க்சின், மார்க்சிய கண்டுபிடிப்பையே தலைகீழாக்க கோருகின்றனர். "மறுபடியம் மார்க்சிடம்" எப்படி அழைத்துச் சென்று திருத்த விரும்புகின்றனர் என்பதை வெட்ட வெளிச்சமாக நிர்வாணமாக்கின்றனர். இரண்டாவதாக இந்த சுரண்டல் அமைப்பு என்ற வர்க்க பொருளதார சமூகக் கட்டமைப்பைத் தாண்டி, சமூகத்தின் எந்தவொரு பிரச்சனையை தீர்க்கவும் முடியாது, விளக்கவும் முடியாது. இதை «அசை» **பொருளாதாரத்துடன் தொடர்பற்ற பிரச்சனைகள்** என்று கூறி மறுக்கின்றனர். சமூகத்தின் ஒவ்வொரு பிரச்சனையும் இந்த பொருளாதாரச் சமூக அமைப்பின் எல்லைக்குள் தான் இயங்குகின்றது. இதை வேறு ஒன்றாக இருப்பதாக எப்போதும் முதலாளித்துவ அறிவித்துறையினர் மீண்டும் மீண்டும் கூக்குரல் இட்டபடி வானத்தையே வில்லாக்க முனைகின்றனர். ஆனால் அது எப்போதும் சொந்த முரண்பாட்டாலேயே சிதிலமடைகின்றது. அவர்களின் கட்டியமைத்துள்ள அவர்களின் சமூக அமைப்பே வன்முறையின் கோரமான மோதலாக மாறிவிடுகின்றது. ஐயா, "மறுபடியம் மார்க்சிடம்" போகும் முன் உங்கள் இந்த பொருளாதாரம் அல்லாத அந்த ஆய்வுகளை முதலில் வையுங்கள். நீங்களும் சரி இந்த உலகத்தின் உச்சியில் யாரிருந்தாலும் மார்க்சியத்தின் முன் ஒருக்காலும் முடியாது.

ஆணாதிக்க ஒடுக்குமுறையையிட்டு மார்க்சியம் கவனம் எடுக்கவில்லை என்பது வரலாற்று புரட்டாகும். "ஆணாதிக்கமும் பெண்ணியமும்" என்ற எனது நூலின் மூன்றாவது பாகம் (மிகவிரைவில் வெளிவரவுள்ளது) இந்த புரட்டை ஆதாரத்துடன் தகர்க்கின்றது. ஆணாதிகத்தை எதிர்த்து மார்க்சியம் போராடிய கடந்த 150 வருட வரலாற்றுக்கு நிகராக, யாரும் எதையும் இதுவரை செய்ததில்லை, இனியும் செய்யப்போவதில்லை. மார்க்சியம் மட்டும் தான் ஆணாதிக்கத்தை இந்த மண்ணில் இருந்து புடுங்கியெறியும். கடந்த காலத்தில் பெண்ணின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகப் கோரிக்கையை பாட்டாளி வர்க்கம் உயர்த்தியும் ஆதாரித்தும் போராடிய அதே நேரம், ஜனநாயக் கோரிக்கை அல்லாத அனைத்தையும் எதிர்த்தே வந்துள்ளது. இது தான் பாட்டாளி வாக்கத்தின் எதிர் கால நிகழ்ச்சி நிரலும் கூட.

சாதியத்தை எடுத்தால் அது இந்தியாவுக்கும், இந்தியாவைச் சுற்றியுள்ள ஒரு சில நாடுகளின் குறிப்பான பிரச்சனையாக, வடிவமாக உள்ளது. இந்த விடயத்தில் கடந்தகால மார்க்சிய போராட்ட வரலாற்றில் ஆய்வுகள் பல வெளிவந்தன. அவை கூட பொதுவான தளத்தில் இருட்டடிப்பு செய்யப்பட்ட நிலையிலேயே இன்று வரை உள்ளது. இதன் அடிப்படையில் வீரம் செறிந்த போராட்டங்களை பாட்டாளி வர்க்கம் தொடாச்சியாக நடத்தியும் இருக்கின்றது, நடத்துகின்றது, தொடர்ந்தும் நடத்தும். சாதியம் பற்றிய ஆய்வுகளை அடிப்படையாக கொண்டே 1960 களில் இலங்கையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டம், வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பாட்டாளி வர்க்கமல்லாத அம்பேக்கர் போன்றவர்கள் இந்து மதத்தத்தை ஆரய்ந்த போது, வெறுமானே பண்பாடு கலாச்சார வடிவத்துக்குள்ளேயே சாதியை வரையறுத்து ஆராய்துள்ளனர். பொருளாதார கண்ணோட்டத்துடன் உள்ள சாதிய உறவை திட்மிட்டே ஆராயமறுத்தனர். பொருளாதார துறைக்குள் சாதிய ஆய்வை மறுத்த அவர், இந்தியா நாடளுமன்றத்தில் பொருளாதாரத் துறை சார்ந்து சாதிய ஒழுக்குமுறைக்கு இசைவாக பன்றியைப் போல் அந்த சகதியில் பிரண்டு எழுந்தே பாதுகாத்தார். சாதியம் உண்மையில் உயர் வர்க்கங்களின் பொருளாதார வர்க்க நலனை சார்ந்தே உருவாக்கப்பட்டது. இதைத் தெளிவாக மிக விரைவில் நான் எழுதிவரும் நூல் ஒன்று, தெட்டத் தெளிவாக நிறுவும். சாதியத்தை மார்க்சியம் ஆய்வு செய்யவில்லை என்று சொல்ல எந்த விதத்திலும், «அசை» க்கு அருகதை கிடையாது. ஏனெனில் சாதியத்தை பொருளாதார அமைப்புக்கு வெளியில் சுயமாக இருப்பதாக பிதற்றும் போதே, அதன் வக்கிரம் வெளிப்படுகின்றது.

தேசியத்தை மார்க்சியம் ஆய்வு செய்யவில்லை என்பது, உலகறிந்த மூடர்களின் பிதற்றலாக மட்டுமே இருக்கும். தேசியத்தை மார்க்சியம் ஆய்வு செய்யாதளவுக்கு, இதுவரை யாரும் செய்தலில்லை. லெனின், ஸ்டாலின் தேசியம் பற்றி ஆய்வுகள் அது சார்ந்த பங்களிப்புகள், தேசியம் உள்ளவரை யாரும் பூசி மொழுக முடியாது. அடுத்து தேசியத்தை பொருளாதாரத்துக்கு வெளியில் ஆய்வு செய்யவேண்டும் என்பது, அசோக் யோகனின் அசைக்க முடியாத கோரிக்கை. இதை புலிகள் சிறப்பாக செய்துள்ளனர். இதைவிட யாரும் புதிதாக முன்வைக்க அவதரிக்க தேவைவயில்லை. சிலவேளை நீங்கள் பொருளாதாரத்துக்கு வெளியில் உருவாக்கிய புளொட் அமைப்பு புலிகளுக்கு பதில் அதிகாரத்துக்கு வந்திருந்தால், சிலவேளை எல்லாம் சரியாகியிருந்திருக்கும். இப்பவும் கூட பிரச்சனையில்லை. தேசியத்தை பொருளாதாரத்துக்கு வெளியில் விளக்கி போராடும் புலியுடன் இணைந்து அதைப் பலப்படுத்தலாம். மாாக்ஸ் அங்கே வந்து இணைவது என்பது, அதாவது நீங்கள் பொருளாதாரம் அற்ற தேசியத்தை நோக்கி "மறுபடியும் மார்க்சிய"த்திடம் அழைத்துச் செல்ல நினைப்பது, இந்த நூற்றாண்டின் மாபெரும் அறிவு களஞ்சியமாகிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எதற்கும் முயலுங்கள்!

"சுற்றுச்சூழல், சமபாலுறவு, உளவியல்" போன்ற "பொருளாதாரமல்லாத" விடையத்தை மார்க்சியம் கவனிக்கவில்லையாம். சுற்றுச்சூழல் பிரச்சனை என்பது பொருளாதாரத்துடன் தொடர்புடையது இல்லையாம். நம்புங்கள். ஆனால் கார்ல் மார்க்ஸ் இது பற்றி "தொழிற்சாலை முதலாளிகள் சுத்தமும் சுகாதாரமும் பேணும் வழிமுறைகளை, கடைபிடிப்பதன் மூலம், தங்களுடைய லாபத்தில் பாதிப்பு ஏற்படும் எனில், ஒருபோதும் அதைச் செய்வதில்லை." என்று தொலைச் சாலைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள நிலையை தெட்டத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெளிவாகவே கூறிவிடுகின்றார். மூலதனத்தில் இது பற்றி நிறையவே எழுதுகின்றார். உழைக்கு மக்கள் சுவசிக்க முடியாத அளவுக்கு, எப்படி தொழிச்சாலைகள் உள்ளது என்பதை ஆதாரத்துடன் நிறுவுகின்றார். இன்று போல் அன்று உற்பத்திகள் பெரியளவில் சூழலை நாசமாக்கவில்லை. அதன் எல்லைக்குள் கூட மார்க்ஸ் எங்கெல்ஸ் பல கட்டுரைகளில் இவை பற்றி அம்பலம் செய்துள்ளனர். உலகமயமாதல் உற்பத்தி அனைத்தும் சுற்றுச்சூழலை மீறுபவானவாகியுள்ளது. இப்படி இருக்கின்ற போது, அது பொருளாதாரம் சார்ந்தவையல்ல என்பது «அசை» யின் நவீன கண்டுபிடிப்பு. இயற்கையை அழிக்கும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் ஒரு பக்கம் இருக்க, அதை மார்க்சியம் கவணத்தில எடுக்க தவறி விட்டதாக கூறியபடி, சமபாலுறவை மார்க்சியம் அங்கீகரித்து கவனமெடுக்க தவறிவிட்டதாக குற்றம் சாட்டுகின்றனர். பாலியல் கூட சுற்றுச்சூழல் சார்ந்த இயற்கை என்ற எல்லைக்குட்பட்டதே. இயற்கைக்கு புறம்பான பாலியல் கூட இயற்கையை அழிக்கின்றது. «அசை» யின் முரண்பாடு அடிப்படை விடயத்திலேயே நீட்டுகின்றது.. சுற்றுச்சூழல் பிரச்சனை கூட இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பே பாரியளவில் பிரச்சனைக்குரியதாகியது. இரண்டாம் உலக யுத்ததின் போது யுத்த ஆயுதமாக உபயோகிக்கப்பட்டவையும், அது சார்ந்த அறிவியலின் வெளிப்பாடுகள் தான், பிந்திய சமூதாயத்தில் மூலதனத்தை திரட்டுவனவாகி சுற்றுச்சூழலை அழித்து விடும் ஒரு வடிவமாகியுள்ளது. (இங்கு சுற்றுச்சூழல் என்ற சொற்பதத்தையும் அதன் உள்ளடகத்தையும் மார்க்சியம் நிராகரிக்கின்றது. இது தனிச் சொத்துரிமை கண்ணோட்டம் சார்ந்தது இயற்கையை மனிதனுக்கு அடிமையாக்கி விளக்குவதாகும். இதை விரிவாக வெளிவரவுள்ள "உலகமயமாதலும் சர்வதேசியமும்" என்ற எனது நூலில் ஆராய்துள்ளேன்) இதை நடைமுறையில் போராடும் எல்லா சிறு போராட்டங்களிலும், பாட்டாளி வர்க்கம் நடைமுறை சார்ந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பை கோரி போராடுவதை குருட்டு கண்ணாடி போட்டவர்களால் ஒருக்காலும் காணமுடியாது. இது போன்று இன்ற உலகமயமாதல் விளைவால் சந்திக்கும் உளவியல் பிரச்சனையை, பொருளாதாரத்துக்கு வெளியில் ஆய்வு செய்யவும், போராடவும் மார்க்சியத்தை அழைத்து, விபச்சாரம் செய்ய கோரியபடி இதையே "மறுபடியும் மார்க்சிடம்" அழைத்துச் செல்வதாக கூறுபவர்கள் உலகமயமாதலுக்கு வாலாட்டி குலைப்பவர்களே. இது «அசை» க்கும் பொருந்துமல்லவா!

உலகமயமாதலுக்கு வாலாட்டி குலைக்க அழைக்கும் «அசை» , அதையே அழகாக ".. ஏகாதிபத்திய சதி, பிற்போக்குவாதம், தன்னார்வக் குழுக்களின் சதி, புரட்டல்வாதம், திரிபுவாதம் என்பதை நமது தோல்விக்கான காரணங்களாக உச்சாடணம் செய்து கொண்டிருக்க முடியாது" என்று கூறுகின்றது. இப்படி கூறுபவர்கள், எதைத்தான் இந்தத் தோல்விக்கு காரணம் என்று ஒரு வரியில் தன்னும் சொல்ல வக்கற்றவராகிவிடுகின்றனர். அதாவது திரிபுவாதம் தொடங்கி ஏகாதிபத்திய ஊடுருவல் வரை ஒரு கம்யூனிசக் கட்சியில் அல்லது புரட்சிக்கு பிந்திய நாட்டில் இருக்கவே முடியாது என்று, அசைத்து அடித்துச் சொல்லும் இவர்களே அதன் பிரதிநிதியாக இருந்தபடி, அதைப் பாதுகாக்க சபதம் ஏற்கின்றனர். வரலாற்றில் இந்த நிகழ்வுகள் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் மட்டுமல்ல, பல்வேறு வர்க்கங்களின் வர்க்கப் போராட்டத்திலும் கூட நடப்பவைதான். இது நிகழவே முடியாது என்பது, உள்ளடக்கத்தில் இந்த போக்கை அரசியல் ரீதியாக பாதுகாக்கும் முயற்சியாகும். பாட்டாளி வர்க்க கட்சி அல்லது புரட்சிகர நாடு தனது வர்க்க கடமையை கைவிட்டு துரோகம் செய்வதை எப்படி அடையாளம் காண்பது. இதை சொல்லாத «அசை» , அதை மூடிமறைத்து பாதுகாக்க சபதம் ஏற்கின்றது.

இந்த மார்க்சிய விரோத அரசியலை அரங்கேற்றிய தொடர்ச்சியில் "ஸ்டாலினிசம் குறித்த நிறையப் பேசியாகிவிட்டது. டிராட்ஸ்கியத்தின் நிரந்தரப் புரட்சி குறித்தும், மாவோயிசத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பங்களிப்புகளாகச் சொல்லப்படுகின்ற கலாச்சாரப் புரட்சி மற்றும் மாபெரும் பாய்ச்சல் போன்றவை குறித்தும் நாம் பேசியாக வேண்டும்'' என்பது கூட ஒரு வேடிக்கையான வாதமே. உண்மையில் இங்கு பேசியாக வேண்டும் என்பது, ஸ்டாலின் மீதான அவதூறு போன்று மாவோவின் காலச்சார புரட்சி குறித்து அவதூறுகளை பேசியாக வேண்டும் என்பதே. ஸ்டாலின் பற்றி பேசியதாக கூறுபவை எல்லாம், ஸ்டாலின் பற்றிய அவதூறகளே. ஸ்ராலின் பற்றி பாட்டாளி வர்க்கம் வைத்த எந்த விவாதத்துக்கும் இன்று வரை, "மறுபடியும் மார்க்சிடம்'' செல்லும் யாரும் பதிலளிக்க வக்கற்றவரகவே உயிர் வாழ்கின்றனர். ஆதாரமற்ற வெற்றிடத்தில் இருந்து ஏகாதிபத்திய கழிசடைகள் செய்தியாக்க, அதில் இருந்து கவனமாக அவதூறுகளை பொறுக்கியெடுத்து தொகுப்பதையே, "மறுபடியும் மார்க்சிடம்'' என்ற சொல்லி அசைகின்றனர். ஸ்டாலின் புரட்சிகர மார்க்சிய வரலாற்றை ஏற்று அதை முன்னெடுத்த மாவோவுக்கு எதிராக அவதூறை முன்வைப்பது «அசை» போன்ற கும்பலுக்கு அவசியமாகின்றது. கலாச்சார புரட்சியூடாக நடத்திய வர்க்கப் போராட்டத்தில் இருந்து, அவதூறை கண்டுபிடிக்க கோருகின்றனர். இதற்கு மார்க்சியத்தில் இருந்து விலகிய டிராட்ஸ்கியின் நிரந்தர புரட்சி தத்துவத்தை முன்வைக்க வேண்டும் என்கின்றனர். நிரந்தர புரட்சி என்பது என்ன என்பதையே விளக்க முடியாதவர்கள், அதை தூக்கி காட்டுவதுதான் இன்றைய அவலமான அரசியலாகும்.

இந்த அவலத்தில் தொங்கியபடி "அமைப்பியல்வாதம், பின்நவீனத்தவம் போன்றவற்றின் வர்க்கத் தன்மையும், வலதுசாரி இடதுசாரி நிலைப்பாடுகளையும் நாம் அவதானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.'' எனறு கூறி "மறுபடியும் மார்க்சிடம்'' அசைவதாக கூறுவதும் நிகழ்கின்றது. பின்நவீனத்துவம், அமைப்பியல்வாதம் என்பன மார்க்சியத்துக்கு எதிரான திட்டவட்டமான ஒரு கோட்பாடாகும். இதில் இடது வலது என பிரித்து மார்க்சியத்துக்கு ஒட்டுப் போட்டு விடக் கோருவது இன்றைய நவீன திரிபுவதமாகும். எல்லா சமூகக் கோட்பாட்டிலும் வலது இடது தன்மை இருப்பது இயற்கை. அதில் இடது தன்மையை முரணற்ற மாக்சியம் உள்வாங்க வேண்டும் என்பதும், மார்க்சியத்துடன் இனைத்து விளக்க முயல்வதும், மார்க்சியத்தை அதன் அடிப்படையில் இருந்து வெட்டித் திரித்துவிட முயல்வதாகும். கடந்தகால நிகழ்கால திரிபுவாதிகளால் இந்த முயற்சியை உலக முழுக்க மீளமீள செய்ய முயன்று பலமுறை தோற்றனர். இந்தப் போக்குகள் அம்பலப்பட்டு வருவதும், வர்க்கப் போராட்டம் இதற்கு எதிராக கூர்மையாகி வருவது இன்றைய உலக நிலையாகும். இந்த வர்க்கப்போராட்ட வரலாற்றில் சினிமா பாணியில் மாக்சியத்தை வெட்டித் திருத்தி முன்வைக்கும் எல்லா மோசடிகளும் அம்பலப்பட்டு வருகின்றன. இந்த வகையில் விளம்பர பாணியில் வந்த «அசை» யும் அதன் வர்க்க அடிப்படையும் நிர்வாணமாகி விடுகின்றது.

# மீண்டும் வன்முறையில் குளிர்காயும் கோஸ்டிவாதம்

பரிசில் வன்முறை என்பது ஒரு மொழியாக, அதுவே கோஸ்டி கானமாக மீண்டும் ஒருமுறை அரங்கேறியுள்ளது. இம்முறை இந்த கோஸ்டி வாதம் வெகுஜன அமைப்பு ஒன்றை வலிய வன்முறையுடன் சம்பந்தப்படுத்தியுள்ளது. இந்த வெகுஜன அமைப்பின் கருத்தை கேட்பதற்கு பதில் அதற்கு ஒரு முத்திரையை வழங்கிய குறுங்குழுவாதம், கோஸ்டிவாதத்தை ஆழமாக்கியுள்ளது. இந்த முத்திரையை வன்முறையால் பாதிகப்பட்டவாகளின் கோஸ்டி வழங்கிய போது, ஜெர்மனியில் சிலரும் பரிசில் சிலரும் முந்தியடித்துக் கொண்டு, ஒருதலைப் படசமாக கருத்தை தெரிவித்தன் மூலம், இந்த கோஸ்டி கான இராகத்தில் பங்காளியாகியுள்ளனர்.

14.6.2002 அன்று பாரிசில் தமிழர் செறிந்த பகுதியில் தொடங்கிய கருத்து பரிமாற்றம், பரஸ்பர வாக்கு வாதமாகவும், தூற்றலாகவும் மாறிய பின், அந்த இடத்துக்கு சற்றுத் தொலைவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்து அசோக் மீதான வன்முறையானது. இதைத் தொடர்ந்து அவதூறை விதைப்பதில் குழுவாதம் களைகட்டியுள்ளது. இந்த வன்முறை கடந்த கால பல நிகழ்வுகள் போல் கண்டனத்துகுரியானவே. இதை எக்காரணம் கொண்டும் யாரும் நியாப்படுத்த முடியாது. வன்முறை என்பது உடல் ரீதியாக மட்டும் நாம் மதிப்பீடவில்லை. மொழி ரீதியாகவும் கூட நாம் வரையறை செய்தே, வன்முறைக்கு எதிராக நாம் போராடுகின்றோம். ஒற்றை வரி கிண்டல்கள், அவதூறுகள் போன்றன கூட மொழி ரீதியான வன்முறையே. மொழி ரீதியான வன்முறையின் படி நிலை வளர்ச்சி தான் உடல் ரீதியான வன்முறை. அரசியலற்ற வெற்று வம்புகளால் சிந்தனை மழுங்கடிக்கப்பட்டு வன்முறைகள் வித்திடப்படும் போது, குற்றத்தை ஒருதரப்பில் மட்டும் முத்திரை குத்த நாம் தயாரில்லை.

இங்கு நடந்த உடல் ரீதியான வன்முறைக்கு பின்பாக இது பற்றி பல்வேறு விதமான அபிராயங்களை எற்படுத்தவதில் ஒரு கோஸ்டி சார்ந்து முனைப்பாக செயல்படுகின்றது. ''கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம்'' மீது குற்றச் சாட்டை முன்வைத்து வெளிவந்த இரண்டு துண்டு பிரசுரங்கள், இந்த சம்பவத்தை திரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. ''கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம்'' என்ற அமைப்பை ''மட்டக்களப்பு வளர்ச்சிக்கான சங்கம்'' என்று திரித்தது முதல், தனிப்பட்ட அசோக்கின் அபிராயத்தை இத் துண்டுப் பிரசுரம் வாந்தியெடுத்துள்ளது. அசோகே ''மட்டக்களப்பு சங்கம்'' என்று கொச்சையாக தனிப்பட்ட நலன் சார்ந்து கூறித் திரிபவர். அதை அப்படியே வாந்தியெடுத்தத்தன் மூலம் உண்மையை இவர்கள் அறிய முடியாத குறுங் குழுவாத்தின் வக்கிரத்தை வெளிப்படுத்தி நின்றனர். பிரதேசவாத எதிப்பளார் அசோக் என்ற ஒரு மாயை பொய்யானது. மாறாக விளம்பரத்தனமானது. ரி.பி.சி (புலி எதிர்ப்பை அடிப்படையாக கொண்ட இந்திய மற்றும் அரசு சார்பானது), ஐ.பி.சி (புலி சார்பானது) ரேடியோக்கிடையில் நடந்த போராட்டத்தின் போது, இதே அசோக் புலி எதிர்ப்பை அரசியலாக்க ரி.பி.சிக்கு (கிழக்கு பிரதேசத்தை சேர்ந்தோர் நடத்தியதால்) வக்காளத்து வாங்கி, ஐ.பி.சி ரேடியோவில் வேலை செய்ய கிழக்கைச் சேர்ந்தவர்களை பிரதேச ரீதியாக பிரிக்க முனைந்தவர். இதற்காக அவர் பல முயற்சியில் ஈடுபட்டவர். இவர் பிரதேசவாதத்துக்கு எதிராக போராடுவதாக பலர் கதை சொல்ல முனைகின்றனர். (உண்மையில் இந்த ரேடியோக்கு பின்னனியில் அசோக் சார்ந்த விடையங்கள் இன்னமும் உள்ளது.)

இவர்கள் தான் ''கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்தின்'' அபிராயம் என்ன என்பதை அறியமுன்பு, ஒரு தலைப்பட்சமாக ஒரு சங்கத்தின் மீது அப்பட்டமான அபாண்டமான குற்றச் சட்டுகளை சுமத்தியுள்ளனர். ஒருபுறம் அவர்களுடன் இந்த வன்முறைக்கு எதிராக கருத்தை பரிமாறியபடியும், பேச்சு வார்த்தைக்கு வரும்படி அழைப்பு விட்டபடியும் ஒன்றியத்தை கொச்சைப்படுத்தவதில் வேகம் காட்டுகின்றனர். இந்த கண்டன தீர்மானம் இரண்டும் இணைய துண்டுபிரசுரம் மூலம் எமக்கு கிடைத்த போது, 51 பேர் கையெழுத்திட்டு இருந்தனர். கையெழுத்திட்டோரில் எத்தனை பேர் கிழக்கிலங்கை ஒன்றியத்துடன் இது தொடர்பாக கதைத்தனர். கிழக்கிலங்கை ஒன்றியம் எப்போதாவது எங்கேயாவது இந்த வன்முறையை நியாப்படுத்தியதை காட்ட முடியுமா? அவர்களுடன் கதைக்காத நிலையில் கண்டணம் விடுவத்தில் காட்டிய அறியமை, குறுகிய குழுவாத கோஸ்டி தன்மை முதன்மை பெற்றதைக் காட்டி நிற்கின்றது. அத்துடன் முன்னைய வன்முறையை எதிர்க்காத வன்முறையாளராகவே இருப்பது மற்றோரு உண்மையுமாகும்.

வன்முறை இன்று நேற்று நடந்தவைகள் அல்ல. வன்முறை இலங்கை வரலாற்றில் தொடருகின்றது. இதில் தனியாக பாரிஸ் வரலாறு உண்டு. இதிலும் மாற்றுக் கருத்து முன் வைக்கும் இலக்கிய நபர்களிடையேயும் வன்முறை நடந்துள்ளது. மாறக இப்போது நடந்த வன்முறையே தூபமிட்டதாக ''வன்முறையின் சாதாரணமாகலை மறுத்த□'' என்ற துண்டுபிரசுரம் குறிப்பிடுகின்றது. ஆனால் வன்முறையை புலிகளும் மற்றும் இயக்கமும் அல்லாத தளத்தில் சாதாரணமாக்கியவாகள் யார்? இந்த வன்முறைக்கு அதித்திரவாரம் இட்டவர்கள் யார்? நீங்கள் தான் என்பது வெள்ளிடமலை. 1999ம் ஆண்டு பாரிசில் ஒரு இலக்கிய நிகழ்வில் மாற்றுக் கருத்து களங்களில் வன்முறை அப்பட்டமாக அரங்கேறியது. இன்று நடந்த வன்முறையால் பாதிக்கபட்ட அசோக் உட்பட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று கையெழுத்திட்ட பலர், அந்த வன்முறைக்கு ஆதாரவாக இருந்தனர், இன்றும் இருக்கின்றனர் என்ற உண்மையை நாம் எப்படி சாதரணமாக்கி ஜிரனிக்கமுடியும். இன்று வரை இந்தக் கணம் வரை அதைக் கண்டிக்கவில்லை. அன்று வன்முறையை நியாப்படுத்தி அதை ஆதாரித்து நின்ற அசோக் உட்பட யாரும், பொதுவான வன்முறையை கண்டிக்கவில்லை. மாறக குறிப்பாகவே கண்டிக்கின்றனர். இதில் தான் கையெழுத்திட்டவர்களின் குறுகிய குழுவாக கோஸ்டி வாதம் புதிய வடிவில் பங்கேற்கின்றது.

அன்று வன்முறையை நிறைவேற்றிய போது அதைக் கண்டித்து துண்டுப்பிரசுரங்கள் வெளி வந்த போது, வன்முறைக்கு எதிராக துண்டுப்பிரசுரம் விட்டது துரோகம், காட்டிக்கொடுப்பு என்றவர்கள், இன்று ஏன் துண்டபிரசுரம் விடவில்லை என்று வேடிக்கையாக கேள்வி எழுப்புகின்றார்கள். எழுப்பியவர்கள் குறிப்பான வன்முறையை மட்டும் கண்டிக்க வேறு கோருகின்றனர்.

“கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம்” இந்த வன்முறையை எதிர்த்தே குரல் கொடுத்துள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. அவர்களுக்கிடையில் நடந்த பேச்சு வார்த்தையில் இதை அவர்கள் தெளிவுபாடவே குறிபிட்டு இருந்தனர். ஆனால் அதை யாரும் கவணத்தில் எடுப்பதை திட்டமிட்டு மறுத்தனர். வன்முறையில் ஈடுபட்டவர்களின் நடத்தையை அவர்கள் தெளிவாகவே பேச்சு வார்த்தையின் போதும், துண்டு பிரசரத்திலும் கூட தெளிவுபடுத்தியுள்ளனர். ஆனால் ஒன்றியத்தின் மேல் ஒருதலைப்பட்சமாக குற்றம் சாட்டவதன் மூலம் எதை செய்ய விரும்புகின்றனர். உண்மையில் யாழ் மேலாதிக்க ஆதிகத்தையே.

“கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம்” பிரதேசவாதத்தை விதைப்பதாகவும், அதானல் அதை எதிர்ப்பதாகவும் பசாங்கு செய்யும் கோஸ்டி வாதம், இதுவரையும் அந்த பிரதேசவாதத்தை முன்வைத்தில்லை. அவர்கள் தமது பெயரை “கிழக்கிலங்கை” என்ற வைத்தன் மூலம் இலங்கையின் ஒரு பகுதியாகவே தம்மை வெளிப்படுத்தி நிற்கின்றனர் என்ற உண்மையை, எவ்வளவு அழகாக இக் கோஸ்டியால் “மட்டக்களப்பு” என்று பூச்சூடி முடிமறைக்கப்பட்டுள்ளது. யாழ் பாடசாலைகள் பல தனக்குள் மட்டும் சங்கம் அமைத்து இயங்கும் போது அதில் பிரசன்னமாகும் இவர்கள், அதைவிட முன்னேறிய நிலையில் இலங்கையின் ஒரு பிரதேசத்தின் கல்வி சாந்து உதவ முற்படுவதையே இவர்கள் வஞ்சிக்கின்றனர். மற்றைய பிரதேசங்களை (அதாவது வடக்கு, மற்றைய இலங்கை பிரதேசங்களை) இவர்கள் இழிவுபடுத்தி இருப்பின், அதை ஆதாரமாக வைக்கவேண்டும். இல்லாமல் வம்பு அரசியல் செய்யும் முத்திரை குத்தல்களை, ஒற்றை வரிகளில் சாதரணமான மனிதர்களுடன் சாதரணமாக்கும் போது, தனிப்ட்ட மனிதர்களின் உணர்வு சார்ந்து வன்முறை சாதாரணமாகிவிடுகின்றது. இவை திட்டமிட்ட நடத்தப்படுபவையல்ல. பாரிஸ் துண்டு பிரசுரம் இவை “எதேச்சையானவையல்ல” என்ற குறிப்பிடுவதன் மூலம், இவை திட்டமிட்டதாக புனைய முயலுகின்றனர். “கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியமே” இதை திட்டமிட்டு “எதேச்சையானவையல்ல” வகையில் நடத்தியதாக இவர்கள் அவதுாறு செய்கின்றனர். இது ஒரு அப்பட்டமான கூற்று. நிகழ்ச்சிகள் நடந்த வடிவமும் தொடர்ச்சியும் பல நம்பகமற்ற கூற்றுகளின் பின்னனியிலும் கூட, தன்னியல்பாகவே நடந்தது. திட்டமிடப்படவை என்றால் அதாவது “எதேச்சையானவையல்ல” என்றால் அது யாரால் நடத்தப் பெற்றது என்பதை சொல்ல வக்கில்லாமல், சொற்களால் சேறு பூசுகின்றனர்.

நாம் வன்முறையின் ஒன்றை கண்டிக்கின்றோம் என்றால் நிச்சயமாக
1.கடந்தகால மக்கள் விரோத வன்முறைகள் அனைத்தையும் கண்டிக்க வேண்டும். கடந்த காலத்தில் கண்டிக்க தவறியவைகளை நிகழ்காலத்தில் கண்டிக்கவேண்டும். சம்பந்தபட்டவர்களின் கடந்த காலம் முதல் நிகழ்காலம் வரை வன்முறை அடையளம் தெளிவாக கண்டிக்கப்பட்ட வேண்டும். இந்த வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் சொந்த சுயவிமர்சனத்தை தெளிவாக செய்ய வேண்டும். அதே நேரம் கடந்த கால வன்முறையை கண்டித்தவர்கள், நிகழ்கால வன்முறையையும் கண்டிக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.கடந்த காலத்தில் மக்கள் விரோத வன்முறைக்கு எதிரான குரல்களை, நிபந்தனை இன்றி அங்கிகாரிக்க வேண்டும். அதை கொச்சசைப்படுத்திய படி புதியதை கண்டிப்பது வன்முறையை நியாப்படுத்துவதாகும்.

இவை இரண்டும் அல்லாத கண்டனங்கள் குறுகிய அரசியல் மற்றும் குழுவாக கோஸ்டி நோக்கம் கொண்டவை. "கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம்" இந்த வன்முறையை கண்டிப்பதாக கூறி நடத்திய பேச்சுவார்த்தை முதலே, அந்த அமைப்பின் மீதான குற்றச்சாட்டுகள் அபத்தமான அவதூறுகளாகும். இந்த ஒன்றியத்துடன் கையெழுத்திட முன்பு அவர்களுடன் பேசி உண்மை நிலையை அறிய மறுத்தவர்களின் நோக்கம் சந்தேகத்துக்குரியதாகின்றது. இந்த ஒன்றியத்தை பிரதேசவாத கொண்டதாக குற்றம் சட்ட எந்த ஆதாரத்தை கோட்பாட்டு ரீதியாக வைக்க முடியாதவர்களின் அடிப்படை, யாழ் மையவாதம் என்பதும் கேள்விக்கிடமற்றது.

1.நாம் மக்கள் விரோத அனைத்து வன்முறையையும் எதிர்ப்போம். அதில் குறிப்பான நிகழ்வையும் எதிர்க்கின்றோம்.
2.பிரதேச வாதம் என்ற ஆதாரமற்ற அவதூறு யாழ் மையவாத்தில் இருந்தே எழுகின்றது. இதை எதிர்த்து நாம் போராடுவோம்.
3.மக்களின் நலன்களில் அக்கறையுள்ள அமைப்புகளின் வளர்ச்சிக்கான ஆதாரவுகளை நிபந்தனைகளுடன் நல்குவோம்.
4.எதையும் ஆராயாத, ஆதாரமற்ற கோஸ்டி வாதங்கள், குழுவாதங்களின் அவதூறுகளை எதிர்த்து போராடுவோம்.
5.அன்றைய மக்கள் விரோத வன்முறை முதல் இன்றைய வன்முறை வரை கண்டிக்காத கோஸ்டி குறுங்குழுவாத அரசியலை நாம் எதிர்த்து போராடுவோம்.

சமர்
22.06.2002

குறிப்பு: நடந்த வன்முறைக்கு எதிராக திட்டமிட்டு நடத்தும் கண்டன கூட்டத்தை நாம் பகிஸ்கரிக்க அழைப்பு விடுகின்றோம். இந்த வன்முறைக்கு எதிராக அழைப்புவிட்டவர்கள் கடந்த காலத்தில் இதே போன்ற வன்முறையில் ஈடுபட்டவர்கள். அதை சுயவிமர்சனம் செய்து கண்டனம் செய்யாது இன்றும் நியாப்படுத்தும் அழைப்பு, தமது சொந்த வன்முறையை நியாப்படுத்த விடும் விளம்பர அழைப்பாகும்.

**பின் இனைப்பு:**

➥வன்முறை எதிர்ப்பாளர்கள் என்ற விளம்பரத்துடன் சொந்த வன்முறையை பாதுகாத்தபடி கூத்தாடிய அசோக், சம்பவம் நடந்த அடுத்த நாளே அதாவது 15.6.2002 அன்று மீள் வன்முறைக்காக வீதிகளில் அலைந்த போது ஜனநாயகம் சிரித்துக் கொண்டிருந்தது. முதல் நாள் வன்முறையில் சம்பந்தப்பட்டதாக ஒருவரை அடையாளம் கண்டு ஒரு குழுவாக துரத்திச் சென்ற கதை, இதற்குள் ஒரு தனிக் கதையாகவே உள்ளது. ஆனால் இதை வன்முறைக்கு எதிரானது என்ற அடிப்படையில் இதுவரை யாரும் அம்பலம் செய்யப்படவுமில்லை, யாரும் கண்டிக்கவுமில்லை.

➥ தாக்குதல் நடத்தியவர் "மட்டக்களப்பு வளர்ச்சிக்கான சங்கத்"தைச் சோந்தவர் என்று துண்டுபிரசுரம் மூலம் கூறவைத்தவர், பின்னர் அடித்தவரின் மன்னிப்புடன் சங்கத்தை கைவிட்டு விடுகின்ற முரண்பாடு தொடங்குகின்றது. இதே நபர் வன்முறை நடந்த இரண்டாம் நாளே மன்னிப்பு கேட்க தயாராக இருந்த போதும், அதை நிராகரித்து துண்டுபிரசுரங்கள் மூலம் கோஸ்டி வாதம் மெருகுட்டப்பட்டது. வன்முறையை ஒன்றியம் கண்டிக்க தயாரக இருந்த போதும், அசோக் கோஸ்டி ஆரம்பம் முதலே கூட்டாக வன்முறையை கண்டிக்க தயாராக இருக்கவில்லை. கோஸ்டி வாதத்தைக் கட்டமைப்பது அவசியமாக இருந்தது. கொழும்பு செய்திப் பத்திரிகை வரை இதை விளம்பரம் செய்வதன் மூலம் இதை மன வெட்கமின்றி கோஸ்டி அரசியலாக்கினர். இந்த அரசியல் தற்செயலானவையல்ல. கடந்தகால புளாட் இயக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் விரோத அரசியலை எப்படி சதிப்பாணியில் ஜனநாயகப்படுத்தி பூச்சடித்து மக்களை ஏமாற்ற முடிந்ததோ, அதை அப்படியே அதே தொடர்ச்சியில் இது மீள அரங்கேறியுள்ளனர்.

➥அசோக்கிடம் பணம் கேட்டும், இணையக் கோரி அடித்தாக கூறுவது முழுபுரட்டாகும். இனையக் கோருவதும், உதவி கோருவது ஒரு ஜனநாயக உரிமையாகும். அதை கொச்சைப்படுத்தி கேவலப்படுத்தி வன்முறையைத் துண்டுவது கூட வன்முறையாகும். இதற்கு பலியாபர்வர்கள் தனிமனித குணம் சாாந்துவிடுகின்றது. அசோக்கை தாக்கியவர் துப்பாக்கி முனையில் மிரட்டியதாக கூறப்படும் சம்பவம், தாக்குதலை மெருகுட்ட புனையப்பட்ட இனைப்பாகும் என்ற சந்தேகம் மேலும் வலுக்கின்றது. இவருடன் அருகில் இருந்தவர் துப்பாக்கியை தான் நேரடியாக காணவில்லை என்று எனக்கு ஒத்துக் கொண்டுள்ளார். ஏதோ ஒன்றை வைத்திருந்தாகவும், தான் துார இருந்தால் சரியாக தெரிந்து கொள்ள முடியவில்லை என்றே கூறினர். அசோக் தனது பெயரில் 26.06.2002 இல் வெளியிட்ட துண்டுபிரசுரத்தில் முதன் முறையாக இரண்டவது நபரே துாப்பாக்கி வைத்திருந்தாக கூறுகின்றர். முதலில் தாக்கியவர் கீழே விழுந்த போது தனது கழுத்தில் துாப்பாக்கி வைத்திருந்தார் என்று முன்பு வாய் மூலம் கூறியவர், இரண்டவது நபர் வைத்திருந்தாக துண்டுபிரசுரத்தில் கூறுகின்றார். அடித்தவருடன் வந்த மற்றவர்கள் சங்க நடவடிக்கைக்கு ஆதாரவாக வந்தவர்கள் என்கின்ற போது, அடித்தவருக்கு மன்னிப்பு மற்றவர்களுக்கு நடவடிக்கை என்ற கேலிச் சித்திரம் அரங்கேற்றும் கதையளப்பு அபிராயங்கள் எல்லாம், கோஸ்டி வாதம் அம்பலமாகி தனக்கு எதிராக மாறுவதை தடுக்கும் ஒரு தற்காப்பு முயற்சியாகும். இதை புனைந்து காட்ட ஒன்றியத்தின் நிறுவனர் பெயரை மீள இனைத்தன் மூலம் ''யன்னலைத் திற'' என்ற பழைய இவரின் பிரசுரம் ஒன்றின் தொடாச்சியை, அதே கோஸ்டி கானத்துடன் தொடரும் புனைவுகளாக்கவே மீள முயல்கின்றார். ஆயுதத்துடன் திட்டமிட்ட தாக்கி, சுட்டுக் கொள்ளவும் வந்தனர் எனின்

➧''கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியுமா'' ஆயுதத்தைக் கொடுத்த அனுப்பியது! அல்லது

➧எக்சில் அல்லது அதன் ஆசிரியர்களில் ஒருவரான ஞானம் என்ற ஸ்ராலின் கொடுத்த அனுப்பினரா! அல்லது

➧தனிநபராக கொண்டு வந்தரா! அல்லது

➧புலிகள் கொடுத்த விட்டனரா! (வன்முறைக்கு எதிராக பாரிஸ் துண்டுபிரசுரத்தில் புலிகளின் ஈழமுரசு ஆசிரியரும் கையெழுத்திட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எல்லாம் புலி மயமாவது போல் வன்முறைக்கு எதிரான குரலும் புலிமயமாகின்றது அல்லவா!.) அல்லது

➧பின்னனி நோக்கத்துடன் குறுந்தேசியவாதிகள் வதந்தியாக பாரப்பும் ராசிக் குழு கிழக்கில் இருந்து ஆயுதத்துடன் வந்துள்ளனரா! அல்லது வேறு யாருமா!

இரண்டாவது அல்லது முதலாவது நபரிடம் யார் ஆயுதம் கொடுத்த விட்டனர். வன்முறைக்கு எதிரான கோஸ்டியைச் சேர்ந்தோர் தெரிந்து தானே கையெழுத்திட்டர்கள். இதை தெளிவாக கூறுங்களேன் யாரென்று!

➥எதேச்சையாக அல்லாது திட்டமிட்டு தாக்க வந்தவர்கள் திடமிட்டு தாக்கவும் துப்பாக்கியால் சுடுவதற்கும் பதில், பல தமிழர்கள் பார்த்து நிற்கவும், பல பொலிஸ் உளவாளிகள் நாடமாடும் கடையிலும் வீதியிலும் வைத்து ஏன் வாக்குவாதப்பட்டனர். உண்மையில் தாக்கவரவில்லை என்பதும், தற்செயலான வாக்குவாதம் தனிப்பட்ட மனித இயல்புடன் வன்முறைக்கு இட்டுச் சென்றதுமே உண்மை. அப்போது அவர்கள் துவக்கை இழுப்பில் வைத்திருந்தனரா! அல்லது தற்செயலான வாக்குவாத்தின் பின் தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் ஆயுதத்தை எங்கிருந்த பெற்றிருப்பார்கள்!

➥அடுத்த மத்தியஸ்தம் என்ற போர்வையில் (புஸ்பராஜா தான் மத்தியஸ்தம் செய்யவில்லை, அசோக் சார்பாக செயற்பட்டதாக இது வெளிவந்த பின் எனக்கு நேரடியாக கூறினார்) புஸ்பராஜா இந்த விவகரத்தை அசோக் சார்பாக ஊதிப் பெருகியதன் மூலம், இதை வக்கிரப்படுத்தினர். "கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம்" சமன் எக்சில் என்ற அசோக்கின் கூற்றுக்கு இணங்க, எக்சில் அபிராயத்தை ''கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றிய''த்தின் முடிவாக உலகமயமாக்கினர். எக்சில் ஆசிரியர் ஒருவரின் கூற்றை (இதிலும் அவர் கூறியிருந்தால்) கொண்டு செய்த மோசடி கேவலமானது. இதே எக்சில் ஆசிரியர் ஞானத்துக்கு யாராவது அடித்திருந்தால், அசோக்கும் அதே போன்றே கூறியிருப்பார். இது அவர்களின் தனிப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வக்கிர கண்ணோட்டம் தான். இதில் வேறுபாடு அவர்களுக்கு இடையில் இருப்பதில்லை. எக்சில் ஆசிரியர் தாக்கப்பட்டு இருந்தால் அசோக் உட்பட இதில் பெரும்பான்மையானோர் கடைசி வரையும் கண்டனம் விட்டிருக்க மாட்டார்கள். இவை எல்லாம் உங்கள் மனச்சாட்சிக்கு முன் எழுப்பும் கேள்விளே. அசோக் அன்று வன்முறையில் ஈடுபட்ட போது அதை எத்தனை பேர் கண்டித்தீர்கள்! உங்கள் மனச்சாட்சியை தொட்டுச் சொல்லுங்கள்.

➥தாக்கியவர்களை "கடையர்கள், பிரதேசவாதிகள், குழுவாதிகள், வன்முறையாளர்கள்" என்ற எதோ ஒன்றை அல்லது பலதைத் கூறி உண்மைக்கு புறம்பாக குற்றம்சாட்டி கையெழுத்திட்டர்கள். இவை ஏதார்த்ததில் உண்மைக்கு புறம்பானதாக நாற்றம் எடுத்தபோது, கையெழுத்திட்டவாகள் யாரும் இதுவரை தமது நிலையை சுயவிமர்சனம் செய்யவில்லை. தவறுகளை தவறுகளாக சுயவிமர்சனம் செய்ய முடியாதவர்கள் யாரும், மக்களுக்காக எதையும் கிழித்துவிடப்போவதில்லை என்பதே இதன் ஏதார்த்த நிலையாகும். அத்துடன் இவர்களின் சமூக அக்கறை என்பது போலித்தனமானதாகும்.

➥"கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம்" வன்முறைக்கு எதிராக குரல் கொடுத்த அதே கணத்தில், சங்கம் மீதான அவதுறை வாபஸ் பெறும்படி கோரியது. இதன் பின்னால் ஏக்சில் கோஸ்டியும், தலித் பெயரில் இயங்குவோரும் ஒட்டிக் கொண்டனர். கடந்த காலத்தில் தம்மீது அசோக் நடத்த முனைந்த வன்முறையை எதிர்த்து பல துண்டுப் பிரசுரங்களை விட்டனர். ஆனால் அசோக் மீது வன்முறை நிகழ்ந்த போது, இந்த வன்முறையை இவர்களில் எவரும் ஒரு வரியில் தன்னும் கண்டிக்கவில்லை. மாறக வன்முறையை கண்டிக்கத் தவறிய போது, அதை ஆதாரிப்பது வெள்ளிடைமலை. மாறாக தமது கோஸ்டிவாதத்தை அசோக்கு எதிராக பலப்படுத்த, 'கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றிய'த்தின்" கோரிக்கைக்குள் இடையில் நசுக்காக தம்மைப் புகுத்திக் கொண்டனர். ஒரு சங்கத்தின் சதாரண அறிவு எல்லைக்குள் எந்த கோட்பாட்டு எல்லைகளுமற்ற நிலையில், அவர்களில் சிலர் விடக் கூடிய தவறுகளை தமது கோஸ்டிவாதத்துக்கு பயன்படுத்த முனைகின்றனர். இதன் மூலம் எதிர்தரப்பு கோஸ்டிவாதம் வன்முறை மேல் மெதுவாகவும் நசுக்காக குளிர்காய தொடங்கியுள்ளது. அவர்கள் தமது கருத்தை தெளிவாக சொல்ல தவறுவதன் மூலம் வன்முறைக்கு ஆதாரவு தெரிவித்தும், கோஸ்டிவாதத்தை பின்பக்கத்தால் புகுத்திவிடுகின்றனர்.

➥ ஏக்சிலும் தலித் பெயரில் சாதி குறுங்குழுவாதத்தை முன் தள்ளி குளிர் காய்பவர்களும் மற்றும் அசை உயிர்நிழல் கோஸடியும் மார்க்சியம் வன்முறையை இழைப்பதாக ஒன்றுபட்டு கானம் பாடுபவர்கள். இதில் ஏக்சிலும், சாதிய குறுங்குழுவாதிகளும் மார்க்சியம் வன்முறை இழைத்தால் மார்க்சியத்தை ஒழித்துக்கட்டப் போவதாக வலதுசாரி நிலையில் நின்று கோஸ்டி கட்டுபவர்கள். அசையும் உயிர்நிழலும் மாரக்சியம் வன்முறையை இழைத்தால் இடதுநிலையில் நின்று மார்க்சிய அடிப்படையை திருத்தப் போவதாக கூறி மார்க்சியத்தை திரிப்பவர்கள். இந்த கோஸ்டிவாத்தின் பின்பலம் இந்த இரு தெளிவான அடிப்படையில் உலகமயமாகி, கோஸ்டி கானத்தை கட்டமைத்து இசைக்கின்றது. இவர்களுக்கிடையிலும், எதிர்தரப்பின் மீதும் வன்முறை நிகழும் போது, வன்முறையை ஆதரிப்பவர்களாக இருப்பதே இதன் அரசியலாவும் எதார்த்தமாக உள்ளது.

➥குறுங்கு குழுவாத கோஸ்டி கானம் எப்படி யாழ் மையவாதத்தை பிரதேச எதிர்ப்புக்கு பயன்படுத்திவிடுகின்றது என்பதை அம்பலம் செய்யத போது, அசோக் தனது துண்டுபிரசுரத்தில் சிறுகுழந்தை போல "சமூக அக்கறையாளர்கள் அனைவரையும் பிரதேச, யாழ்ப்பாண மேலாதிக்கம் கொண்டவாகளாகக் காட்டமுனையும் போக்கு" பற்றி பேசுகின்றார். யாரெல்லாம் கோஸ்டிவாத வெற்றுப் பேப்பர்களில் கையெழுத்திட தயாராக இருக்கின்றனரோ, அவர்கள் அரசில் குறுங்குழுவாத தன்மை கொண்டவை. ஒரு பிரதேசவாத நடத்தைகளை ஆராய்வின்றி அங்கிகரித்து கையெழுத்திட்ட நிகழ்வே பிரதேசவாதத்தை உறுதி செய்கின்றது. தனிப்பட்டவர் என்ன நிலை என்பது அல்ல பிரச்சனை, அதன் ஒட்டமொத்த வெளிப்பாடு பிரதேசவாதமாக இருந்தால் கையெழுத்திட்டவர்களும் அதற்கு துனைபோபவர்களே. இங்கு "சமூக அக்கறையாளர்கள்" என்று மகுடம் சூட்டும் போது, அசோக் வன்முறையில் ஈடுபட்ட போது இந்த சமூக அக்கறை துங்கிக் கிடந்ததா? எனது அறிக்கையைத் தொடாந்து பிரதேசவாத உண்ணிகள் அம்பலமானதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து, அதை முடிமறைக்க எடுத்த பலதரப்பட்ட வேஷங்களும் முயற்சிகளை தொடர்ந்து, எந்த விதத்திலும் யாரும் சுயவிமர்சனம் செய்ய முன்வரவில்லை. சுயவிமாசனம் அற்ற போலி சமூக அக்கறை தொடரும் வரை, பிரதேசவாதத்தின் கறை கையெழுத்திட்ட அனைவருக்கும் இன்னமும் பொருந்தும். சமூக அக்கறையின் வெட்டுமுகம் என்பது கூட இதன் அடிப்படையில் போலித்தனமானது.

➥கொழுப்பு ரேடியோ செய்திகளில் கூட "இனம் தெரியாத பாசிட்டுகள் அசோக் மேல் தாக்குதல். அதற்கு எதிராக பரிசில் ஆர்ப்பட்ட பேரணி நடக்கவுள்ளது" என்ற பொய் பிரச்சாரத்தைக் கூட பல தளத்தில் முன்னைய புளாடின் பலத்தினால் கட்டமைக்க முடிந்தது. உண்மையில் கடந்தகாலத்தில் தம் உயிரையே தியாகம் செய்த போராடிய ஜனநாயகத்துக்கான போராட்டத்தையே இழிவுபடுத்தி கேவலப்படுத்துமளவுக்கு, கோஸ்டிவாதம் வரலாற்று போராட்டத்தையே தரம் தாழ்த்தியுள்ளனர். சொந்த புகழ் மற்றும் கோஸ்டிவாத்தை நிலைநிறுத்த வன்முறையை அரசியல் ரீதியாகவே மலினப்படுத்திதனர். கருத்து எழுத்து பேச்சு சுதந்திரத்துக்காக போராடிய போது உள் இயக்க படுகொலைகள், மாற்று இயக்க படுகொலைகள், அரசு படுகொலைகள் முதல் மக்கள் கூட்டத்தின் மேல் ஏவிவிடப்பட்ட வன்முறைகள் அனைத்தையும் மிதித்து, அதன் மேல்தான் கோஸ்டிவாதத்தின் சிம்மசனத்தை நிறுவிக் கொண்டனர்.

## இணையம் மூலம் வந்த கடிதம் ஒன்று சமுதாயத்தில் புரையோடியுள்ள வன்முறையையும் அதன் வக்கிரத்தையும் வெளிக் காட்டியுள்ளது

பாரிஸ்சில் தனிப்பட்ட இருநபருக்கு இடையில் நடந்த வன்முறையையும், அதை வைத்து நடத்திய பிழைப்பையும் அம்பலம் செய்த அறிக்கை (இது மேலே உள்ளது) ஒன்றை அனுப்பிய போது, வந்த இரண்டு ஈ-மெயில்கள் கீழ் உள்ளது. ஒரு கடிதம் அனுகுமுறை ரீதியாக வக்கிரமானதும் வன்முறை ரீதியானவை. இரண்டாவது சமுதாய விடையங்களில் இருந்து ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும் இந்த சமுதாய பிரியரிடம் இருந்து வந்தவை.

Sujet :
**(Kein Thema)**
Date :
09/07/02 21:07:56 GMT (heure d'été)
De :
JSinnatham
A:RAYAKARAN

உமக்கென்ன தலை கழண்டா போச்சு. ஈ மெயில் ஒருக்கா அனுப்பினால் கிடைக்கும் தானே

Sujet :
**AW: Pookoolam 10 is out now!!!**
Date :11/07/02 07:10:58 GMT (heure d'été)
De :suthakaran@witschi-partner.ch
A :RAYAKARAN@aol.com
*Envoyé via Internet (afficher l'en-tête)*
No Mail Please!please dont send a mail folowing adress: suthakaran@witschi-partner.ch

முதல் கடிதம் இரண்டு முறை அனுப்பியதால் மண்டை கழன்று போச்சோ என்று கூறியதன் மூலம், உண்மையில் வன்முறைக்கு எதிரான கருத்தை மறுப்பதைக் காட்டுகின்றது. இரண்டுமுறை அனுப்பியது என்பது வெவ்வேறு விடையங்களை கொண்டிருந்தது என்பது

*தொடர்ச்சி 2ம் பக்கத்தில்*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியற் தத்துவார்த்த புரட்சிகர விமர்சன ஏடு

சமர் - 31
பக்கங்கள் - 60
ஆவணி-2002

RAYAKARAN
32 RUE TROUILLET DEREL
92600 ASNIERES
FRANCE



கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் மாபெரும் சக்தியாக உருவாகும்.